# மன்னார்குடி மன்னார்குடிதான்

## அரிய செய்திகள் 1000




ராஜம் பதிப்பகம் Ebook Publishers

# மன்னார்குடி மன்னார்குடிதான்

# அரிய செய்திகள் 1000

மன்னார்குடி பானுகுமார்

ராஜம் பதிப்பகம் Ebook Publishers

# தாய் மண்ணே வணக்கம்

ஊர் உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே?

ஊருக்காக நீ என்ன செய்தாய்? ஊருக்காக நீ என்ன செய்தாய்?

உன்னை பிரசவித்த தாய் மண்ணனுக்காக நீ என்ன செய்தாய்?

தாய் மண் மன்னைக்காக நீ என்ன செய்தாய்? - மன்னார்குடி பானுகுமார்.

எமது “மன்னார்குடி வரலாறு” புத்தகத்தை -- ஆவணப் பெட்டகமாக, அதன் வடிவில் பதிவு செய்திருந்தோம்.



இந்தகால இளம் சமுதாயத்திற்காகவும், வேகமான அவசரமான பரபரப்பான யுகத்திற்கேற்ப, காலத்திற்கேற்ப - இணையதளத்தில் “மன்னையின் வரலாற்றை” நறுக்கோலை பாணியில் தற்போது பதிவு செய்திருக்கிறோம்.

ஊர் தோறும் நூலகம் தோறும் சென்று முனைந்து தேடியது, எப்போதே படித்தது, எங்கேயோ பார்த்தது, யாராலே கேட்டது, தோண்டித் துருவியது. செவிவழி அறிந்தது, பட்டறிந்தது, பகுத்தறிந்தது என எத்தனையே ஊற்றுக் கண்கள் இந்த தெளிந்த பாமணி நீரோடையின் வைப்பு நிதிகள்.

“பணம் போய் பணத்தைத் கூட்டி வரும்” என்பது பாமரனின் பொருளாதாரக் கோட்பாடு. ஆனால் ஒரு செய்தி கூட இன்னொரு செய்தியைக் கூட்டி வரும் என்பதை இந்த தேடல் வைபவத்தின் பயணத்தில் கண்டு கொண்டோம்.

ஒரு செய்தியே இன்னொரு செய்தியை சுமந்து ஒரே செய்தியாகவும் இதில் பதியப்பட்டிருக்கிறது. இரண்டையும் தனித்தனியே பிரித்துப் போட்டு எண்ணிக்கையை அதிகரித்துக் காட்டும் எண்ணம் நமக்கில்லை.



அரிய செய்தியும் அறியவேண்டிய செய்தியும் பல இடங்களில் கைகோத்து நடைபோட்டுக் கொண்டு இருக்கின்றன. இதில் இரட்டைக் கிளவியை அந்நியப்படுத்தும் அடுக்குத் தொடர்கள் அவை.

கூறியது கூறல் குற்றம் . கூறியது கூறல் குற்றம் ஆகாது. வேறொரு பொருளை விளக்குமாயின் “இவை இரண்டும் தமிழ்ச் சூத்திரங்க்தாம்.

நானே படித்து அறிந்து கொண்டது. இரண்டாவதைத் துணைக்கு வைத்துக் கொண்டு முதலாவது வகைக் குற்றம் புரிவதைப் பெரும்பாலும் தவித்திருக்கிறோம்.

இதில்........ஒரு படைப்பாளன், நல்ல தொகுப்புக் கலைஞனாகவும் இருக்க வேண்டும்.



திரைப்படத்திற்கு மட்டுமன்றி இந்தப் படைப்பிற்கும் “எடிட்டிங்” எனப்படும் தொகுப்புக் கலை இன்றியமையா ஒன்று.

வெட்டிவிடப்பட்ட வார்த்தைகளுக்குள்தான் வசீகரம் முளைக்கும் - தழைக்கும் -துளிர்க்கும்.

எனக்குள் எப்போதும் இருக்கும் கவித்தன்மை இந்த நூலில் அந்த தொகுப்பு வேலைக்குப் பெரிதும் கைகொடுத்தன.

தாய்மண்– மன்னையைப் பற்றி இன்னும் ஏராளமான செய்திகள் காகித அரங்கேற்றத்திற்காக காத்திருக்கின்றன.

எல்லாச் சிற்பங்களுக்கும் குடமுழுக்கு, நன்னீராட்டுப் பெருவிழா நடக்கும். என் விரல்கள் பத்தும் அவற்றைக் காவியமாக்கும், கனப்படுத்தும், மகுடஞ் சூட்டிக் மகிழ்விக்கும். கௌரவப்படுத்தும்.

நறுக்கோலை பாணியல் சொல்வது எனக்குப் பிடிக்கும். பின்லே என்ற ஒரு கிறிஸ்துவப் பள்ளியில் படித்ததால்– (விவிலியத்தைப் போல் எழுத) எனக்கு அது எப்போதும் கைகூடும்.

ஊரை விட்டு பல ஆண்டுகளுக்கு முன்னரே பல மைல்கள் கடந்து விட்டாலும் என் மனதில் மட்டுமல்ல உடலிலும் இன்றும் தாய் மண் நினைவுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

இந்த தொகுப்பின் மூலம் உலகெங்கும் இருக்கும் மன்னையின் மைந்தர்களை வாழ்த்தி வணங்குகிறோம். வாழ்க வளமுடன்.

நீங்களும் உங்கள் அன்புக் குடும்பமும் உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்க வளமுடன் என இறைநிலையோடு இணைந்து வாழ்த்தி மகிழ்கிறோம்.

வழக்கமான வணக்கங்களுடன்.
மன்னார்குடி பானுகுமார்

செங்கற்பட்டு

14.08.20019

# மன்னார்குடி மன்னார்குடிதான்

# அரிய செய்திகள் 1000

- தெய்வீகப் பேரொளியைச் சிந்தி எழில் சிறந்து விளங்கும் வட்டம் மன்னார்குடி.
- மன்னார்குடியை உருவாக்கிய முதலாம் இராஜராஜன் (கி.பி.1018) தொடங்கி ஏறக்குறைய 15 ஆம் - 17 ஆம் நூற்றாண்டு வரை, பல்வேறு மன்னர்கள் செய்வித்த கல்வெட்டுக்கள் மூலமாக பல அரிய செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம். இப்பதிவுகள் நிலைத்து இன்றும் மன்னார்குடிக்கு புகழைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றன.
- தமிழகத்தின் பெருமையை உலகெங்கும் பறைசாற்றுகின்ற ஆன்மீகப் பலகனியாகவும், கலைக் களஞ்சியமாகவும் மன்னார்குடி திகழ்கிறது.
- ''இந்தியாவிலேயே நேர்த்தியாகக் கட்டமைக்கப்பட்ட நகரங்களில் ஒண்ணு மன்னார்குடி.

- ***மன்னார்குடி சிறப்புகள்*** -**இந்தியாவின் பெரிய தெப்பக்குளம்** - **சிறப்புகள் மற்றும் பிரபலங்கள்** -**நிர்வாகம் மற்றும் தகவல்கள்**- **பிரபலமான கடைகள்** - **மன்னார்குடி பொருளாதாரம்** - **மன்னார்குடி ரயில் நிலையம்** - **மன்னார்குடி வரலாறு** - **ஸ்ரீ ராஜகோபால சுவாமி திருக்கோவில்**




- உலகில் சிறந்த நாடு என்றால் அது இந்தியாவாகத்தான் இருக்கும். இந்திய நாட்டில் சிறந்த நாடு என்றால் தமிழகம்தான் சிறப்பாக இருக்கும். தமிழ்நாடு என்றால் (தஞ்சை பழைய மாவட்டம்) திருவாரூர் மாட்டம் சிறப்பாக இருக்கும். திருவாரூர் மாவட்டம் என்றால் மன்னார்குடி குறிப்பாக சிறப்பாக இருக்கும் இந்த மண் பல சிறப்புகளை உடையதால், "**மண்ணில் மிக்கது மன்னார்குடி**" என்ற பழமொழி தொடர்ந்து வழக்கத்தில் இருக்கிறது.

- தேசப்பற்றுள்ளவர்கள் அதிகமிருந்த பகுதி மன்னார்குடியாகும். எனவே, தேசிய எழுச்சி எப்போதெல்லாம் எங்கெல்லாம் தொடங்கப்பட்டாலும் உடனே அது மன்னார்குடியில் எதிரொலிக்கும்.

- மன்னார்குடியைச் சுற்றிலுமுள்ள கிராமங்களும் ஊர்களும் மன்னையின் பழமைக்குப் பழமை சேர்க்கச் சான்றுகளைத் தருகின்ற ஊர்களாக அமைந்து உள்ளன.

- நறுமணமிக்க செண்பக மரங்கள் நிறைந்த காடாக இவ்வூர் அக்காலத்தில் விளங்கியுள்ளது பின்னர் காடுகளை அழித்து நிலந்திருத்தி நாடாக்கி உள்ளனர். மன்னார்குடிக்கு செண்பகாரணயம் என்ற பெயருமுண்டு.
- வண்டுவராபதி மன்னன் என்னும் தொடர் உள்ள ஆழ்வார் பாசுரங்கள் இத்திருத்தலத்தையே குறிப்பிடுவதாக அந்த ஆசார்யன் கருதியதாகச் சொல்லுவர்.
- வண்டுவராபதி என்னும் தொடர் வண்டு வரா 1. வண் + துவராபதி என்றும் 2. வண்டு + வராத + பதி என்றும் பொபளில் வரலாம்.
- இத்திருப்பதிக்கு வண்டுவரா(த)பதி என்றும் பெயர் பொருந்தும். இதைக் குறிக்கவே ஆழ்வார் இத்தொடரை அமைத்திருக்க வேண்டும் என்று மணவாள மாமுனிகள் கருதி இருக்க வேண்டும்.

- பாமணி ஆறு ஒரு தாயோட கைபோல அரவணைச்சு இருக்க, மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி அமைக்கப்பட்ட தெருக்கள், வடக்கில் இருந்து தெற்கு நோக்கி அமைக்கப்பட்ட வீதிகள்னு கச்சிதமா அமைக்கப்பட்ட ஊர் மன்னார்குடி.



-

- மன்னார்குடியைப் பற்றி ஏகப்பட்ட பழமொழிகளும் அடைமொழிகளும் உண், 1. செண்பகாரண.யம் 2. வண்டுவராபதி 3. குலோத்துங்கச் சோழ விண்ணகரம் 4. தென்னத்து துவாரகை 5. வாசுதேவபுரி 6. மண்ணில் மிக்கது மன்னார்குடி 7. மறையோர் மிகுந்தது மன்னார்குடி 8. மன்னர்கள் கோயில் 9. கோயில் பாதி குளம் பாதி 10. பென்சனர் நகரம் 11. தென்னாட்டு பர்தோலி.

தொடரும்...................

- ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமைவாய்ந்த சமணத்திருத்தலம் மன்னார்குடி.
- மன்னார்குடியைப் பற்றிய முதல் வரலாற்று நூல், 15 அத்யாயங்களில், 316 பக்கங்களில், 302 தலைப்புகளில், ஒரு வரலாற்று ஆவணப் பெட்டகமாக, 2009 ஆம் ஆண்டு மன்னார்குடி பானுகுமார் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது.




- மன்னார்குடி வரலாற்றை முதலில் பதிவு செய்த ஆசிரியர் பானுகுமார் முகவரி.- Email id.banukumar.v@gmail.com



- மன்னார்குடியைப் பற்றிய பல செய்திகள் F.R. HIMINGWEY என்ற ஆங்கிலேயர் தொகுத்த செகட்டிலும் காணமுடி கிறது.

- இந்தியாவின் "முதல் நடமாடும் நூலகம்", 1931-ம் ஆண்டு அக்போபர் 21 அன்று, மன்னார்குடி மேலவாசல் கிராமத்தில் துவக்கப்பட்டது. 

- இயற்கை வனப்பில் மன்னார்குடி எழில் கொஞ்சுகிறது. சுதந்திரப் போராட்டத்தால் இந்தியாவின் புனித நகரமாகிறது.
- பேரறிஞர் அண்ணா மன்னார்குடியில் பேசும் போதெல்லாம் காந்தியடிகளால் தென்னாட்டு பர்தோலி என்றழைக்கபட்ட மன்னார்குடி" என்று இந்த ஊரைப் பாராட்டி மகிழ்வார்கள்.
- மன்னார்குடி நெடிய வரலாற்றுப் பின்னனியுடைய சிறப்பிற்குரிய பூமியாகும்..
- இந்திய - தமிழக வரலாற்றுப் பக்கங்களை உள்ளடக்கிய ஊர் மன்னார்குடியாகும்.

- மா. இராஜமாணிக்கனார் எழுதி வெளியிட்டுள்ள "கலவெட்டுகளில் அரசியல் சமயம், சமுதாயம்" என்ற

புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகள் ஏராளம் உள்ளன.

- மன்னார்குடியின் வரலாற்றை மானுடத்திற்கு தெரிவித்துக் கொண்டிருப்பவை இங்குள்ள கல்வெட்டுக்கள ஆகும். இவற்றை பாதுகாக்க வேண்டியது நமது கடமை.
- முன்பொரு காலத்தில் மன்னார்குடி நகரப் பகுதி காடாக இருந்துள்ளது.
- தற்பொழுதுள்ள மன்னார்குடி நகரப் பகுதியின் அடியில் ஆசியாக் கண்டத்திலேயே மிக அதிகமான நிலக்கரி படிவம் இங்குதான் உள்ளது. நெய்வேலியில் உள்ளதைவிட 6 அல்லது 7 மடங்கு அதிகமாகும்.
- தற்பொழுதுள்ள மன்னார்குடி நகரப் பகுதியின் அடியில் ஆசியாக் கண்டத்திலேயே மிக அதிகமான நிலக்கரி படிவம் இங்குதான் உள்ளது. நெய்வேலியில் உள்ளதைவிட 6 அல்லது 7 மடங்கு அதிகமாகும்.
- நெய்வேலியில் உள்ள நிலக்கரி அளவு 3000 மில்லியின் டன்கள். ஆனால் மன்னார்குடியில் 20000 மில்லியன் டன் நிலக்கரி புதைந்துள்ளது.
- மன்னார்குடி சோழ மன்னர்களின் சொர்க்க பூமியாகும்.
- மன்னார்குடி நாயக்க மன்னர்களில் கலைக் கூடமாக விளங்கியது.
- தொல்லியல் துறை 2006 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள "திருவாரூர் மாட்ட தொல்லியல் வரலாறு" என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகள் ஏராளம் உள்ளன.
- மன்னார்குடி பாடல்பெற்ற கோயில்களும் குளங்களும் சூழ்ந்த புண்ணிய பூமியாகும்.
- இந்தியாவில் முதல் முதியோர் கல்வி தொடங்கிய ஊர் மன்னார்குடியாகும்.

- சித்தர்களும், தீட்சதர்களும், ஞானிகளும், அரசியல் சாணக்கியர்களும், பகுத்தறிவாதிகளும், சான்றோர்களும், புகழ் பெற்ற படைப்பாளிகளும், கலைஞர்களும் வாழ்ந்த, வாழும் ஊர் மன்னார்குடியாகும்.
- இந்தியாவில் முதல் நடமாடும் நூலகம் தொடங்கிய பூமியாகும்.
- மன்னார்குடியின் தொன்மை வரலாறு அங்குள்ள நில அடுக்குகளால் அறிய முடிகிறது.
- கனிம வளங்களும், வண்டல் மண் படிந்த பகுதிகளும் ஊரை வளப்படுத்தும் காரணிகளாகும்.
- மன்னார்குடி அனைத்துச் சிறப்பும் பெற்ற இடமாகும். இதனைச் சுற்றி உறரித்தாநதி, பாமணி, திருக்களார், வடுவூர் போன்ற சுற்றுலாத் தளங்கள் உள்ளன.
- மகாத்மா காந்தி முதல் பேரறிஞர் அண்ணா வரை அரசியல்வாதிகள் மட்டுமல்ல, ஆன்மீகவாதிகள், விஞ்ஞானிகள் உலகத் தலைவர்கள், சித்தர்கள் போன்ற பலரும் பாராட்டிய ஊர் மன்னார்குடி.

- மன்னார்குடியின் தொன்மைப் பெயர் இராசமாபுரம்.
- மன்னார்குடி பிற நகரங்களுடன் சாலை மூலம் நன்கு இணைக்கப்பட்டுள்ளது.

- கோட்டையில் முதலில் தேசியக் கொடியை ஏற்றிய பாஸ்யம்  அய்யங்கார் பிறந்த பூமியாகும்.

- மன்னார்குடி திருவாருர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- கொன்னக்கோல் இசை பிறந்த நகரம் மன்னார்குடி.
- பாரதியாருக்கு அடைக்கலம் தந்த (ஆங்கிலேயர் தேடி வந்தபோது) பூமியாகும்.
- மன்னார்குடி சமணர் கோயிலில் புத்தரின் சிற்பம் ஒன்று இருந்ததாகவும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.
- மன்னார்குடியின் வரலாற்று பெயர்கள் -- ராஜாதி ராஜ சதுர்வேதி மங்கலம் - குலோத்துங்க சோழ விண்ணகரம் - ராஜேந்திர சோழ விண்ணகரம் - மன்னார்கோயில் - சென்பகாரண்யா க்ஷேத்திரம்-சுத்தவல்லி வளநாடு- வண்டுவராபதி - வசுதேவபுரி - தக்ஷின துவாரகை
- வேதாரண்யம் விளக்கழகு, திருவாரூர் தேரழகு, திருவிடைமருதூர் தெருவழகு, மன்னார்குடி மதிலழகு என்ற முதுமொழி மூலமாக மன்னார்குடியின் பெருமையை உணரமுடியும்.
- மன்னார்குடியின் அமைவிடம் 10.67°N 79.43°E ஆகும். கடல் மட்டத்தில் இருந்து இவ்வூர் சராசரியாக 6 மீட்டர் (19 அடி) உயரத்தில் இருக்கின்றது.

- தமிழகத்தின் பழமையான பள்ளிக் கூடங்களில் ஒன்றான மன்னார்குடி பின்லே பள்ளி (வயது 170).



- மன்னார்குடியில் இருந்து கும்பகோணம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, ஒரத்தநாடு ஆகிய நகரங்களுக்கு மாநில நெடுஞ்சாலைகள் மூலம் போக்குவரத்து நடைபெறுகிறது.
- காவிரியின் கிளை ஆறுகள் கோரையாறு, முல்லையாறு, பாமனி ஆறுகள் மன்னார்குடியை வளப்படுத்தி வருகிறது.
- மன்னார்குடியில் இருந்து தமிழ்நாட்டின் பல நகரங்களுக்கு பேருந்து வசதி உள்ளது. சென்னை, கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், மதுரை, பழனி, ராமேஷ்வரம், கம்பம், ஈரோடு, வேலூர், புதுச்சேரி ஆகிய நகரங்களுக்கு நேரடி பேருந்து வசதிகள் உள்ளன.
- மன்னார்குடி வட்டத்தின் பெரும்பாலான ஊர்ப் பெயர் முடிவுகள் இயற்கை நில அமைப்பினைக் காரணமாகக் கொண்டுள்ளன.
- மன்னார்குடி வட்டத்தின் இயற்கை நில அமைப்பிற்கு ஏற்ப குடி. ஊர். புரம் என்னும் முடிவுகளைப் பெற்றிருக்கிறது.
- மன்னார்குடி வட்டம் எல்லா வகையான இயற்கை அமைப்பினையும் பெற்றிருப்பதால் அதற்கேற்ப, எல்லாவிதமான முடிவுகளையுமே கொண்டிருக்கிறது.
- மன்னார்குடி வட்ட ஊர்ப் பெயர் முடிகின்ற அனைத்தையும் இருவகையாகப் பிரிக்கலாம். 1. இயற்கைப் பெயர்கள் (இயற்கைக் கூறுகள்) 2. செயற்கைப் பெயர்கள் (செயற்கைக் கூறுகள்.)

- மன்னார்குடி வட்டத்தில் இயற்கை பெயர்களை கொண்டு முடிவது. எட்டு. செயற்கை பெயர்களைக் கொண்டு எட்டும் அமைந்துள்ளன.
- மன்னாகுடி வட்டத்தில் இயற்கை பெயர்கள் எட்டு.1.ஊர். 2. குடி. 3. காடு 4. கோட்டம் 5. குளம் 6. வேலி 7. குறிச்சி 8. நத்தம்.
- மன்னார்குடி வட்டத்தில் செயற்கை பெயர்கள் எட்டு. 1. புரம், மங்கலம் 3. சேரி 4. கோட்டை 5. கோட்டம் 6. கோயில் 7. அக்ரஉறாரம் 8. வாசல்.
-
- மன்னார்குடி ரயில் மூலமும் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து சென்னை, கோயம்புத்தூர், ஜெய்பூர், திருப்பதி ஆகிய நகரங்களுக்கு விரைவு ரயில்கள் செல்கின்றன. திருச்சி வழியாக மானாமதுரைக்கும், திருவாரூர் வழியாக மயிலாடுதுறைக்கும் பயணிகள் ரயில் போக்குவரத்து நடைபெறுகிறது.




- இந்திய 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 61,588 மக்கள் இங்கு வசிக்கின்றார்கள். இவர்களில் 50% ஆண்கள், 50% பெண்கள் ஆவார்கள்.
- இந்திய 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மன்னார்குடி மக்கள் தொகையில் 9% ஆறு வயதுக்குட்பட்டோர் ஆவார்கள்.
- நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்த பெரியோர்கள் மன்னார்குடியில் வாழ்ந்தமையால் ராஜாதி ராஜ சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்படுகிறது.
- செண்பக மரங்கள் அடர்ந்த காடுகள் நிறைந்து காணப்பட்டதனால் சென்பகாரண்யா க்ஷேத்திரம் எனவும் மன்னார்குடி அழைக்கப்படுகிறது.
- சுதந்திரப் போரில் மன்னார்குடியின் பங்கு பெருமைப்படக் கூடியதாகும்.

- குலோத்துங்க சோழன் மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபாலன் கோயிலை அமைத்தபடியால் குலோத்துங்க சோழ விண்ணகரம் என்றும் அழைக்கப்படுகிறது.
- மன்னார்குடியில் ஸ்ரீ ராஜகோபாலன் கோயில் கொண்டிருப்பதால் ராஜமன்னார்குடி என்றும் அழைக்கப்படுகிறது.
- மன்னர்கள் கோபாலனுக்கு கோயில் கட்டியதால் மன்னார்கோயில் என்றும், மன்னார்குடி அழைக்கப்படுகிறது.
- மன்னார்குடிக்காரர் ஊத்துக்காடு வெங்கட சுப்பையர் (16 அக்டோபர் 1700 - 1765) 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கருநாடக இசைக் கலைஞராவார். அலைபாயுதே.. கண்ணா... இவர் இயற்றிய பாடல்களில் ஒன்று .
- பக்கிரியா பிள்ளை 1866(ஆம் ஆண்டு, மன்னார்குடியில் பிறந்தார். இவர் கொன்னக்கோல் இசைக் கலையில் சிறந்து விளங்கினார். தவில், மிருதங்கம் எனும் தோல் கருவிகளை வாசிப்பதில் வல்லவர்; நட்டுவாங்கம், வாய்ப்பாட்டுக் கலைகளிலும் தனது திறமைகளை வெளிக்காட்டியவர்1866 - 1937)
- **மன்னார்குடி சாம்பசிவ பாகவதர் 1912 ஆம் ஆண்டு, மன்னார்குடியில் பிறந்தார். இவர் ஒரு கருநாடக இசைக் கலைஞராவார்.**

- இந்திய 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மன்னார்குடி மக்களின் சராசரி கல்வியறிவு 79% ஆகும், இதில் ஆண்களின் கல்வியறிவு 84%, பெண்களின் கல்வியறிவு 74% ஆகும். இது இந்திய தேசிய சராசரி கல்வியறிவான 59.5% விட கூடியதே.

- **தி. ஜானகிராமன் 1921 ஆம் ஆண்டு, மன்னார்குடியை அடுத்து தேவங்குடியில் பிறந்தவர். ஒரு புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர்.**



- **தி.ஜா என்றும் அழைக்கப்படுபவர் தி. ஜானகிராமன். *சக்தி வைத்தியம்* என்ற சிறுகதைத் தொகுப்புக்காக தமிழுக்கான சாகித்ய அகாதமி பரிசு பெற்றவர்.**
- **தமிழின் மிகப்புகழ்பெற்ற நாவல்களான தி.ஜா இசையை எழுத்தாக்கிய அபூர்வ எழுத்தாளர். பத்து வருடங்கள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிவர், பின்பு அகில இந்திய வானொலியில் பணியாற்றி ஓய்வு பெற்றார்.**
- மன்னார்குடியில் மாணவர்களுக்கு தேசிய மேல்நிலைப் பள்ளி மற்றும் பின்லே மேல்நிலைப் பள்ளியும் , மாணவிகளுக்கு தூய வளனார் பெண்கள் மேல் நிலைப் பள்ளியும் உள்ளது , இதைத் தவிர பல நடுநிலை பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் , தனியார் பள்ளிகளும் உள்ளன.
- இவ்வூர் ராஜ மன்னார்குடி என்றழைக்கப்டுகிறது. சிதம்பரத்திற்கு அருகில் உள்ள காட்டுமன்னார்குடியில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக இவ்வூர் ராஜ மன்னார்குடி என்று அழைக்கப்படுகிறது.

- **மன்னார்குடியில் பொருளாதாரம் விவசாயம் இங்கு நெல், பருத்தி, உளுந்து, கரும்பு, ஆகியவை அதிகமாக சாகுபடி**




**செய்யபடுகிறது.**

- **அந்நிய நாட்டினர் ஆதிக்க ஆசையுடன் காலை வைத்த போதெல்லாம் இம் முயற்சிகளை முளையிலேயே கிள்ளி எறிந்து அவர்களை முறியடித்ததில் மன்னார்குடி மக்களுக்கு பெரும் பங்கு உண்டு.**
- **பாமனியாறு, கோரையாறு, மற்றும் கிணற்றுப்பாசனத்தை நம்பியே இங்கு விவசாயம் நடைபெறுகிறது.**
- மன்னார்குடியில் புகழ்மிக்க கோவில்கள் பல உள்ளன. அவற்றுள் மன்னார்குடி ராஜகோபாலசாமி திருக்கோவில் உலகச் சிறப்பு வாய்ந்தது.இக்கோவில் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது.



- குடி, கோட்டை, ஊர், கோட்டம், குறிச்சி, நத்தம், வேலி, குளம், புரம், காடு, மங்கலம், சேரி, மேடு, கோயில், அக்ரகாரம், வாசல், பதினாறு வகையான நிலம் மற்றும் அமைப்பு சார்ந்த

பெயர்களைக் கொண்ட கிராமங்களை உள்ளடக்கியது மன்னார்குடி.

- மன்னார்குடி வானிலை ஆராய்ச்சி ஆர்வலர் தகட்டூர்_ந_செல்வகுமார் அவர்களின் வானிலை தகவல்களை வழங்கும் 'நம்ம உழவன் (NAMMA UZHAVAN)' செயலி. ஆண்ட்ராய்டு செயலி:https://play.google.com/store/apps/details…iOS செயலி:https://itunes.apple.com/us/app/namma-uzhavan/id1405611708
- கரிச்சான் குஞ்சு அவர்களின் நூற்றாண்டு தொடக்கம் இன்று. (இயற்பெயர் : ஆர்.நாராயணசாமி) (ஜூலை 10, 1919 - ஜனவரி 17, 1992). 
- தமிழ் எழுத்தாளர், நாவலாசிரியர், சிறுகதையாசிரியர், கட்டுரையாசிரியர், மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர்கரிச்சான்_குஞ்சு.
- 1948 முதல் 1977 வரை கரிச்சான் குஞ்சு அவர்கள், மன்னார்குடி தேசிய_மேல்நிலைப்_பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.
- வறுமையிலும் வாழ்வைக் கொண்டாடிய கரிச்சான்குஞ்சு : ரவி சுப்ரமணியன்; bit.ly/1SVKj92
- படைப்பிலக்கியவாதி கரிச்சான் குஞ்சு : சு.இரமேஷ் http://www.dinamani.com/weekly_suppleme…/…/article854543.ece
- தமிழகத்தில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலேயே முதன்முதலாக 2012-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், மன்னார்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், மருத்துவர் சீனிவாசராகவன் அவர்களின் தலைமையிலான மருத்துவக்குழு (பாலாஜி, அப்துல் கவி, சரவணன், அருமைக்கண்ணன், சௌந்தரராஜன்), தென்பரையைச் சேர்ந்த மாரியப்பன் என்பவருக்கு வெற்றிகரமாக இடுப்பு மூட்டு

மாற்று அறுவை சிகிச்சை (HIP REPLACEMENT SURGERY) செய்தது குறிப்பிடத்தக்கது.

- ஆயிரம் படங்களுக்கு மேல் நடித்தவர் சாதனை நாயகி ஆச்சி.மனோரமா ஐந்து முதலமைச்சர்களுடன் நடித்த பெருமையும் இவருக்குண்டு.
- அதிகாரப் பூர்வமாக சில நூறு தியாகிகளை மன்னார்குடி கொண்டிருந்தாலும் பலநூறு தியாகிகள் நமது நாட்டு விடுதலைக்கு உறுதுணையாக இருந்துள்ளனர்.

- #மன்னார்குடியில் பிறந்த "உலக சினிமாக்களின் கின்னஸ் பெண்மணி - மனோரமா ஆச்சி"யின் பிறந்த தினம் இன்று (மே 26, 1943).
- மனோரமா ஆச்சியின் இயற்பெயர் கோபிசாந்தா.
- பிறந்தது #மன்னார்குடி என்றாலும், ஆச்சியை ஆதரித்து, வளர்த்து, ஆச்சியின் திறமைகளை கண்டறிந்து உலகறியச் செய்த ஊர் #காரைக்குடி அருகே உள்ள #பள்ளத்தூர் ஆகும்.



- "கடந்த கால நினைவுகள்" என்ற பெயரில் ஆச்சியைப் பற்றி குங்குமம் இதழில் 25 பாகங்களாக வெளிவந்த தொடரின் இணைப்பு: http://www.lakshmansruthi.com/cineprofiles/manorama01.asp
- உலக சினிமாக்களின் கின்னஸ் பெண்மணி: http://bit.ly/1YYFuN0

- சுயமரியாதை இயக்கம் நடத்திய “முதல் மாகாண சமதர்ம மாநாடு”, 84 ஆண்டுகளுக்கு முன்பு இதே தினத்தன்று “மன்னார்குடி”யில் நடைபெற்றது (மார்ச் 4, 1934).
- இந்நிகழ்வு பற்றி மார்ச் 11, 1934 தேதியிட்ட “புரட்சி” ஏட்டின் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- சாகித்ய அகாதமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர் தி.ஜானகிராமன் பிறந்த தினம் இன்று (பிப்ரவரி 28).
- மன்னார்குடி வட்டம் தேவங்குடியில் பிறந்த தி.ஜானகிராமன் (தி.ஜா) அவர்கள் சிறுகதை, நாவல், பயணக்கட்டுரை, மொழிபெயர்ப்பு, நாடகம் என பல துறைகளில் சிறந்து விளங்கியவர்.
- பத்து வருடங்கள் பள்ளியாசிரியராகப் பணியாற்றிய பின் அகில இந்திய வானொலியில் பணியாற்றி ஓய்வு பெற்றார்.
- **தி. ஜானகிராமன்** இவர் 1945 - 1960 வரை சென்னை வானொலி நிலையத்தில் 14 ஆண்டுகள் கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராகப் பணியாற்றியவர்.
- **தி. ஜானகிராமன்** 1968 - 1974 வரை தில்லி வானொலி நிலையத்தில் உதவித் தலைமை கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராகப் பணிபுரிந்தவர். பின்பதவி உயர்வு பெற்று 1974 - 1981 வரை தலைமைக் கல்வி அமைப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றயவர்.
- **தி. ஜானகிராமன்** இவர் வானொலி நிலையங்களில் பணியாற்றியபோது அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து, பிரான்ஸ், மலேஷியா முதலிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்.

- ஸ்ரீராஜகோல சுவாமி கோவில் குலோத்துங்க சோழனால் சுண்ணாம்புக் கலவை மற்றும் செங்கல் கொண்டு கிபி 1070-1125 இல் கட்டப்பட்டது. மன்னார்குடி ஸ்ரீ ராஜாதி ராஜா சதுர்வேதி மங்கலம் என குறிப்பிடப்படுகிறது, மேலும் மன்னார்குடி நகரம் கோவில் சுற்றி வளரத் தொடங்கியது.
- ஸ்ரீராஜகோல சுவாமி கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் பங்குனிப் பெருவிழா 18 நாட்களும், அதைத் தொடர்ந்து, 12 நாள்கள்

நடைபெறும் விடையாற்றி விழா கிருஷ்ண தீர்த்த தெப்ப




உத்சவத்துடன் நிறைவடையும்.

- ஸ்ரீராஜகோல சுவாமி கோயிலில் ஆண்டுதோறும் ஆடிப்பூரத்தன்று செங்கமலத் தாயார் தேரில் எழுந்தருளும் உள்பிரகார தேரோட்டம் நடைபெறும்.
- செங்கமலத் தாயார் தேர் தேர் கடந்த 1892-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதாக அறியப்படுகிறது. 2014ஆம் ஆண்டு மொத்தம் ரூ.26.50 லட்சத்தில் புதிய தேர் செய்யும் பணி நிறைவுற்றது.[2]
- ***ராஜேந்திர சோழனின் மகன் இராஜாதிராஜ சோழனால் ராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம் என்ற அக்ராஹரமாக உருவாக்கப்பட்ட ஊர். மன்னார்குடி சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள் மற்றும் மராத்தியர்கள் ஆட்சி செய்த ஊர்.***
- ***மூன்றாம் ராஜ ராஜ சோழன், மூன்றாம் ராஜேந்திர சோழன், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், குலசேகரபாண்டியன், அச்சுத தேவ ராயன், விஜயநகர மன்னர்கள், மராத்திய மன்னர்கள், ஆகியோர் மன்னார்குடி மற்றும் ராஜகோபால சுவாமி கோவில் வளர்ச்சிக்கும் பங்களித்துள்ளனர்.***
- **மனோரமா ஆச்சி 26.5.1937 ஆம் ஆண்டு ராஜமன்னார்குடியில் வசதியான குடும்பத்தில் பிறந்தவர்.**

- **மனோரமா ஆச்சியின் பெற்றோர் காசி 'கிளாக்' உடையார் மற்றும் ராமாமிர்தம்.**
- **மனோரமா தமிழ்நாடு மாநிலத்தில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ராஜமன்னார்குடியில் வசதியான குடும்பத்தில் பிறந்தவர்.**
- **மனோரமா தந்தை ஒரு சாலை ஒப்பந்தக்காரராகப் பணியாற்றியவர். தந்தை காசி கிளாக்குடையார் மனோரமாவின் தாயின் தங்கையை இரண்டாம் தாரமாகத் திருமணம் புரிந்தார். இதனை அடுத்து கணவனால் புறக்கணிக்கப்பட்ட இராமாமிருதம் மனோரமாவுடன் வறுமையின் காரணமாக காரைக்குடி அருகே உள்ள பள்ளத்தூர் என்ற ஊருக்கு குடிபெயர்ந்தார்.**
- **மனோரமா 6 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். அங்கு அவர்கள் பலகாரம் சுட்டு விற்பனை செய்து வாழ்க்கையைத் தொடங்கினார்கள்.**
- **மனோரமா தனது 12ஆவது அகவையில் நடிப்புத் தொழிலில் இறங்கினார்.**
- **மனோரமா “பள்ளத்தூர் பாப்பா” என அழைக்கப்பட்டார்.**
- 
- மன்னார்குடி ராஜகோபாலசாமி திருக்கோவிலி ருந்து சற்று தூரத்தில் தீர்த்தக்குளம் இருக்கிறது. கிருஷ்ணனின் தரிசனம் வேண்டிய முனிவர்கள் தவமிருந்த குளம் இது. இதனை யமுனை

நதியாகவே கருதுவதால், “ஹரித்ரா நதி' என்றே அழைக்கிறார்கள்.



- ஹரித்ரா நதி' குளமாக இருந்தாலும் நதியின் பெயரில் அழைக்கப்படும் தீர்த்தம் இது. ஆனி பௌர்ணமியில் இந்த தீர்த்தத்தில் தெப்பத்திருவிழா நடக்கிறது.
- **மன்னார்குடி ராசகோபால சுவாமி கோயில்** மன்னார்குடி, தமிழ்நாடு, இந்தியாவில் அமைந்துள்ள ஒரு வைணவக் கோயில் ஆகும். இங்கு உறையும் ராசகோபாலசுவாமி கிருஷ்ணரின் ஒரு வடிவமாக அறியப்படுகிறது.
- இந்தக் கோவில் 23 ஏக்கர் (93,000 மீ 2) பரப்பளவில் பரவியுள்ளது. குருவாயூரைச் சேர்த்து இந்த கோவிலை தட்சிண துவாரகை (தெற்கு துவாரகா) என இந்துக்கள் கூறுகின்றனர்.
- ஸ்ரீ ராஜகோபாலசுவாமி கோயிலில் உறையும் ராஜகோபால சுவாமியின் திருஉருவத்தின் உயரம் 12 அடி (3.7 மீ) ஆகும்.
- ஸ்ரீ ராஜகோபாலசுவாமி கோயிலில் ஆலயம் நுழைவு வாயிலில் மழை நீர் சேகரிக்கப்பட ஒரு பெரிய தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.
- ஸ்ரீ ராஜகோபாலசுவாமி திருக்கோவில் வளாகத்தில் 16 கோபுரங்களுடன் (கோபுரம் நுழைவாயில்), 7 தூண்கள் (பிராகாரத்தில்), 24 சன்னதிகள், ஏழு மண்டபங்கள் (அரங்குகள்) மற்றும் ஒன்பது புனித தீர்த்தங்கள் (கோவில் குளங்கள்) உள்ளன.

* *ஸ்ரீ ராஜகோபால சுவாமி திருக்கோவில் மூலவர்: வாசுதேவப்பெருமாள்;*
* *தாயார்: செங்கமலத்தாயார் (செண்பகலெட்சுமி, படிதாண்டாப் பத்தினி)உற்சவர்: ராஜகோபாலர் ஸ்தலவிருட்சம்: செண்பகமரம்தீர்த்தம்: ஹரித்ராநதி, துர்வாச தீர்த்தம், திருப்பாற்கடல், கோபிகா தீர்த்தம், சங்கு தீர்த்தம், சக்கர தீர்த்தம்.ஆகமம்: பாஞ்சராத்ரம் விமானம்: சுயம்பு*
* *ஸ்ரீ ராஜகோபால சுவாமி திருக்கோவில் விமானம்; புராணபெயர்: ராஜமன்னார்குடி*

*121. ஸ்ரீ ராஜகோபால சுவாமியின் திருஉருவத்தின் உயரம் 12 அடி (3.7 மீ) ஆகும். திருக்கோவில் வளாகத்தில் 16 கோபுரங்களுடன் (கோபுரம் நுழைவாயில்), 7 தூண்கள் (பிராகாரத்தில்), 24 சன்னதிகள், ஏழுமண்டபங்கள் (அரங்குகள்) மற்றும் ஒன்பது புனித தீர்த்தங்கள் (கோவில்குளங்கள்) உள்ளன. உற்சவர் சிலை சோழர் காலத்தினைச் சேர்ந்த ஒரு வெண்கலச் சிலை ஆகும்.*

- *ஸ்ரீ ராஜகோபால சுவாமி திருக்கோவில் ஒரு வைணவக் கோயில் ஆகும். இந்தக் கோவில் 23 ஏக்கர் பரப்பளவில் பரவியுள்ளது. குருவாயூரைச் சேர்த்து இந்த கோவிலை தட்சிண துவாரகை (தெற்கு துவாரகா) என இந்துக்கள் கூறுகின்றனர்.*

- *கோவில்பாதி, குளம்பாதி' என்ற பழமொழியை தனக்கே உரித்தாக்கிக்கொண்ட ஊர் மன்னார்குடி.*

- *கோபிலர், கோப்பிரளயர் என்ற இரண்டு முனிவர்களுக்கு பரந்தாமன் கண்ணனாக காட்சி அளித்தார் என்றும், குளத்தில் கண்ணன் கோபிகையருடன் ஜலக்கிரிடை செய்த போது அந்த கன்னிகையரின் உடலில் பூசிய மஞ்சள் (ஹரித்ரா) மற்றும் நறுமணப் பூச்சுப்பொருட்கள் இக்குளத்தின் தீர்த்தத்தில் படிந்தபடியால் இக்குளம் ஹரித்ரா (மஞ்சள்) என்ற காரணப்பெயரில் அழைக்கப்படுகிறது.*

- *ஹரித்ராநதி குளம் காவிரியின் மகள் என்றும், 66 கோடி புண்ணிய தீர்த்தங்கள் ஒன்று சேர்ந்தது என்றும் புராண வரலாறு கூறுகின்றன.*

- *ஹரித்ராநதி குளத்தில் வைகாசி, ஐப்பசி, மாசி, பங்குனி மாதங்களிலும் அமாவாசை, பவுர்ணமி, கிரகண காலங்களிலும் ரோகிணி, திருவோண நாட்களிலும் நீராடினால் கண்ணபிரானின் திருவருள் கிடைக்கும் என்றும், மாசி மாதம் முழுவதும் நீராட முடியாமல் போனாலும் கடைசி மூன்று நாட்களாவது நீராடினால் சிறப்பு உண்டு என்றும் கூறுகிறார்கள்.*

- *ராஜகோபால சுவாமிக்கு தினமும் திருமஞ்சன தீர்த்தம் ஹரித்ராநதி குளத்தில் இருந்து தான் எடுத்துச்செல்கிறார்கள்.*

***மற்ற புண்ணிய தலங்களில் 1 கோடி ஆண்டுகள் இருந்து பெறும் பலனை, ஹரித்ராநதி கரையில் ஒரு ஆண்டில் அடையலாம் என்று புராணம் கூறுகிறது. பிருகு முனிவர் வேண்டுகோளுக்கு இணங்கி காவிரியை பெரிய குளமாக தேக்கி அதில் ராஜகோபாலன் ஜலக்கிரிடை செய்ததாக கூறப்பட்டுள்ளது.***

- ஸ்ரீ ராஜகோபாலசுவாமி உற்சவர் சிலை சோழர் காலத்தினைச் சேர்ந்த ஒரு வெண்கலச் சிலை ஆகும்.
- ஸ்ரீ ராஜகோபாலசுவாமி அருகில் உள்ள குளம் 1,158 அடி நீளமும், 837 அடி அகலமும் கொண்டுள்ளது; இது ஹரித்திராந்தி என அழைக்கப்படுகிறது .
- ஸ்ரீ ராஜகோபாலசுவாமி திருக்கோவில் தல மூர்த்தி : ஸ்ரீ ராஜகோபாலசுவாமி
- ***1000 திரைப்படங்களுக்கு மேல் நடித்ததற்காக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் மனோரமா இடம் பெற்றார்.***
- **மனோரமா கலைஞர் கருணாநிதயின் மணிமகுடத்தில் (1958) நடித்துள்ளார்.**

- ஸ்ரீ ராஜகோபாலசுவாமி தல இறைவி : செங்கமலத்தாயார் (செண்பக லெட்சுமி, ஹேமாம்புஜ நாயகி, ரக்தாப்ஜ நாயகி, படிதாண்டாப் பத்தினி)
- ஸ்ரீ ராஜகோபாலசுவாமி தல தீர்த்தம் : ஹரித்ராநதி, துர்வாச தீர்த்தம், திருப்பாற்கடல், கோபிகா தீர்த்தம், சங்கு தீர்த்தம், சக்கர தீர்த்தம்.

- *மன்னார்குடி **ஹரித்ரா நதி' தெப்பக்குளம் இந்தியாவின் பெரிய தெப்பக்குளம் .*** *1,158 அடி நீளம், 847 அடி அகலம், 23 ஏக்கர்.*

- ***அந்தக் காலத்தில் மொத்தம் 98 குளங்கள் மன்னார்குடியில் இருந்துள்ளது ஆனால் இப்பொழுது பாதிக்குமேல் இல்லை. .***

- ***மன்னார்குடியில் இன்றும் நுழையும் தெருக்களிலெல்லாம் குளம் இருக்கிறது..***

- ***மன்னார்குடியில் புகழ்மிக்க கோவில்கள் பல உள்ளன. அவற்றுள் மன்னார்குடி ராஜகோபாலசாமி திருக்கோவில் உலகச் சிறப்பு வாய்ந்தது. இக்கோவில் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது.***

- ***மன்னார்குடி மல்லிநாதசுவாமி ஜினாலயம் சோழ நாட்டில் உள்ள சமணக்கோயில்களில் ஒன்றாகும்.***
- மன்னார்குடியில் ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் ஆண்டின் 12 மாதங்களிலும் உற்சவம் நடக்கும் ஊர்.

- ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் **சித்திரை மாதம் - கோடை உற்சவம் - 10 நாட்கள்**
- ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் **வைகாசி மாதம் - வசந்த உற்சவம் - 10 நாட்கள், 10ம் நாள் பௌர்ணமியன்று கருட வாகனம் இத்தலத்தின் சிறப்பு.**
- ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் **ஆனி மாதம் - தெப்போற்சவம் - 10 நாட்கள், 10ம் நாள் பௌர்ணமியன்று ஹரித்ராநதி குளத்தில் தெப்பம் நடைப்பெறும்.**
- ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் **ஆடி மாதம் - ஆடிப்பூரம் - 10 நாட்கள். செங்கமலத் தாயாருக்கு ஜேஷ்டாபிஷேகம் நடைப் பெறும்.**
- ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் **ஆவணி மாதம் - பவித்ரோற்சவம் - 10 நாட்கள்.**

- ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் **புரட்டாசி மாதம் - நவராத்திரி - 10 நாட்கள்**.
- ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் **ஐப்பசி மாதம் - கோலாட்ட உற்சவமும் தீபாவளி உற்சவமும் கொண்டாடப் படும்**
- ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் **கார்த்திகை மாதம்- சொக்கப் பானையுடன் கார்த்திகை உற்சவம்**
- ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் **மார்கழி மாதம் - அத்யயன உற்சவம் - 20 நாட்கள்.இராப்பத்து, பகல் பத்து உற்சவம்**.
- ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் **தை மாதம் - பொங்கல் உற்சவம்- 10 நாட்கள், தாயாருக்கும் உற்சவம் நடைப்பெறும்**
- ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் **மாசி மாதம் - டோலோற்சவம் -10 நாட்கள்**
- *ராஜகோபால சுவாமி திருக்கோயிலில்* ***பங்குனி மாதம் - 'பிரம்மோற்சவம் - 18 நாட்கள்***

- ***மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயில் நடை திறப்பு: காலை 6.30 - 12, மாலை 4.30 - 9 மணி***.
  - மன்னார்குடி அமைந்துள்ள மாவட்டம் திருவாரூர்

  தாலுக்கா
  மன்னார்குடி
  சட்டமன்றத் தொகுதி
  மன்னார்குடி
  நாடாளுமன்ற தொகுதி தஞ்சாவூர்
  அஞ்சல் குறியீட்டு எண் 614001
  தொலைபேச குறியீட்டு எண் +04367
  வாகன பதிவு எண் TN-50
  மன்னார்குடி குறியீடு MNG
  ரயில்வே குறியீடு MQ
  மக்கள் தொகை (2011) 66,999
  அடர்த்தி 5,800/km$^2$
  (15,000/sq. mi)

பரப்பளவு 11.55 சதுர கிலோமீற்றர்கள் (4.46 sq. mi)

கடல் மட்ட உயரம் 6 மீற்றர்கள் (20 ft.)

நேர வலயம் IST(UTC+5:30)

- மன்னையில் ஒரே நீராதாரம் பாமணி ஆறாகும்.வெட்டாற்றின் கிளையான பாமணி ஆற்றின் தண்ணீர் மன்னை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளின் விவசாயத்தின் நீராதாரமாகும்.
- மன்னார்குடி மல்லிநாதசுவாமி ஜினாலயம் சோழ நாட்டில் உள்ள சமணக்கோயில்களில் ஒன்றாகும். இது தவிர சோழ நாட்டில் கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் (கரந்தட்டாங்குடி), தீபங்குடி ஆகிய இடங்களில் சமணக் கோயில்கள் உள்ளன.
- ராஜமன்னார்குடியின் திருத்தலத்து வரலாறு வடமொழியில் ப்ரஹ்மாண்ட புராணத்தின் உத்தர காண்டத்தில் விஷ்ணு க்ஷேத்ர விபாகத்தில் சம்பகாரண்ய மஹாத்மியம் என்று எட்டு அத்தியாயங்களாக இடம் பெற்றிருக்கிறது.
- நைமிசாரண்யத்தில் சௌனகாதி முனிவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஸுதர் நூற்றெட்டு திவ்ய தேசங்களின் மஹாத்மியங்களைச் சொன்ன பிறகு சம்பகாரண்ய மஹாத்மியத்தை விஸ்தாரமாகச் சொன்னார்.
- கோபில-கோபிரளய முனிவர்களுக்கு எம்பெருமான் பிரத்யக்ஷமானது சம்பகாரண்ய மஹாத்மியத்தில் வருகிறது.
- மன்னார்குடி பகுதி வளம் கொழிக்கும் சம்பக வனமாய் இருந்திருக்கிறது. அகஸ்தியரால் உண்டான காவேரி நதியின் புண்ணியமும் அதை பானம் பண்ணுபவர்களுக்கு மறு ஜன்மம் இல்லையென்றும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது
- காவேரி நதி தீரத்தில் உறையும் ஸ்ரீரங்கன், கும்மோணம் சார்ங்கபாணி மற்றும் மன்னை ஸ்ரீராஜகோபாலன் ஆகிய மூவரையும் தரிசிப்பவர்க்கு மோக்ஷம் நிச்சயம்.
- மன்னார்குடியில் பிருகு, பிரம்மா, அக்னி ஆகியோரும் லக்ஷ்மியும் தபஸ் செய்திருக்கிறார்கள். அக்னி தவமியற்றியிருக்கிறான்.
- கோபாலன் கோபஸ்திரீகளுடன் ஹரித்ராநதியில் ஜலக்ரீடை விளையாடியிருக்கிறான்.

- ஒரு சௌராஷ்டிர ராஜாவின் கதையும் அவன் செய்த கைங்கர்யங்களும் வருகிறது.
- துவாதசாக்ஷர மந்திரத்தின் வைபவம் வருகிறது. மன்னார்குடியில் இருக்கும் நவதீர்த்த மகிமை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. படிக்கப் படிக்க ஆனந்தமாக இருக்கிறது
- மன்னார்குடி மற்றும் காவிரி ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள இருபது பகுதிகளைப் பற்றிய இலவச ஆன்ட்ராய்ட் மென்பொருள் "MANNARGUDI" என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. வரைபடக் குறியீடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த மென்பொருளை இங்கே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம...
- மன்னார்குடி-பெயர்க்காரணம்,பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் இரண்டு காரணங்களே ஏற்புடையதாக உள்ளன.
- மன்னர்+குடில் , 'மன்னர்'-மன்னர்கள் ,'குடில் 'வீடு,அக்காலத்தில் மன்னர்கள் வாழ்ந்த பூமியாக இருந்ததால் இப்பெயர் வந்ததாகவும்,மன்னர்குடில் என்கின்ற பெயர் மன்னார்குடியாக மறுவியதாகவும் கூறுவர்.மற்றொரு காரணம்,"மன்னர்"-விஷ்ணுவை குறிப்பதாகவும் கூறுவர்.
- மன்னார்குடி,மன்னார்கோவில் எனவும்,ராஜாமன்னர்கோவில் எனவும் அழைக்கப்படுகிறது.
- இந்தியாவின், தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மன்னை 1866 -ஆம் ஆண்டே நகராட்சியாக உருவெடுத்தது.
- மன்னையின் பிரதானமான அடையாளம்,வைணவத் தலமான "ராஜகோபாலசுவாமி திருக்கோவிலே" ஆகும்.
- விஜயநகர பேரரசு ,டெல்லி சுல்த்தான்,தஞ்சாவூர் நாயக்கர்கள் ,தஞ்சாவூர் மராத்தியர்கள் தொடர்ந்து பிரிட்டிஷ் பேரரசின் ஆளுமைகளுக்குள் இருந்தது.சுதந்திரத்துக்குப்பின் 1991-ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டத்திற்குட்படும்,1991-ஆம் ஆண்டு முதல் திருவாரூர் மாவட்டத்திற்குட்பட்டுள்ளது.
- காவிரி டெல்டாவின் பகுதியாக உள்ளதால் விவசாயமே மன்னையின் பிராதனமான தொழிலாகும்.
- மன்னார்குடி தீட்ஷதர்களின் கைவண்ணத்தில் அந்த கோபாலன் அழகு, மன்னார்குடி அலங்காரத்திற்கு மிகவும் விசேஷமானது அதிலும் வெண்ணைதாழியன்று கோபாலனின் பின் அலங்காரம் பார்க்க கண் கோடி வேண்டும்

- **மன்னார்குடி ஊர்ப் பெயராய்வு” என்ற தலைப்பில் மன்னார்குடி பானுகுமாரின்- மன்னார்குடி வரலாறு நூலில்-18 பக்கங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.**
- மன்னார்குடி நகராட்சி தலைவராகவும், தொடர்ந்து 15 ஆண்டுகள் மன்னார்குடி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும், #தேசிய_மேல்நிலைப்பள்ளியின் செயலராகவும் பணியாற்றிய “T.S.சுவாமிநாத உடையார்” அவர்களின் நினைவு தினம் இன்று (பிப்ரவரி 15).

- தமிழ்ச் சொல் பிறப்பியல் அகரமுதலியின் (Etymological Dictionary) தந்தை என்று போற்றப்படும் தேவநேயப் பாவாணர், #மன்னார்குடி #பின்லே கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் 1929-ம் ஆண்டு முதல் ஆறு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். அக்காலத்தில் மன்னார்குடியில் வாழ்ந்த இராசகோபாலர் என்னும் இசைப் பெரும் புலவரிடம் பாவாணர் முறையாக இசை பயின்றார்.
- மன்னார்குடி தேசிய மேல்நிலைப்பள்ளி தொடங்கப்பட்டு இன்றுடன் 119 ஆண்டுகள் நிறைவடைகின்றது (பிப்ரவரி 1, 1899). 💐
- 1899-ம் ஆண்டு 100 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட தேசிய மேல்நிலைப்பள்ளி , நூறாண்டுகளைக் கடந்து கல்விப்பணியாற்றிக் கொண்டிருக்கிறது. 👏
- 2001 ம் ஆண்டு கணக்குப்படி மன்னார்குடி வட்டத்தின் மக்கட் தொகை 2,87,019. இவர்களில் ஆண்கள் 1,42,543 பேர்களும் பெண்கள் 1,44,476 பேர்களும் உள்ளனர்.
- 2001 ம் ஆண்டு கணக்குப்படி மன்னார்குடியின் மொத்தப் பரப்பளவு 11.56 சதுர கிலோ மீட்டர்.
- 2001 census வளர்ச்சி விகிதம்? 5.92 (1991-92) மக்கள் நெருக்கம்.538. எழுத்தறிவு 76.07%.
- 2001 ம் ஆண்டு கணக்குப்படி மன்னார்குடி வட்டத்தின் மொத்தப் பரப்பளவு 1207 சதுர கிலே மீட்டராகும்.
- மன்னார்குடி காவிரி டெல்டாவின் பழைய பகுதிகளில் ஒன்றாகும்.

- மன்னார்குடி குன்றுகள் அற்ற ஆற்று வண்டல நிறைந்த சமவெளிப் பிரதேசமாகும்.
- மன்னார்குடி தமிழகத்தின் மத்திய மண் மட்டலப் பகுதியில் அமைந்துள்ள.
- மன்னார்குடியில் 1000 மீட்டர் ஆழம் வரை வண்டல மண் இருப்பதாக அறியப்பட்டுளளது.
- பாமணி ஆற்றுக்கு கிழக்கே உள்ள பகுதிகளில் களிமண்ணும் மேற்கே வடுவூர் வரை இருமண்பாடு அமைப்பாகவும் உள்ளது.
- ஆசியாக் கண்டத்திலேயே மிகப் பெரிய அளவில் மன்னார்ககுடிப் பகுதிகளில் நிலக்கரி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- மன்னார்குடியில் இதுவரை 19,500 கோடி டன்கள் தரமான நிலக்கரி இருப்பது தெரிய வந்துள்ளது.
- மன்னார்குடியில் கண்டறியப்பட்டுள்ள நிலக்கரியின் தன்மை - Moisture 40% to 50%, - Ash 4 to 12%. Volatile Matter 18 to 23%, Fixed Carbon 17 to 20%. Caloric value 2200 to 3200 Kal-kg.
- மன்னார்குடி வட்டம் பூகோள ரீதியான அமைப்பில் சமவெளிப் பிரதேசமாக உள்ளது.
- மன்னார்குடி வட்டத்தில் காடுகளோ, மலைகளோ இல்லாதிருப்பினும் காடுகளோ, மலைகளோ இல்லாதிருப்பினும், வளம் கொழிக்கச் செய்யும் ஆறுகளை நிரம்பப் பெற்றுள்ளது.
- மன்னார்குடி வட்டத்தில் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பெருமளவிலான மழை பெய்கின்றது.
- வடகிழக்குப் பருவக்காற்றிறன் மூலமே இவ்வட்டம் மழை பெறுகின்றது.
- மன்னார்குடி வட்டத்தில் கோடைக் காலத்தில் சில இடங்களில் நீா வறண்டு விடும் அளவிற்கு வெப்பம் உள்ளது.
- மன்னார்குடி வட்டத்தின் வெப்ப அளவு அதிகபட்சமாக 36.6 டிகிரி சென்டிகிரேடும் குளிர் உள்ளது. மாதுர்கழி, தையிலும் குளிர் உள்ளது.
- மன்னார்குடி வட்டத்தில் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வழகிழக்குப் பருவக் காற்றால் மழை பெய்கிறது.

- மன்னார்குடி வட்டத்தில் சனவரி, பிப்ரவரி மாதங்களில் சற்றே அதிகமான குளிரும், மே. சூன்,சூலை மாதங்களில் வெயிலால் வெப்பம் மிகுதியும் இருக்கும்
- மன்னார்குடி வட்டத்தில் ஜுலை, ஆகஸ்டு மாதங்களில் வறண்ட மேற்கு காற்று வீசும்.
- மன்னார்குடி வட்டத்தில் சூன் 1987 லிருந்து மே 1988 வரை 1074.9 மில்லி மீட்டர் மழையளவு பதிவாகியுள்ளது. கடந்த ஆண்டு பெய்த மொத்த மழையளவு 1386.5 மி.மீ. ஆகும்.
- **மன்னார்குடி** திருவாரூர் மாவட்டத்தின் ஓர் சட்டமன்றத் தொகுதியாகும். நாகப்பட்டிணம் மக்களவைத் தொகுதியில் இருந்த **மன்னார்குடி தொகுதி** தஞ்சாவூர் மக்களவைத் தொகுதியுடன் 2008 தொகுதி மறுசீரமைப்பு ஆணையின் காரணமாக இணைக்கப்பட்டுள்ளது.
- **பாரதியார் மன்னார்குடியில் தங்கியிருந்தபோதுதான் “பாருக்குள்ளே நல்ல நாடு பாரதநாடு என்ற பாடலை எழுதினார்.**
- **பரப்பளவில் உலகில் 9 ஆவது கோயிலாகவும் இந்தியாவின் பத்தாவது உயரமான கோபுரமாகவும் திகழும் மன்னார்குடி ராஜகோபாலசாமி கோயில்.**
- **மன்னார்குடியில் பொருளாதாரம் விவசாயம் இங்கு நெல், பருத்தி, உளுந்து, கரும்பு, ஆகியவை அதிகமாக சாகுபடி செய்யபடுகிறது,**
- **பாமனியாறு, கோரையாறு, மற்றும் கிணற்றுப்பாசனத்தை நம்பியே இங்கு விவசாயம் நடைபெறுகிறது.**
- **புளியமரம்,தென்னை,பனை,பழா, போன்ற மரங்களுக்கு ஏற்ற நிலமாக விளங்குகிறது.**

- ***மன்னார்குடி பழமையான நகராட்சிகளில் ஒன்று ஆங்கிலேயர்களால் 1866 -ஆம் ஆண்டு நகராட்சியாக அறிவிக்கப்பட்டது. இது ஒரு தேர்வு நிலை நகராட்சியாகும்.***
- மன்னார்குடி கிராமத்தின் நிர்வாகமும் ஆவ்வூரில் உள்ளவர்களாலேயெ நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் இப்போது அனைத்து கிராமங்களிலும் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- மன்னை வட்டத்தில் உள்ள பல கிராமங்களுக்கு மட்டுமல்லாது, அதனை அடுத்துள்ள வேறு சில ஊர்களுக்கும் பொதுவான விஷயங்களைக் கவனிக்க அக்கிராமங்களின் பஞ்சயாத்துக்களை உள்ளடக்கி, அவற்றிற்கும் மேலாகப் பஞ்சாயத்து யுனியன்களையும் நிறுவியிருக்கிறார்கள்.
- மன்னார்குடி வட்டம் இயற்கை அமைப்பை ஒட்டிப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கோட்டம் என்று். வளநாடு என்றும், கூற்றம் என்றும் அவை வழங்கப் பெற்று வந்துள்ளன.

- அந்தணஒர்களுக்கு வழங்கிய பகுதிகளாக "பிரம்மதேயம்" "சதுர்வேசதி மங்கலம்" என்பனவும் இருந்தன.

- "தேவதானம்" "திருவிடையாட்டம்" என்பன கோவிலுக்குச் சொந்தமானவைகளாக விளங்கின.

- மன்னார்குடியில் காணப்படுகினற எந்த ஒரு கல்வெட்டிலும் மன்னார்குடி என்ற பெயர் இடம் பெறவில்லை.
- கல்வெட்டில் காணப்படும் பாம்புணிக் கூற்றம்" என்பது இன்று பாமணி என்ற ஊராகத் திகழ்கிறது.
- சுத்தமல்லி வளநாடு என்ற கல்வெட்டில் காணப்படும் ஊர் இன்று சித்தமல்லி என்ற பெயரில் மன்னைக்கு அருகே உள்ளது.
- சித்தமல்லி, பாமணி என்ற இந்த ஊர்கள் கல்வெட்டில் இருந்தபடியே இன்றளவும் இருக்கையில் "இராசாதிராசச் சதுர்வேதி மங்கலம்", "குலோத்துங்கச் சோழ விண்ணகரம்", " "இராசேந்திர விண்ணகரம்" என்றிருந்த மன்னயின் பழைய பெயர் அழிவுற்றதற்குக் காரணம் தெரியவில்லை.

- மன்னையில் உள்ள ஒரு கல்வெட்டில் "மன்னார் கோயில்" என்ற பெயர் வருகிறது. இதே போல் வேறு ஒரு கல்வெட்டிலும் காணப்படுகிறது.

- தஞ்சை மராட்டிய மன்னர்கள் தங்கள் ஆட்சிக்குட்பட்ட நிலப் பகுதியை ஐந்து பிரிவுகளாகப் பிரித்திருந்தனர். ஒவ்வொரு

பிரிவும் “சுபா” என்று அழைக்கப்பட்டது. இப்படி அமைக்கப்பட்ட சுபாக்களுள் மன்னார்குடியும் ஒன்று.

- தற்போது திருவாரூர் மாவட்டத்தில் உள்ள இரண்டு கோட்டங்களுள் மன்னார்குடியும் ஒன்று.
- மன்னார்குடி வட்டத்தில் மன்னார்குடி, கோட்டுர் என்ற இரண்டு ஊராட்சி ஒன்றியங்களும், ஆறு பிர்க்காகக்களுமம், 94 ஊராட்சிகளும், 128 கிராமங்களும் உள்ளன.

- மன்னார்குடி நகராட்சி பழம் பெருமை வாய்ந்ததாகும். 1866ல் 12 கவுன்சிலர்களுடன் இது செயல்படத் தொடங்கியது.

- மன்னார்குடி நகராட்சியில் 1883 ல் கவுன்சிலர்களின் எண்ணிக்கை 16 ஆக உணர்ந்தது. 1903 ல் எட்டாக குறைக்கப் பெற்றது.

- மன்னார்குடி நகராட்சி நிர்வாகம் 1873-74 ல் ரூ21,940 செலவில் 12 மைலில் உள்ள வடவாறிலிருந்து வாயக்கால் மூலம் நகரத்தில் உள்ள பல குளங்களுக்குத் தண்ணீர் நிரப்ப புதிய திட்டம செயல்படுத்தியது.

- மன்னார்குடி நகராடசி 1873-74 ல் ரூ2,250 நிதி செலவீட்டில் மூன்று ஆரம்ப பள்ளிகளையும், 13 உதவி பெறும் பள்ளிகளையும், மருத்துவ மனையும் நிர்வகித்தது.
- மன்னார்குடி வட்டத்தில் சூன் 1987 லிருந்து மே 1988 வரை 1074.9 மில்லி மீட்டர் மழையளவு பதிவாகியுள்ளது. கடந்த ஆண்டு பெய்த மொத்த மழையளவு 1386.5 மி.மீ. ஆகும்.
- **மன்னார்குடி** திருவாரூர் மாவட்டத்தின் ஓர் சட்டமன்றத் தொகுதியாகும். நாகப்பட்டிணம் மக்களவைத் தொகுதியில் இருந்த **மன்னார்குடி தொகுதி** தஞ்சாவூர் மக்களவைத் தொகுதியுடன் 2008 தொகுதி மறுசீரமைப்பு ஆணையின் காரணமாக இணைக்கப்பட்டுள்ளது.
- **பாரதியார் மன்னார்குடியில் தங்கியிருந்தபோதுதான் “பாருக்குள்ளே நல்ல நாடு பாரதநாடு என்ற பாடலை எழுதினார்.**

- **பரப்பளவில் உலகில் 9 ஆவது கோயிலாகவும் இந்தியாவின் பத்தாவது உயரமான கோபுரமாகவும் திகழும் மன்னார்குடி ராஜகோபாலசாமி கோயில்**.
- **மன்னார்குடியில் பொருளாதாரம் விவசாயம் இங்கு நெல், பருத்தி, உளுந்து, கரும்பு, ஆகியவை அதிகமாக சாகுபடி செய்யபடுகிறது.**
- மன்னார்குடியும் ஆஅசியன் பெயிண்டால் திருப்பணி செய்து சீரழிக்கப்பட்ட கோயில் நல்லவேளையாக கோபுரங்களுடன் விட்டார்கள். உள்ளே பிரம்மாண்டமான ரங்க மண்டபம் உள்ளது. அரங்கில் இருந்து இரு கைகளும் ஓர் உடலும் பிரியும் தன்மை கொண்டது- கிறித்தவ தேவாலயங்களைப்போல. ஆனால் தமிழகத்தின் எந்த தேவாலயத்தையும் விடப்பெரிய அரங்கு இது. கருங்கல் தூண்கள் கல்மலர்களுமாக நிற்கும் ஒஉ பெரும் காடு.

- **பாமனியாறு, கோரையாறு, மற்றும் கிணற்றுப்பாசனத்தை நம்பியே இங்கு விவசாயம் நடைபெறுகிறது.**
- **புளியமரம்,தென்னை,பனை,பழா, போன்ற மரங்களுக்கு ஏற்ற நிலமாக விளங்குகிறது.**

- ***மன்னார்குடி பழமையான நகராட்சிகளில் ஒன்று ஆங்கிலேயர்களால் 1866 -ஆம் ஆண்டு நகராட்சியாக அறிவிக்கப்பட்டது. இது ஒரு தேர்வு நிலை நகராட்சியாகும்.***
- மன்னார்குடி கிராமத்தின் நிர்வாகமும் ஆவ்வூரில் உள்ளவர்களாலேயெ நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் இப்போது அனைத்து கிராமங்களிலும் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- மன்னை வட்டத்தில் உள்ள பல கிராமங்களுக்கு மட்டுமல்லாது, அதனை அடுத்துள்ள வேறு சில ஊர்களுக்கும் பொதுவான விஷயங்களைக் கவனிக்க அக்கிராமங்களின் பஞ்சயாத்துக்களை உள்ளடக்கி, அவற்றிற்கும் மேலாகப் பஞ்சாயத்து யூனியன்களையும் நிறுவியிருக்கிறார்கள்.
- பஞ்சாயத்து யூனியன்கள் துவங்கப்பட்டு இன்றுடன் 84 ஆண்டுகள் நிறைவடைகின்றது (அக்டோபர் 21, 1931).

- இந்தியாவின் “முதல் நடமாடும் நூலகம்”, 1931-ம் ஆண்டு அக்போபர் 21 அன்று, மன்னார்குடி மேலவாசல் கிராமத்தில் துவக்கப்பட்டது. எஸ்.வி.கனகசபை பிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்ட இந்நூலகம், 1931ல் இந்தியாவின் நூலக அறிவியலின் தந்தை எனப்படும் எஸ். ஆர். ரங்கநாதன்[ என்பவரால் துவக்கப்பட்டது.
- முதியோர் கல்வியை இலக்காகக் கொண்டு, எளிய தமிழில், தோட்டக்கலை, தேனீ வளர்ப்பு, குடிசைத்தொழில் மற்றும் வருமானத்தை அதிகரிக்கும் முறைகளைப் பற்றிய குறிப்புகளுடன் புத்தகங்கள் பிரசுரிக்கப்பட்டு மன்னையின் நடமாடும் நூலகத்தின் மூலம் விநியோகம் செய்யப்பட்டன.
- மன்னார்குடி மற்றும் 12 மைல் சுற்றுவட்டார கிராமவாசிகளின் கல்வி நலனிற்காக கௌமார குருகுலம் நிறுவப்பட்டது.
- நடமாடும் நூலகத்தின் மூலம் 95 கிராமக் கிளைகளுக்கு இலவசமாக புத்தகங்கள் கொடுத்து வாங்கப்பட்டன. சித்திரை, ஐப்பசி மாதங்களில் கிராமப்புற இளைஞர்களுக்கு சிறப்பு பள்ளிக்கூடம் மூலம் கல்வி போதிக்கப்பட்டது.
- மன்னார்குடியின் பெருமைகளில் ஒன்றான இந்நடமாடும் நூலகத் திட்டம், பின்பு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் துவக்கப்பட்டு, கிராமப்புறங்களில் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் வித்திட்டது.

- மன்னார்குடியைச் சேர்ந்த கனகசபை பிள்ளை என்பவர் நடமாடும் நூலகத்தினை உருவாக்கியுள்ளார். இது தற்போது தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் உள்ளது.

- மன்னார்குடியின் பெருமைகளில் ஒன்றான இந்நடமாடும் நூலகத் திட்டம், பின்பு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் துவக்கப்பட்டு, கிராமப்புறங்களில் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் வித்திட்டது.

- நூலகத்துறைக்கு ஆற்றியுள்ள அளப்பரிய பங்களிப்புக்காக எஸ்.ஆர் ரங்கநாதன் “நூலகத்தின் தந்தை” எனப் போற்றப்படுகிறார். இவருடைய பிறந்த தினம் (ஆகஸ்ட் 12) “தேசிய நூலக தினமாக” கொண்டாடப்படுகிறது.

- இந்திய நூலகத் தந்தை ரங்கநாதன் அவர்களால் மன்னார்குடியில் துவக்கிவைக்கப்பட்ட நடமாடும் நூலகத் திட்டம், பின்பு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் துவக்கப்பட்டு, கிராமப்புறங்களில் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் வித்திட்டது.
- மன்னார்குடி பெயரின் தோற்றம் பற்றி அறிவதற்கு, அவற்றுடன் தொடபுபுடைய புரணக் கதைகள், பழமொழிகள், பாடல்கள், கல்வெட்டுகள், சாசனங்கள், இலக்கியங்கள் போன்ற பல்வேறு பொருள்கள் துணையாக இருக்கின்றன.
- மன்னையின் மைந்தர்களால் இணையதளத்தில் மாதந்தோறும் வெளியிடும் திறவுகோல் - மின்இதழை-- இணையம் மூலம் தரவிரக்கம் செய்ய http://maintharkal.mannai.in

- மன்னையின் மைந்தர்கள் - இணையதளத்தில் -- மாதந்தோறும் வெளியிடும் திறவுகோல் - மின்இதழுக்கு தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஒவியம் என இடம் பெறச் செய்ய மின்னஞ்சல் - thiravukolsubmit@gmail.com பகிரி +91 8220567322
- மன்னையின் மைந்தர்கள் - இணையதளத்தில் -- மாதந்தோறும் வெளியிடும் திறவுகோல் - மின்இதழை-- தங்களின்-கைபேசிக்கு பெற பகிரி +91 8220567322
- இராஜாதிராஜன் ஊரை உண்டாக்கியதால் இராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டது.
- புராண வரலாற்றுப் பெருமைமிக்க இவ்வுரில் பல மன்னர்கள் வசித்து வந்துள்ளனர். மன்னர்கள் வசித்து வந்ததால் மன்னர்கள் இருந்த இடத்தை “மன்னர் கோயில்” என்று அழைத்து வந்தனர்.

- தெலுங்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நாயக்க மன்னர்களும் இங்கு ஆட்சி புரிந்துள்ளனர்.
- தெலுங்கில் கோயில் என்பதற்கு குடி என்று பொருள். எனவே. நாயக்கர் காலத்திலிருந்து மன்னார்கோயில் மன்னார்குடியாக அழைப்பட்டு வருகிறது.
- மன்னார்கோயில் என்று அழைக்கப்பட்டு வந்த இந்தஊர் சோழர் காலத்தில் சிறப்புற்று இருந்தமையாலும் முதற் குலோத்துங்கச் சோழனால் இவ்வூரின் கோயிலின் சில

பகுதிகள் கட்டப்பட்டமையாலும் ராஜ என்ற அடைமொழிப பகுதியுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

- படைகுடி நட்பு (குறள் - 381) என்ற குறளில் குடி என்னும் சொல் குறிப்பதை அறியலாம்.
- குடி என்பது பழமையான சொல். குடி என்னும் சொல், ஊர் பெயர்களில் அமைந்து, குடியிருப்பை உணர்த்துவதாகும்.
- உறவு முறையுடைய பல குடும்பத்தார் ஒரு குடியினராகக் கருதப்படுவர். இத்தகைய குடியில் சேர்ந்து வாழும் இடம் குடியிருப்பு என்றும் குடி என்றும் சொல்லப்படும்.
- மன்னார்குடி வட்டத்தில் குடி என்ற முடிவில் ஊர்களும் உள்ளன. 1. வெங்காட்டான்குடி 2. திருப்பாலக்குடி 3. புழுதிக்குடி 4. ஏத்தக்குடி.
- குடி என்று முடியும் சிறுகுடி என்னும் ஊர் தஞ்சை நாட்டில் பேரளத்துக்கருகே உள்ளது.
- இளையான்குடியில் பிறந்த மாறன் என்ற சிறுத் தொண்டர் இளையான்குடி மாறன் என்று பெரிய புராணத்தில்
- பேசப்படுகிறார். மற்றொரு சிவனடியாராகிய சிறுத் தொண்டர் பிறந்த ஊர் செங்காட்டாங்குடியாகும்.
- இன்னும் தேவராத்தில் கற்குடி. கருக்குடி. விற்குடி. வேள்விக்குடி முதலிய பல குடியிருப்புகள் பாடல் பெற்றுள்ளன.
- நெல்லை நாட்டில், சிறுகுறுங்குடி என்னும் வைணவத் திருப்பதி ஒன்று உண்டு.
- திராவிட மொழியின் தந்தை என்று புகழப்படுகின்ற கால்டுவெல் ஐயர் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அரும்பணி செய்த இடம் இடையான்குடி.

- மன்னார்குடி என்ற பெயருள்ள திருமால் கோயில் கொண்டுள்ள இடத்தைச் சுற்றி மக்கள் அமைத்துக் கொண்ட குடியிருப்புகளுக்கு மன்னார்குடி எனப் பெயர் வழங்கப்பட்டிருத்தலும் கூடும்.

- மன்னார்குடி வட்டத்தில் **கல்வெட்டு** உள்ள ஊர்கள்.
- இன்றைய பெயர் கல்வெட்டு பெயர்

- 1. ஆலிவலம் - ஆர்வலம்
- 2. எளநகர் - இளநகர்
- 3. எளவனூர் - இளவனூர்
- 4. குன்னியூர் - குன்றியூர்
- 8. கொத்தமங்கலம் - தலைக்கூரங்குடி
- 6. கோட்டுர் - கோட்டுர்
- 7. தோட்டமங்கலம் - கூற்ற மங்கலம்
- 8. சித்தம்பர் - சிற்றம்பர்
- 9. திருக்காரவாசல் - திருக்காரயில்
- 10. திருக்கோலக்காடு - கோலக்காடு
- 11தேவங்குடி - தேவங்குடி
- 12. நிடுமங்கலம் - நீடுர்
- 13. பெருவிடமதூர் - பெரும்பாலமருதூர்
- 14 மின்னாமநல்லூர் - மின்னாவநல்லூர்
- 15. வங்க நகர் - வங்க நகர்
- 16. வலவ நல்லூர் - வலவ நல்லூர்

- நாட்டு வரலாற்றை பல்வேறு கோணங்களில், நிலவியல் துணை கொண்டு ஆராயும்போது சோழராட்சியின் மத்திய காலம் வரை மன்னார்குடிக்குத் தெற்கே காட்டுப் பகுதிகளாக (முல்லை நிலம்) இருந்துள்ளதை அறிகிறோம்.
- காடு நீக்கி நாடு கொள்ளும் முயற்சியில் சாழ மன்னர்கள் முயற்சித்தபோது உருவான திருவூரே மன்னை நகரமாகும்.
- மன்னார்குடியின் பழம் பெயர் இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம் என்பதை கி.பி.1070- 1125 வரை ஆட்சி செய்த முதற் குலோத்துங்கனின் மன்னார்குடி இராஜகோபாலசாமி கோயில் கல்வெட்டு (கி.பி.1118) உறுதி செய்கிறது.
- இராஜகோபாலசாமி கோயில் கல்வெட்டு - சுத்தவல்லி வளநாட்டுப் பிரமதேயம் தனியுர் ஸ்ரீராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம் என்ற இக்குறிப்பே மன்னார்குடி நகரம் பற்றிய தொன்மைக் குறிப்பாகும்.

- இராஜாதிராஜன் என்ற சோழ மன்னன் ஒருவன் பெயரால் பிரமதேய ஊராகவும் (அந்தணர்களுக்காக வழங்கியதால்) சதுர்வேதிமங்கலம் என்ற மங்கலம் எனும் பகுப்புடைய ஊராகவும், தனயூர் என்ற சிறப்பு உரிமைகள் பெற்ற ஊராகவும் திகழ்ந்தது என்பதை, இராஜகோபாலசாமி கோயில் கல்வெட்டு வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

- கி.பி.1118ல் வெட்டப்பட்ட மன்னார்குடி கல்வெட்டு இராஜாதிராஜன் எனும் சோழன் பெயரில் இவ்வூர் இருந்தது என்று சொல்வதாலும், கி.பி. 1118 க்கு முன்பு இப்பெயரில் வாழ்ந்த சோழ மன்னன் முதலாம் இராஜாதிராஜன் என்ற ஒருவனே என்பதாலும், கங்கை கொண்ட சோழன் எனும் முதலம் இராஜேந்திர சோனின் மகனான இராஜாதிராஜ சோழனால்தான் மன்னார்குடி தோன்றியதை தெள்ளத்தெளிவாக அறியமுடிகிறது.

- கு. பாலசுப்பிரமணியம் எழுதி தஞ்சை சரஸ்வதி மகால் வெளியிட்டுள்ள "தஞ்சாவூர்" என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகள் ஏராளம் உள்ளன.
- தஞ்சாவூர் தமிழ்பல்கலைக் கழகம் 1983 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள "தஞ்சை மாராட்டியர் செப்பேடுகள் 50" என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகள் ஏராளம் உள்ளன.
- தஞ்சாவூர் தமிழ்பல்கலைக் கழகம் 1987 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள "தஞ்சை மாராட்டியர் கல்வெட்டுக்கள்" என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகள் ஏராளம் உள்ளன.
- ம.பெ.சிவஞானம் எழுதியுள்ள" "விடுதலைப் போரில் தமிழகம் " என்ற புத்தகத்தில் சுதந்திரப்போரட்டத்தில் மன்னார்குடி ஆற்றிய பணிகள் பற்றி தெரிந்து கொள்ளலாம்.
-
- மன்னார்குடி வட்டத்தில் பழமொழிகளும் புராணக் கதைகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன.

- மன்னார்குடி வட்டப் பழமொழிகளை முயன்று திரட்டி அவற்றில் பொதிந்துள்ள வரலாற்று உண்மைகளை “மன்னார்குடி வரலாறு” என்ற புத்தகத்தில் “மன்னார்குடியின் தொன்மை வரலாறு” என்ற அத்யாயத்தில் 18 பக்கங்களில் 27 தலைப்புகளில் எழுத்தாளர் பானுகுமார் பதிவு செய்துள்ளார்.




- இந்தியாவில் உள்ள கோயில் குளங்களிலேயே பெரிய கோயில் குளத்தைக் கொண்ட கோயிலைக் கட்டிய பெருமையும் சோழர்களையே சாரும். மன்னார்குடி, இராஜகோபால்சாமி திருக்கோயிலே அது.
- இராஜராஜசோழன் காலத்திலிருந்து கோயில்களை பராமரிக்கின்ற பணிகளும் சிறப்பாக நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. அதே காலம் தொட்டு பல்லவர்களின் சிற்பக்கலையைப் பார்த்தும் சோழர் சாம்ராஜ்ஜியத்தின் சிற்பிகள், சிற்பக்கலையில் பல நுணுக்கங்களை கற்று, தனது கட்டிட வடிவமைப்பில் மன்னார்குடி கோயில்களிலும் அத்தகைய தனித்திறன் களை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

155. சமணக் குடியிருப்பும் ஜினாலயமும் உள்ள பகுதி மன்னார்குடியின் மேற்குப்பகுதி, ஹரித்ராநதி தெப்பகுளம் அருகில் ஜைன சன்னதி தெரு, கீழ ஜைனத்தெரு, விழல்காரத்தெரு, மேல ஜைனத்தெரு ஆகிய வீதிகளின் மையத்தில் ஜினாலயம் (கோயில்) அமைக்கப்பட்டுள்ளது.
156. ஜினாலயம் (கோயில்) கோயில் பரப்பளவு 10000 சதுர அடி திராவிட கலையம்சம் கொண்ட கோயில்.

157.மன்னார்குடி சமணக்கோயில், இராஜ கோபுரத்துடன் 10 விமானங்கள் 9 சன்னதிகள், பத்தாயிரம் சதுர அடி பரப்பில் அமைந்த தனிச்சிறப்பு வாய்ந்த கோயில்.



158.மன்னார்குடி சமணக்கோயில், இராஜகோபுரம் 33 அடி உயரம் ஐந்து கலசங்களுடன் ஸ்ருதஸ்கந்தத்திற்கு தனி சன்னதி விமானத்துடன், துவஜ ஸ்தம்பம் (கொடி மரம்) 22 அடி உயரம்.

159.மன்னார்குடி சமணக்கோயிலின் பழமையை இதை உருவாக்கப்பயன்படுத்திய கற்களால் அறியலாம்.

160.மன்னார்குடி சமணக்கோயிலின் அமைப்பு, வேலைப்பாடுகள், வடிவங்கள், கலையம்சங்கள், செங்கற்களின் காலம், சுண்ணாம்பு கட்டுமானங்கள் இவற்றையெல்லாம் காணும்போது இக்கோயில் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக உள்ளது.

161.சீவகப் பெருமான் பிறந்த இடம்தான் மல்லிநாதர் ஜினாலயப் பகுதி. சச்சந்தன் விசயமாதேவியுடன் செங்கோலோச்சிய அழகுமிகு நகரம்தான் மன்னார்குடி எனப்படும் இராசமாபுரம்.

162.மன்னார்குடி ஜினாலயத்திற்கு பின்புறம் உள்ள பகுதிதான் மாளிகைமேடு எனப் பல தலைமுறைகளாக அழைக்கப் படுகிறது. ஏறக்குறைய ஒரு மைல் இரண்டுமைல் அளவு பரப்பில் இருக்கிறது. அங்கே அரண்மனை இருந்ததற்கான ஆதாரப் பொருட்கள் அவ்வப்போது கிடைத்து வருகின்றன.

163.மன்னார்குடி இராசமாபுரத்தில் கட்டியங்காரன் செய்த சூழ்ச்சியால் மன்னன் மாள விசயை மயிற்பொறி ஏறி, விசை தளர்ந்து இடுகாட்டில் விழ, அவ்விடத்திலேயே சீவகன் பிறந்திருக்கிறான்.

164.சீவகன் பிறந்த இடம் தான் மன்னார்குடி அரித்ராநதிப் பகுதியில் அமைந்துள்ள இக்கோயிலாகும்.

165.மன்னார்குடி இன்றுள்ள மனைப்பகுதி பெருங்காட்டுப் பகுதியாக இருந்திருக்கிறது. மாபெரும் விருட்சங்கள் நிறைந்த அடர்ந்த காடு. ஆம்... திருத்தக்க தேவரின் சீவக சிந்தாமணி வர்ணனை அப்படியே இருக்கிறது.

166.இந்த மன்னார்குடி இராசமாபுரத்தில் அடர்ந்த காட்டில் பிறந்தவர் தான் சீவகன். விசயமகாதேவியை சுமந்த மயிற்பொறி வீழ்ந்த இடம் இருள்மிகு அடர்ந்த வனம். சீவப்பெருவழுதி அவதரித்தருளிய திருவிடம். அப்பகுதியைத் தேர்ந்தெடுத்து ஜினாலயம் (கோயில்) கட்டப்பட்டுள்ளது.

- மன்னார்குடி ஜினாலயத்தை அமைத்திட பயன்படுத்திய செங்கற்கள் சிந்து கற்கள் மிகப் பழமை வாய்ந்தவை.
- இராஜராஜ சோழன் எழுப்பிய கற்கோயில் காலத்திற்கும் முற்பட்டது.



- மன்னார்குடி இக்கோயிலில் 10 விமானங்கள். ஒரு வெளிக்கோபுரம் உள்ளது. ஒவ்வொரு விமானமும் வெவ்வேறு அமைப்புகளோடு கலை அம்சங்களோடு உள்ளது. மேலும் இதன் கூரையின் மேற்புறத்தளம் சமச்சீராக இன்றி கூம்பு வடிவத்துடன் கூரை போன்று விளங்குகிறது. திராவிடக் கலை அம்சம் கொண்ட கோயில்.
- மன்னார்குடி ஜினாலயம் (கோயில்) கோயிலில் 10 விமானங்கள் பட்டியல் 1. மூலஸ்தானம் ஸ்ரீ மல்லிநாதர் சன்னதி விமானம் 2. முக்கால தீர்த்தங்கரர் விமானம் 3. ரிக்ஷப தேவர் விமானம் 4. ஸ்ரீ ஸ்ருதஸ் கந்த விமானம் 5. ஸ்ரீ பத்மாவதி அம்மன் விமானம் 6. ஸ்ரீ தர்மதேவி அம்மன் விமானம் 7. முன்மண்டப விமானம் 8. ஸ்ரீ பிரும்ம தேவர் விமானம் 9. ஸ்ரீ க்ஷேத்ர பாலகர் விமானம் 10. ஸ்ரீ ஜ்வாலா மாலி அம்மன் விமானம் 11. இராஜகோபுரம்
- மன்னார்குடி ஜினாலயம் (கோயில்) கோயிலில் முன்மண்டப விமானம், இராஜகோபுரம் நீங்கலாக மற்ற 9 விமானங்களும் 9 சன்னதிகளுக்குரியவை.
- தமிழக ஜினாலயங்களிலேயே மிகப்பெரிய ஆலயத்தொகுப்பு மன்னார்குடி ஸ்ரீ மல்லிநாத சுவாமி ஜினாலயம் தான். பத்தாயிரம் சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது. மதிற்சுவர்கள் 12 அடி உயரமும் 3 அடி கனமும் கொண்டவை.
- மன்னார்குடி ஜினாலயம் (கோயில்) கோயிலில் கண்ணாடிப் பல்லாக்கு கண்ணாடிப் பல்லாக்கு இந்த ஆலயத்தின் அரிய செல்வமாகும்.
- மன்னார்குடி ஜினாலயம் (கோயில்) கோயிலில் கண்ணாடிப் பல்லாக்கு திரு.சிகாமணி செட்டியார் அவர்களால் 1919ல் இந்தப் பல்லக்கு தேக்கு மற்றும் அத்திமரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட கண்ணாடி வில்லைகள் பதிக்கப்பட்ட பல்லக்கு இது. கொடி, யாளி, குதிரைகள், கந்தர்வ பொம்மைகள், மயில்கள், தொம்பை மாலைகள், கண்ணாடிக்குழல்கள், சூரிய சந்திர தகடுகள் என மிக அழகாக அலங்கரிக்கப்பட்ட அபூர்வ பல்லக்கு ஆகும்.
- மன்னார்குடி ஜினாலயம் (கோயில்) கோயிலில் கண்ணாடிப் பல்லாக்கு கண்ணாடிப் பல்லாக்கு ஆண்டுதோறும் நடைபெறும் பிரும்மோத்சவத்தின் நிறைவு நாளான பத்தாவது நாள் மகாபிசேகம் முடிந்து மறுநாள் விடையாற்றி விழாவாக

கண்ணாடிப் பல்லக்கில் ஸ்ரீ ஜ்வாலாமாலினி அம்மன் உற்சவம் இரவில் வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றது. இரவில் கண்ணாடிப் பல்லக்கில் அம்மன் பவனி வரும் அழகைக் காண கண்கோடி வேண்டும்.

- மன்னார்குடி ஜினாலயம் (கோயில்) கோயிலில் கண்ணாடிப் பல்லாக்கு கண்ணாடிப் பல்லாக்கு பூசைகள் இருவேளை நித்திய பூசை, வெள்ளியன்று அம்மனுக்கு சுக்கிரவார பூசை. பௌர்ணமியில் சர்க்கரைப் பொங்கலுடன் அம்மனுக்கு பூசை நடைபெறுகிறது.
- மன்னார்குடி ஜினாலயம் (கோயில்) கோயிலில் கண்ணாடிப் பல்லாக்கு கண்ணாடிப் பல்லாக்கு விழாக்கள் வைகாசி சப்தமி முதல் 10 நாள் பிரம்மோத்சவம். பதினோராம் நாள் ஸ்ரீ ஜ்வாலாமாலினி கண்ணாடிப் பல்லக்கு உற்சவம். தரணேந்திர பதமாவதி அம்மன் திருவீதி உலா, ஆடி கடைசி வெள்ளி நவராத்திரி விழா மகாவீரர் பரிநிர்வாணவிழா காணும் பொங்கல் விழா அம்மனுக்கு மார்கழி முக்கு பூசை போன்றவை நடைபெற்று வருகின்றது.
- பல சிறப்புக்களைக் கொண்ட மல்லிநாத பெருமான் ஜினாலயம் இராசமாபுரம் என்னும் இராசமன்னார்குடியின் மேற்குப் பகுதி, ஹரித்ராநதி தெப்பகுளம் அருகில் ஜைன சன்னதி தெரு, கீழ ஜைன தெரு, விழல்காரத்தெரு, மேல ஜைனத்தெரு ஆகிய வீதிகளின் மையத்தில் அமைந்திருக்கிறது.
- “சமணர்களின் மையமாக முக்கிய நகரமாக மன்னார்குடி இருந்துள்ளது. பல யாத்தீகர்கள் ஜைனக் கோயிலுக்கு வந்துள்ளனர். இங்கு 153 பேர் வாழ்ந்துள்னர்” என்று தஞ்சாவூர் செஜட்டியர் வரலாறு கூறுகிறது.
- மன்னார்குடியில் உள்ள இராஜகோபாலசாமி கோயில் முன்பாக நெடுஞ்சாலையின் ஓரத்தில் உள்ள கொடிக்கம்பம் சமணர் கோயிலின் வாயிலில் காணப்படும் மானஸ்தம்பம் போன்றே காட்சி அளிக்கின்றது. எனவே இந்தஊரில் இருந்த சமணக் கோயிலின் கட்டிடக்கலையின் தாக்கம் வைணவக் கோயிலுக்கும் பரவியருக்க வேண்டும் எனக் கருத இடமுள்ளது.
- மன்னார்குடி குறியீடுகள். அஞ்சல் - 614 001 . தொலைபேசி- +04367

- நகராட்சி தொடங்கிய ஆண்டிலேயே நகர மக்களின் நீராதார தேவையைப் பூர்த்தி செய்ய வடுவூர் வடவாற்றில் இருந்து தண்ணீர் கொண்டுவர தனியாக நிலத்தை விலைக்கு வாங்கி அமைக்கப்பட்ட 12 கிலோமீட்டர் நீள வாய்க்கால் முழுமையும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுவிட்டது. அதனை மீட்பது சாத்தியமில்லை என்ற நிலையில் அதிகாரிகள் செயல்படுகின்றனர்.
- அந்த நிலத்தை மீட்டு வழியில் இருக்கின்ற ஊராட்சிகளுக்கு நீராதார மேம்பாட்டு திட்டங்களுக்கு அரசு பயன்படுத்திகொண்டு, அதற்காக நிலமதிப்பீட்டுத் தொகையை நகராட்சிக்கு வழங்கலாம். ஆனால், இதுகுறித்து தமிழக அரசும், நகராட்சி அதிகாரிகளும் உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை.
- நகரில் இருந்த நகராட்சிக்குச் சொந்தமான 93 குளங்களில் தற்போது 60 குளங்கள்தான் இருக்கின்றன. அதிலும் பயன்பாட்டில் உள்ளவை 20-க்குள்ளான குளங்கள்தான். மற்றவை பெயரளவில்தான் உள்ளன. நகரத்தின் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த பயன்பட்டு வந்த குளங்களைத் தொலைத்துவிட்டது கவலையளிப்பதாக உள்ளது".
- மன்னார்குடி வட்ட ஊர்களில் மிகுதியான ஊர்கள் "ஊர்" என்ற பொதுக்கூறு பெற்றே அமைந்துள்ளன.
- மன்னார்குடி வட்டம் பற்றி பல்வேறு புவியியல், வரலாறு தொடர்பான செய்திகளையும் உணர்த்துவதற்கு ஊர் என்ற பொதுக்கூறு பெரிதும் துணை செய்கிறது.
- நால்வகை நிலங்களில் மருதநிலமே சிறப்பாக குடியிருப்புக்கு ஏற்றதாதக் கொள்ளப்பட்டது. மன்னார்குடி வட்டமும், மருதநிலப் பகுதிகள் கொண்டதாகும். அதனால் வட்டத்தில் ஊர் என்ற பொதுக் கூற்றினைப் பெற்ற ஊர்களைக் காண முடிகிறது.
- ஊர் என்ற பொதுக் கூற்றினை பெற்ற 24 ஊர்கள். 1. குன்னியூர் 2. மழைவராயநல்லூர் 3. அலத்தூர் 4. பனையூர் 5. பைங்காட்டுர் 6. பாலையூர் 7. பெருவிடைமருதூர் 8. தெற்கு நாணலூர் 9. செருக்களத்தூர் 10. நொச்சியூர் 11. 12. வல்லூர் 13. கெழுவத்தூர் 14. ஒரத்தூர் 15. நல்லூர் 16. மூவாநல்லூர் 17. கர்ணாவூர் 18. வடுவூர் 19. எடகீடையூர் 20. எடமேலையூர் 21. பேரையூர் 22. குன்னியூர் 23. கோட்டுர் 24. அரவத்தூர்.

- தொன்மையும் புராதன கலைச் சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்று தமிழகத்தின் வைணவத் திருக்கோயில்களில் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படும் பெருமை உடையது அருள்மிக ராஜகோபாலசுவாமி தி௦ருக்கோயில் ஆகும்.
- ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் நந்த வணத்தை ஒட்டி அமைந்துள்ள இரண்டாவது உட்கோபுரம் பல அழகிய சிற்பங்களைக் கொண்ட ஒரு கலைப்பட்டகமாக உள்ளது. அற்புத சிற்பங்கள் - அழியாத சின்னங்கள் - இடிபாடுகளுக்கு இடையேயும் பேசும் பதுமைகள்.
- ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் மேற்கு வாயிலில் காணப்படும் யோக நரசிம்மர், கருடன் மீது திகழும் திருமால், கண்ணபிரானின் எழிற கோலங்கள் ஆகியன நம் உள்ளத்தை நெகிழ வைக்கின்றன.
- ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் மேற்கு வாயிலில் காணப்படும் குழல் ஊதும் கோலத்தில் சங்கு சக்கரம் ஏந்தி நிற்கும திருமாலின் வடிவம் எழில் ்கொஞ்சுகின்றது.
- ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் மேற்கு வாயிலில் கோபுரத்தின் கீழ்ப்புறம் எண்ணற்ற சிற்ங்கள் கோபலனின் எண்ணிலா கோலங்கள் அத்தனையும் தெவிட்டாத தெள்ளமுதம்.
- ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் கோபுரத்தின் உட்பக்கச் சுவர்களில் சில அபுர்வமான சிற்ங்கள் காணப்படுகின்றன.
- ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் திருக்கோயிலின் கோபுரத்தின் உட்பக்கச் சுவர்களில் கலைஞன் ஒருவன் தப்பாட்டம் (பறையடிப்பது) ஆடுவதை அற்புதமான ஒரு சிறபத்தில் வடிக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் கிராமியக் கலை குறித்த சுவர் விளம்பரங்களில் காணப்படுகின்ற புதிய ஒவியங்கள் இந்த சிற்பத்தை அப்படியே ஒத்துள்ளன என்பதை எண்ணிப் பார்க்கையில் வியப்பு மேலிடுகிறது.
- திருக்கோயிலின் கோபுரத்தில் காணப்பெறும் கலைப் படைப்புகளில் தலையாயதானப் போற்றபபெறும் சிறப்பு. வாயில் நிலைக்கால்களுக்கே உரியதாகும்.

- ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் கோபுரத்தில் காணப்பெறும் - நான்கு நிலைக்கால்கள் இங்கு எழிலுடன் திகழ்கின்றன.
- ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் கோபுரத்தில் காணப்பெறும் - நான்கு நிலைக்கால்கள் கருங்கல்லில் செதுக்கப்பட்டவையதானா அல்லது மரத்தில் கடைத் தெடுக்கப்பட்டவையா என சந்தேகம் எழும் வண்ணம் அத்தனை வேலைப்பாடுகள்.
- ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் கோபுரத்தில் காணப்பெறும் - நான்கு நிலைக்கால்களில் காணப்படும் அழகிய பாவைகளும், திருமாலின் பத்து அவதாரக் காட்சிகளும், விலங்குகளும், பறவைகளும் இந்த நிலைக்க கால்களை அலங்கரிக்கும்காட்சியைப் பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும்.
- ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் கோபுரத்தில் காணப்பெறும் கோகுலத்துப் பெண்கள் நீராட, கோவிந்தன் மரமேறும் காட்சியில் தான் எத்தனை நவீனம். நளீனம். அத்தனை சிற்பங்களும் நம் சிறப்கலையின் முத்திரைகள்.
- இராஜகோபாலசுவாமித் திருக்கோயில் அர்த்த மண்டபத்திற்கு முன் உள்ள மண்டபத்தின் நான்கு தூண்களில் நான்கு சிற்பத் தொகுப்புக்கள் உள்ளன.
- இராஜகோபாலசுவாமித் திருக்கோயில் அர்த்த மண்டபத்திற்கு முன் உள்ள மண்டபத்தின் நான்கு தூண்களில் முதல் தொகுதியில் இரகுநாதனும் கோவிந்த தீட்சதரும் கோதானம் கொடுக்கும் காட்சி வடிக்கப் பெற்றுள்ளது.
- இராஜகோபாலசுவாமித் திருக்கோயில் அர்த்த மண்டபத்திற்கு முன் உள்ள மண்டபத்தின் நான்கு தூண்களில் முதல் தொகுதியில் ----இரகுநாதன் வளைந்த தொப்பி அணிந்து, இடுப்பில் ஆடையும் கத்து வாளும் திகழ நெற்றியில் திருமண் தரித்துக் கொண்டு எதிரே இருக்கும் தீட்சதர் யைன் கையில்ஏதோ ஒரு பொருளை கொடுக்கும் காட்சி உள்ளது.

- இராஜகோபாலசுவாமித் திருக்கோயில் அர்த்த மண்டபத்திற்கு முன் உள்ள மண்டபத்தின் நான்கு தூண்களில் முதல் தொகுதியில் ---தீட்சதரும் தலையில் நீண்ட குல்லாய், நெற்றியல் விபூதிப்பட்டை, மார்பில் நிண்ட ஆடை ஆகியவை திகழ மன்னனிடமிருந்து எதையோ பெறும் காட்சி சிற்பமாகக் காணப் பெறுகின்றது.
- இராஜகோபாலசுவாமித் திருக்கோயில் அர்த்த மண்டபத்திற்கு முன் உள்ள மண்டபத்தின் நான்கு தூண்களில் முதல் தொகுதியில் ---- தீட்சதர் ஐயன் பசுவின் பின்புறம் நின்று கொண்டு எதிரே நிற்கும ஒருவனுக்கு கோதானம் அளிக்கும் காட்சியும் உள்ளது. சிறப்புமிகு இச்சிற்பத் தொகுப்பு இம்மண்டபத்து வடபுறத்தூணில் காணப் பெறுகின்றது.
- இராஜகோபாலசுவாமித் திருக்கோயில் அர்த்த மண்டபத்திற்கு முன் உள்ள மண்டபத்தின் தென்புறத் தூணில், குவிக்கப் பெறறுள்ள தங்கப்பாளங்களுக்கு எதிரே ஒருபுறம் இரகுநாதனும், அவனது பட்டத்தரசி கலாவதியும் இருக்க, மறுபுறம் தீட்சதர் ஐயனும் மற்றொருவரும அமர்ந்திருக்கக் கைகளை நீட்டி இரவரும் நீர்வார்ப்பது போன்ற காட்சி சிற்பமாக வடிக்கப் பெற்றுள்ளது. இது ஸ்வர்ண மேரு தானத்தைக் குறிக்கும் சிற்பமாகும்.
- இராஜகோபாலசுவாமித் திருக்கோயில் அர்த்த மண்டபத்திற்கு முன் உள்ள மண்டபத்தின் தென்புறம் உள்ள மற்றொரு தூணில், இரகுநாதன் துலாத் தட்டில் அமர்ந்திருக்க எடைக்கு எடை பொன் நிறுக்கப் பெறும் காட்சி இடம் பெற்றுள்ளது.
- இராஜகோபாலசுவாமித் திருக்கோயில் அர்த்த மண்டபத்திற்கு முன் உள்ள மண்டபத்தின் வடபுறம் உள்ள நான்காவது தூணில் இரகுநாதனும், அவனது தேவியர் இருவரும் (கலாவதி, லெட்சுமியம்மா) சேர்ந்து நின்று கொண்டு இராஜகோபலனை வணங்கும கோலத்திலுள்ளனர்.

- இராஜகோபாலசுவாமித் திருக்கோயிலின் வடக்கு. மேற்கு மற்றும் தெற்கு இராஜகோபுரங்களில் இரகுநாதன், அவனது தேவியர். கோவிந்த தீட்சதர், மகன் விஜயராகவன் ஆகியோரது சுண்ணச்சுதைச் சிற்பங்கள் உள்ளன. இவை அனைத்தும் ஆளுயரச் சிற்பங்களாகும்.
- இராஜகோபாலனையும், பூரணி புடகலை சகிதராக அமர்ந்துள்ள சாஸ்தாவையும் (அய்யனார்) வணங்கும் இரகுநாதனின் சுதைப் படைப்புக்கள் பேரழகு மிகுந்தவையாகும்.
- இராஜகோபாலசுவாமித் திருக்கோயிலின் கோபரங்கள் அண்மையில் திருப்பணிக்கு உட்பட்டபோதும் அவற்றில் இடம்பெற்றுள்ள சுதைச் சிற்பங்களைச் சிதைக்காமல் அப்படியே காப்பாற்றியுள்ளவை மனநிலைவளிப்பதாகும்.
- இராஜகோபாலசுவாமித் திருக்கோயிலினுள் உள்ள ஊஞ்சல் மண்டபத்தின் தூண்களில் இரகுநாத நாயக்கன், மற்றும் கோவிந்த தீட்சதரின் உருவச் சிலைகள் இடம் பெற்றுள்ளன. தீட்சதரின் சிறபத்தில் மூக்கு மட்டும் உடைந்து காண்படுகிறது.
- இராஜகோபாலசுவாமித் திருக்கோயிலினுள் உள்ள ஊஞ்சல் மண்படபத்திலுள்ள அனைத்துச் சிலைளுமே திருமண் தரித்துள்போது தீட்சதர் மட்டும; நெற்றி மற்றும் உடலெங்கும் விபூதி அணிந்துள்ளதைச் சிற்பத்தில் தெளிவாகக் காணலாம். நீண்ட குல்லாய், மடிசார் வேட்டி, இடுப்பில் துண்டு, இறுக்ககமாக உடலை ஒட்டிய மேலாடை, காதில் குண்டலங்கள் திகழக் காட்சி நல்குகிறார்.
- இராஜகோபாலசுவாமித் திருக்கோயிலினுள் விமானத்தில் சுதைச் சிற்பங்களில், பெருமாள் யானைக்கு அருள்பாளிக்கும் நிகழ்ச்சி (கஜேந்திர மோட்சம்) நஞ்சுப்பாலை உண்ணும் நிகழ்ச்சி, இரணியனின் குடலை உருவுதல், வாலி சக்ரீவன் போர், இராவணன் அம்பு எய்து அழித்தால், கோயியர்களுடன் கண்ணனின் காதல் காட்சிகள், கோகுலக் கன்னியர்களின்

ஆடைகளைக் கவர்ந்து கொண்டு மரத்தின்மீது அமர்ந்திருக்கும் காட்சிகள், இதுபோல பலவும் காட்டப்பட்டுள்ளன.

- இராஜகோபாலசுவாமித் திருக்கோயிலினுள் சுவர்ப்பகுதியில் தேவகோஷ்டிகளுக்கு இருபுறமும் கும்பபஞ்சகரம் அழகு மிக்கதாய் வடிவமைக்கபட்டுள்ளன. இதன் மேற்குப் பகதியில் மகர தோரணம் சிறப்பபுற விளங்குகிறது. இதன் நடுவில் இலக்குமியும், நீராடும் யானைகளும் சிறிய வடிவில் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளன.

- மன்னார்குடி பானுகுமார் எழுதி 2005 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள “ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே” என்ற புத்தகத்தில் மன்னார்குடி வரலாற்று செய்திகளைக் காணலாம்.




- மன்னார்குடி ராகோபலாசாமி கோயில் 1995 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள மலரில் இக்கோயிலைப் பற்றிய வரலாற்று செய்திகளைக் காணலாம்.
- மன்னார்குடி வட்டத்தில் அறுவடை முடிந்து ஓய்வுக் காலங்களில் கிராமம் முழுவதும் இணைந்து கூத்தைப் பார்ப்பார்கள். தமிழகத்தின் மரபு சார்ந்த கலைகளுள் ஒன்று கூத்துக் கலையாகும்.
- சிறுத்தொண்ட நாயனார் இசைக்கூத்து. உருக்கமாங்கத பாகவதமேளா, பிரகலாத நாடகம், சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, திரௌபதி அம்மன் கூத்து. மனுநீதிச் சோழ மகராச

நாடகம் போன்ற பாரம்பரிய கூத்துக்கள் மன்னார்குடி வட்டத்தில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

- வடுவூருக்கருகில் உள்ள பாகவதமேளம் என்ற ஊர் இக்கலைஞர்களுக்கு தானமாக கொடுக்கப்பட்ட ஊர்களில் ஒன்று.
- மன்னார்குடி வட்டத்தில் தொன்றுதொட்டு கூத்துக்கள் கட்டப்பட்டுள்ளதைக் கல்வெட்டுக்களும், சிற்பங்களும் உணர்த்துகின்றன. ஆசிரியர்கள் கூத்துக்கலை கலைஞர்களை உருவாக்கி வருகின்றனர்.
- மன்னார்குடியில் இன்றும் கூத்துக் கலைஞர்கள் எம்.ஜி.நடராஜப்பிள்ளை, சத்தியமூர்த்தி, காமராஜ் போன்றவர்கள் கூத்து, நாடகம் நடத்தி வருகின்றனர்.
- காரக்கோட்டை திரு. எஸ் சத்தியமூர்த்தி சமீபத்தில் கலைமாமணி பட்டம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.
- திருவாரூர் தெட்சிணாமூர்த்தி சுவாமிகள் வரலாற்றை மன்னார்குடி காமராஜ் நாடகமாக நடித்து வருகிறார்.
- லண்டன் பிரிட்டிஷ் மியுசியத்தில் "மன்னார்குடி ராஜகோபலன் ஓவியம்" பார்வைக்கு இன்றும் உள்ளது. ஓவியத்தின் கீழ் தெலுங்கில் "உபயநாச்சியாருல ஸமேதமுக ராஜ மன்னாரு ஸ்வாமி" -என்று எழுதப்பெற்றுள்ளது.

- ஆறுமுக சீதாராமன் எழுதி 2996 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள "தஞ்சை நாயக்கர் காசுகள்" என்ற புத்தகத்தில் மன்னார்குடி வரலாற்று செய்திகளைக் காணலாம்.
- தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியிட்டுள்ள "தொல்லியல் நொக்கில் தமிழகம்" என்ற புத்தகத்தில் மன்னார்குடி வரலாற்று செய்திகளைக் காணலாம்.
- சென்னை ஆவணக் காப்பகத்தில் Thanjavur Gazetteer Vol.I Chapter X p.165-166 ல் மன்னார்குடி வரலாற்று செய்திகளைக் காணலாம்.
- World Associations of Adult Education>, Fifteenth Annual Report 1933-34 London – p 2 மன்னார்குடி வரலாற்று செய்திகளைக் காணலாம்.

- சக்தி வேங்கடசாமி எழுதியுள்ள " தமிழ்நாடடின் புவியியல்" என்ற புத்தகத்தில் மன்னார்குடி புவியியல் பற்றி தெரிந்து கொள்ளலாம்.
- மன்னார்குடி இராஜகோபால சுவாமி கோயிலில் பல சிறந்த நாடகங்கள் நிகழ்த்தப் பெற்றதற்கான சான்றுகளை -தஞ்சை விஜயராகவ நாயக்கர் கால நாடக நூல்கள் மூலமாக அறியமுடிகிறது.
- மன்னார்குடி கே. செயலெட்சமி சிறந்த பரதநாட்டியக் கலைஞர். வெளி நாடுகளுக்கும் சென்று வந்தவர். "பரத நாட்டியப் பேரொளி", நாட்டியரத்தனா, "கலைமாமணி" போன்ற பட்டங்கள் பெற்றவர்.
- மன்னார்குடி இராஜகோபாலசுவாமி ஆலயத்தில் நாட்டிய மேளத்தை நிருவகித்துச் சேவை செய்யும் பணியில் விஜயராகவ நாயக்கரால் நியமிக்கப்பெற்ற, மன்னார்குடியில் குடியெறியவர் கோபாலகிருஷ்ண நட்டுவனார்.
- கோபாலகிருஷ்ண நட்டுவனார் மன்னார்குடியில் பல நாட்டியக் க்லைஞைர்களை உருவாக்கி உள்ளார். வைத்தியலிங்ம் நட்டுவனார், சுவாமிநாத நட்டுவனார் போன்ற புகழ் பெற்ற நட்டுவானார்களையும் உருவாக்கியுள்ளார்.
- நாட்டியக் கலையில் நாட்டியக் கலைஞர்களை சிறப்புறச் செய்து தானும் சிறப்புற்ற விளங்கி வந்தள்ளது மன்னார்குடி வட்டம்.
- விஜயராவநாயக்கர் 32 க்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை எழுதி, அவற்றில் பெரும்பாலான நாடகங்களை மன்னார்குடி இராஜகோபால் சுவாமி திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்திலேயே நடிக்கவும் செய்தார்.
- 1632 லிருந்து 1675 வரை தஞ்சாவூரை ஆட்சி செய்த விஜயராகவ நாயக்கரின் குலதெய்வம் மன்னார்குடி இராகோபாலப் பெருமான் என்பதைப் பல இலக்கியங்கள் கூறுகின்றன.

- பாகவதமேள என்ற நாட்டிய நாடக மரபில் பிரதான நாடகமாகப் போற்றப் பெறும் பிரகலாத நாடகம் எனும் தெலுங்கு பாகவதமேள நாடகத்தினை-- விஜயராகவ நாயக்கரே எழுதி --மன்னார்குடி கோயிலில் அரங்கேற்றினார் என்பதைச்-- சுவடிகள் வாயிலாகக் காணும்போது, குச்சுப்புடி நாட்டிய மரபின் பல அம்சங்கள்-- மன்னார்குடியிலிருந்துதான் சென்றுள்ளன என்று வரலாற்று ஆய்வாளர்கள் பதிவு செய்துள்ளனர்.
- இசை, நாடகம் முதலிய துறைகளில் நிபுணராக விளங்கிய விஜயராகவன் இராஜகோலன் மீது கொண்ட பக்தியினால் தன்னை "மன்னாருதாசன்" என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைந்தார்.
- விஜயராகவ நாயக்கர் மன்னாரு மீது கொண்ட பக்தயினால் தன் மகனுக்கு மன்னாருதேவன் என்று பெயரிட்டார்.
- தந்தை விஜயராகவ நாயக்கரைப் போலவே தானும் இசை, நாடகம் இயற்றுவதில் வல்லமையோடு மன்னாருதேவன் வளர்ந்தான்.
- மன்னாருதேவன் எழுதிய "கேமாப்ஜ நாயகி ஸ்வயம்வரமு" எனும் செங்கமலவல்லியின் திருமண வைபவம் பற்றிய நாட்டிய நாடகம் மிகச்சிறந்த தெலுங்கு நாடகம் என்பதில் ஐயமில்லை.
- கேமாப்ஜ நாயகி ஸ்வயம்வரமு" எனும் செங்கமலவல்லியின் திருமண வைபவம் பற்றிய நாட்டிய நாடகம் மிகச்சிறந்த தெலுங்கு நாடகம், மன்னார்குடி இராகோபால சுவாமித் திருக்கோயிலில், மன்னன் விஜயராகவ நாய்க்கர் , குலகுர ஷஹ்ரீனிவாச தாத்தாச்சாரியார் ஆகியோர் இருக்க, இராஜகோபலப் பெருமைானையும் செங்கமலவல்லி நாச்சியரையும் எழுந்தருளச் செய்து. நாடகமாக நடிக்கப் பெற்றள்ளது.

- பி.எம். சுந்தரம் எழுதி வெளியிட்டுள்ள "மங்கள இசை மன்னர்கள் " என்ற புத்தகத்தில் மன்னார்குடி தந்த சரித்திரம் படைத்த நாதஸ்வர தவில் வித்வான் பெயர்களையும் அவர்களைப் பற்றிய செய்திகளை பார்க்க முடிகிறது..
- பெ. இராசு எழுதியுள்ள "ஜெயங்கொண்டநாதர் கோயில் செப்பெடுகள் " என்ற கட்டுரையை மன்னார்குடி ராகோபலாசாமி கோயில் 1995 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள மலரில் காணலாம்.
- மன்னர் விஜயராகவ நாயக்கர் அவையை அலங்கரித்த பெண்பாற் புலவர் ரங்காஜம்மா என்பவராவார்.
- ரங்கஜம்மாவின் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கது மன்னாருதாச விலாசம் எனும் நாடக நூலாகும்.
- மன்னாருதாச விலாசம் எனும் நாடக நூலில் மன்னார்குடி கோயில், திருவிழாக்கள், மன்னனார். செய்கமலவல்லி, மன்னன் விஜயராகவன், அவனது பரிவாரத்தார் என்று நம் கண் முன் காட்சிப்படுத்துகிறார்.
- மன்னாருதாச விலாசம் எனும் நாடகம், சுவையான நாடகம் மட்டுமன்று. சுவையான மன்னார்குடி வரலாறு காட்டும் கண்ணாடி என்றே சொல்லலாம்.
- மன்னாருதாச விலாசம் எனும் நாடகத்தில் இராஜகோபால் சுவாமி கோயிலில் நடப்பதாக விவரிக்கப்பட்டுள்ள காட்சி ஒன்றின் மூலமாக இக்கோயிலின் ஆண்டு வருமானமும் சொந்தமான கிராமங்களின் எண்ணிக்கையும் கூறப்பெறுகின்றது.
- தஞ்சை அரண்மனையிலிருந்து இராஜகோபால் சுவாமி திருக்கோயிலுக்கு ஒவ்வொரு நாளும் 50 பொற் காசுகள் வழங்கப்பட்டது என்ற செய்தியையும் மன்னாருதாச விலாசம் எனும் நாடகத்தின் வாயிலாக அறியலாம்.
- மன்னாருதாசவிலாசம் எனும் இந்நாடகம் மன்னாரதாசன் ஏனம் விஜயராகவனின் வரலாறு, மன்னார்குடி ்திருக்கோயில்,

மன்னனார் எனும் இராஸகோபாலப் பெருமானின்ன கீர்த்திக்ள ஆகிய பல செய்திகளை அறியப் பெரிதும துணைபுரிகின்றது.

- மன்னார்குடியில் ஐம்பாண்டுகளாக இளைஞர் கலாமன்றம் என்ற அமைப்பின் மூலம் திரு. வெங்கடாசலம் சிறந்த நாடகங்களை நடத்தி வருகிறார்.
- காரைக்குடி ஒரு கண்ணதாசைனத் தந்தது. மன்னார்குடி ஒரு மனோராமாவைத் தந்தது.
- மன்னார்குடியில் பிறந்த மனோராமா பெரிய பாப்பா, ஆச்சி, பெண் சிவாஜி என்று அழைக்கப்படுகிறார்.
- வாய்ப்பாட்டிலும், இசைக் கருவி இயக்கும கலையிலும் மன்னார்குடி வட்டம் எண்ணற்ற கலைஞர்களை இசை உலகிற்கு அளித்துள்ளது.
- கர்நாடக இசையில் பல சாகித்ய கர்த்தாக்களை மன்னார்கடி தந்துள்ளது.
- கோட்டுவாத்தியக் கலைஞர் சாவித்திரியம்மாள், முகர்சிங் கலைஞர் சீதாராமைய்யர், நடேசபிள்ளை, கஞ்சிராவித்வான் தெட்சிணாமூர்த்தி பிள்ளை போன்றோர் பிறந்ததும், வளர்ந்ததும். வாழ்ந்ததும் மன்னார்குடிதான்.
- மன்னார்குடி சாம்பசி பாகவதர் (கதாகாலட்சேபம்) அண்ணாமலைப் பல்கலைக் கழக்தில் சிறிது காலம் இசைபயின்றார். தாம் பொறுப்பேற்றுள்ள சபாவில் கதாகாலட்சேப கலைஞர்கள் வராதபோது தாமே காலட்சேபம் புரிந்து கலைதிறனை வெிளப்படுததினார்.
- மன்னார்குடி சாம்பசி பாகவதர் (கதாகாலட்சேபம்) மகாராஜபுரம் விஸ்வநாத அய்யரிடம் வாய்ப்பாட்டும், மதுரை நாராயண பாகவதரிடம் உறரிகதையும் கற்றார். சென்னை அரசு இசைக் கல்லூரியில் உறரிகதை ஆசிரியராகப் பணிபுரிந்தார்.
- மன்னார்குடி சாம்பசி பாகவதர் (கதாகாலட்சேபம்) சென்னை தியாகராஜ வித்வத் சமாஜத்தின் செயலாளராகப் பணிபுரிந்துள்ளார். 200க்கு மேற்பட்ட சுருதிகளும்,

வர்ணங்களும் இயற்றியவர். கதாகாலட்சேபக் கலைக்காக நூற்றுக்கணக்கில் "நீரூணங்களும்" அமைத்தவர். நினைத்தவுடன் கவி இயற்றும் சிறப்பினர்.

- 60 வருடம் அனுபவமுள்ள மன்னார்குடி சாம்பசிவ பாகவதர் (கதாகாலட்சேபம்) "சங்கீத ரத்தனம்" "சங்கீத சாகித்ய ஜோதி" "சங்கீத கலாசிகாமணி" "கலைமாமணி (1974) போன்ற பல பட்டங்களைப் பெற்றவர்.

- 'பாருக்குள்ளே நல்ல நாடு' பாடல் பிறந்த இடம், மகாகவி பாரதியார் வசித்த மேலநாகை, மன்னார்குடி

- 1918ம் ஆண்டு பாண்டிச்சேரியில் தலைமறைவு வாழ்க்கை நடத்திய பாரதியார், அங்கு சலிப்பு ஏற்பட்டதால், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அடுத்த மேலநாகை கிராமத்தில் இருந்த வாசுதேவ சுவாமிகள் ஆசிரமத்தில் நண்பர் கொடியாளம் ரெங்கசாமி என்பவர் உதவியுடன் வந்து தங்கினார். இங்கு வசிக்கும்போது பாரதியார் தன்னை யாரும் அடையாளம் கண்டுவிடக்கூடாது என்பதற்காக முண்டாசு கட்டாமலும், தனக்குரிய அடையாளமான மீசையை மழித்தும் இருந்தார்.



- மன்னார்குடி: மகாகவி பாரதியார் மேலநாகையில் தலைமறைவு வாழ்க்கை நடத்தினார். அவர் அங்கு தியானம் செய்த இடத்தில் நினைவிடம் அமைக்கும் பணி நிதிப் பற்றாக்குறையால் பாதியில் நிற்கிறது. சுதந்திர போராட்டத்தின்போது நாட்டு மக்களைத் தட்டி எழுப்பும் வகையில் கவிதைகளைப் படைத்தவர் மகாகவி பாரதியார். ஆங்கிலேய அரசு பாரதியாரைத் தேடி வந்தது. முண்டாசுக் கவிஞன் இதனால் தலைமறைவு வாழ்க்கை நடத்தினார்.

- மன்னார்குடி நகரத்தோட மையப் பகுதியான பந்தலடிதான் ஊரின் கடை வீதி. சகலமும் கிடைக்கும் இடம். அங்கே கிடைக்கத் தவறுவதை, செவ்வாய்க் கிழமைகளில் கூடும் வாரச் சந்தையில் வாங்கலாம்.
- மன்னார்குடியில் நாடகங்கள் நடந்த காலத்தில் 'பத்மா கொட்டகை' சிறந்த பொழுதுபோக்கு. சினிமா வந்த பிறகு, பல டாக்கீஸ்கள் வந்துச்சு. நிலைச்சது சாந்தி தியேட்டரும் சாமி தியேட்டரும்தான்.
- மன்னார்குடியோட முக்கியமான இன்னொரு சுவாரஸ்யம், சாப்பாடு. 'டெல்லி ஸ்வீட்ஸ்'ல அல்வா - மணி காரபூந்தி, உடுப்பி ஹோட்டல்ல ரவா தோசை - காபி, குஞ்சான் கடை பக்கோடா - வடை, கிருஷ்ணா பேக்கரி இனிப்பு பப்ஸ், அஞ்சாம் நம்பர் கடை லஸ்ஸி, நேதாஜி கடை டீ... என்று மன்னார்குடி ஸ்பெஷல்னு ஒரு பெரிய பட்டியலே உண்டு. அசைவப் பிரியர்கள் மாமா கடை பிரியாணியையும் அன்வர் கடை புரோட்டாவையும் இதில் சேர்த்துக்கலாம்.
- எவ்வளவோ ஊர்களுக்குப் போய் இருப்பீங்க. என்னென்னவோ பார்த்து இருப்பீங்க. மன்னார்குடி தேரடியில் புறப்பட்டு பந்தலடி வரைக்கும் கடை வீதியில் ஒரு நடை காலாற நடந்து பாருங்க... மன்னார்குடி ஊர் இல்லைய்யா, அது ஒரு வாழ்க்கை!''
- இவ்வூரின் கிழக்கு எல்லையில் அரசர் பாளையம்' என்றும் தெற்கெல்லையில் உருக்குமணி பாளையம் என்றும் இரண்டு பாளையங்கள் பாளையர் இருந்த இடம் அரசர் பாளையம்.

உருக்குமணி கோயிலின் பாதுகாப்பான பாளையர் இருந்த இடம் உருக்குமணி பாளையம். இவ்வாறு பல பாளையங்கள் தமிழகத்தில் ஆங்காங்கு உள்ளன.

- முதற் குலோத்துங்கன் வைணவக்) கோயிலை எழுப்பினான். அது குலோத்துங்க சோழ விண்ணகரம்' என்று கல்வெட்டில் குறிக்கப்பெறும். அது இப்போது இராச கோபாலசாமி கோயில் என்று சமயத்தாரால் மாற்றப் பெற்று வரலாற்றுப் பெயரை இழந்து நிற்கிறது. எழுப்பித்தவன் பெயரையும் மறைத்து அழித்து நிற்கிறது.
- மன்னார்குடியில் அரசரது நேர்முகக் குடிகள் இருந்தமையால் இராச மன்னார்குடி என்றும் பெயர் வழங்கப் பெறுகிறது. **மன்னார்குடியில் பொருளாதாரம் விவசாயம் இங்கு நெல், பருத்தி, உளுந்து, கரும்பு, ஆகியவை அதிகமாக சாகுபடி செய்யபடுகிறது,**

- **பாமனியாறு, கோரையாறு, மற்றும் கிணற்றுப்பாசனத்தை நம்பியே இங்கு விவசாயம் நடைபெறுகிறது.**
- தமிழ்நாட்டிலேயே அதிகமாக டீ போடும்-ஒரு நாளில் 5000 டீ போடும் மன்னார்குடி நேதாஜி.
- மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலசுவாமி தலப் பெருமாளை 'நித்ய உற்சவப் பெருமாள்' என்று அழைப்பர். ஒவ்வொரு மாதமும் இறைவனுக்கு உற்சவங்கள் நடைபெற்று வருகிறது.
- மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலசுவாமி கோவிலில் பங்குனியில் பிரம்மோற்ஸவம் நடைபெறும். 18 நாட்கள் பல்வேறு வாகனங்களில் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். அடுத்த 10 நாட்கள் விடையாற்றி உற்சவம் நடைபெற்று, இறுதியில் கோயிலுக்கு அருகில் இருக்கும் கிருஷ்ணதீர்த்தக் குளத்தில் 'தெப்போற்சவம்' நடைபெறும். இத்திருவிழாவின்போது

பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.



- 

- மன்னார்குடியில், கூட்டுறவு ஸ்தாபனங்களை வலுவாகஉருவாக்கியதில்சுவாமிநாத கொத்தனார் பங்களிப்பு மகத்தானது. இவரது முயற்சியால்தான் நாட்டுக்கே

முன்மாதிரியாக 'கூட்டுறவு பால் சங்கம்' இங்கே உருவானது.



- ராஜகோபால சுவாமி கோயிலுக்குஇணையாப் பழமையான கோயிலான ஜெயங்கொண்ட நாதர் கோயில் கிட்டத்தட்ட அழிஞ்சுடுச்சு. பழமையான திருவிழாக்களில் ஒண்ணான ஆருத்ரா தரிசனமும் வழக்கொழிஞ்சுபோச்சு. இப்ப அது ரெண்டையும் மீட்டுக்கொண்டு வந்துள்ளனர்.



- மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலசுவாமி கோவிலில் சித்திரை, வைகாசியில் கோடை உற்சவம் நடைபெறும்.
- மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலசுவாமி கோவிலில்
- ஆடி மாதத்தில் செங்கமலத்தாயாருக்கு திருவிழா நடைபெறும்.
- ஆடிப்பூரத்தன்று தாயாருக்குத் தேர் திருவிழா நடைபெறும்.

- மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலசுவாமி கோவிலில் ஆவணி மாதம் உரியடி திருவிழா நடைபெறும்.
- மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலசுவாமி கோவிலில் புரட்டாசி மாதம் நவராத்திரி உற்சவம் நடைபெறும்.
- மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலசுவாமி கோவிலில் ஐப்பசி மாதம் தீபாவளி காலை பெருமாள் புறப்பாடு, ஆழ்வார்கள் மங்களாஸாசனம் கோலாட்ட உற்சவம் 10 நாட்கள் நடைபெறம்.

- மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலசுவாமி கோவிலில் கார்த்திகை மாதம் ஸ்ரீ பாஞ்சராத்ர தீபம் (திருக்கிருத்திகை) ஏற்றும் விழா நடைபெறும்.
- மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலசுவாமி கோவிலில் மார்கழி மாதம் தனுர் மாத பூஜை ஆரம்பமாகும். பகல் பத்து உற்சவம் தொடங்கி வைகுண்ட ஏகாதசி அன்று பரமபத வாசல் திறப்பு நிடைபெற்று இராபத்து உற்சவம் நடைபெறும்.

- தை மாதம் சங்கராந்தி பெருமாளுக்கு கொண்டாடப்படும். கனு பாரி வேட்டை குதிரை வாகனத்தில் சென்று திருமங்கை மன்னன் வேடுபறி நிகழ்ச்சி நடந்தேறும். பின் மட்டையடி உற்சவம் நடைபெறும். தை பூசத்தன்று தீர்த்தவாரி நடைபெறும். தாயாருக்கு இம்மாத வெள்ளிக்கிழமைகளில் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும்.

- மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலசுவாமி கோவிலில் மாசி மாதம் உற்சவத் தாயாருக்கு ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். மாசி மகம் தீர்த்தவாரி நடைபெறும். பங்குனி மாதத்தில் பிரம்மோற்சவம் நடைபெறும்.

- மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலசுவாமி கோவிலில் உற்சவ நாளில் 19 விதமான வாகனங்களில் வருவது சிறப்பானதாகும். த்வஜா ரோஹணம், புன்னை வாகனம், ஹம்ஸ வாகனம், கோவர்த்தனகிரி, பஞ்சமுக ஹனுமார், கண்டபேரண்ட பக்ஷி, புஷ்ப பல்லக்கு, ரிஷயமுக பர்வதம், சிம்ம வாகனம், சூர்ய பிரபை, சேஷவாகனம், கருட சேவை, ஹனுமந்த வாகனம், யானை வாகனம், கோரதம், வெண்ணெய்த்தாழி, திருத்தேர் முதலான நிகழ்வுகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.



- ராஜகோபாலர் இக்கோயிலில் இடையர் கோலத்தில் பாலனாக காட்சி தருகிறார். ஒரு வேஷ்டி அணிந்து அதையே தலைப்பாகையாக சுருட்டி, வலது கையில் வெண்ணெய் மற்றும் சாட்டை வைத்து காட்சி தருகிறார். இடுப்பில் சலங்கை, சாவிக் கொத்து, கையில் வளையல், காலில் தண்டை, கொலுசு ஆகிய குழந்தை அணிகலன்கள் அணிந்திருக்கிறார். உடன் ஒரு பசுவும் இரண்டு கன்றுகளம்

உள்ளன.




- மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலசுவாமி கோவிலில் தாயார் சன்னதி அருகே பெருமாள் சன்னதி எதிரே பெண் வடிவ கருடாழ்வார் இருக்கிறார். மதுரை கள்ளழகர் கோயில் போல, தினமும் மாலையில் மட்டும் தோசை நைவெத்தியம் படைக்கப்படுகிறது.
- மன்னார்குடி ராஜகோபால சுவாமியிடம் வேண்டிக் கொள்ள குடும்பத்தில் ஐஸ்வர்யம் உண்டாகும். திருமண, புத்திர தோஷம் நீங்கும் என்பது நம்பிக்கை. கால்நடைகள் நோயின்றி வாழ இவரிடம் வேண்டிக் கொள்கிறார்கள்.
- கம்சன் வசுதேவர், தேவகி இருவரையும் சிறையில் அடைத்தான். வசுதேவரும் தேவகியும் வருந்தியபோது பெருமாள் அவர்கள் முன் தோன்றி தானே அவர்களுக்கு எட்டாவது மகனாகப் பிறக்கப் போவதாகக் கூறினார். தனது லீலைகளைக் காண விரும்பி கோபிலர், கோபிரளயர் என்ற முனிவர்களுக்கு முதலில் வாசுதேவராகக் காட்சியளித்தார். 32ம் லீலையாக கோகுலத்தில் பசுக்கள் மேய்க்கும் இடையனாக மன்னார்குடியில் காட்சியத்தார்.

- இக்கோயிலில் மூலவர் வாசுதேவப் பெருமாள் எனறும், ஸ்ரீ தேவி பூமிதேவி முதலானோருடன் காட்சியளிக்கிறார். உற்சவர் ராஜகோபால சுவாமி ருக்மணி சத்யபாமாவுடன் காட்சி தருகிறார். தினமும் காலையில் கோவிலில் கோபூஜை செய்யப்படுகிறது.



- பார் பகழும் பங்குனி பிரம்மோற்சவம் 16ம் நாளில் வெண்ணெய்தாழி திருவிழா மன்னார்குடியில் நடைபெறுகிறது. பெருமாள் தவழ்ந்த கோலத்தில் கையில் வெண்ணெயுடன் திருவீதி உலா செல்கிறார். வழிநெடுகிலும் பக்தர்கள் இறைவன் மீது வெண்ணைய் வீசுகிறார்கள். மாலையில் செட்டியார் வேடமிட்டு வெண்ணை விற்கிறார். இரவு குதிரைவாகனம் ஏறி திருக்கோயிலை வந்தடைகிறார்



.

- மன்னார்குடி தலத் தாயார் செங்கமலம். இவர் கோயிலின் படியைத் தாண்டி வெளியில் செல்லமாட்டார். ஆகவே இவருக்கு 'படிதாண்டா பத்தினி' என்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று. இவர் பிறந்த நட்சத்திரமான பூசத்தன்று விசேஷ பூசைகள் நடைபெறுகிறது. தை 4ம் நாள் மட்டும் சுவாமி தாயாருடன் சேர்ந்த ஏக சிம்மாசனத்தில் காட்சி தருகின்றார். இவரது சன்னதி எதிரே பெண் வடிவ கருடாழ்வார் இருக்கிறார்.
- வாசுதேவப் பெருமாள் சன்னதி ராஜகோபாசாமி சுற்று பிரகாரத்தில் இவருக்கு முன் பிறந்த மாயா, துர்க்கை என்றும் பெயரில் அருள்பாலிக்கிறார். குழந்தை வேண்டி இவரிடம் தொட்டில் கட்டுவது வழக்கமாக அமைந்துள்ளது.
- முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070 – 1110) கட்டிய 51 கோயில்களில் சைவக் கோயில்கள் 39ம் வைணவக் கோயில்கள் 10ம் தமிழகம் முழுவதும் அமைந்துள்ளன. இவ்வரிசையில் இம்மன்னனின் 48வது ஆட்சியாண்டில் (கி.பி 1118 ) கட்டப்பட்ட மன்னாற்குடி இராஜகோபாலாசுவாமி கோயிலும் ஒன்றாகும். இக்கோயில் வைணவ வழிபாட்டு மையமாகவும் கருதப்படுகிறது.

- மன்னார்குடி வட்டத்தில் காணப்படும் மங்கலங்கள் இதற்கு முன்னர்க் காணப்பட்ட ஊர்களிலிருந்து வேறுபட்டுள்ளன. 1. கோந்தமங்கலம் 2. கண்டமங்கலம் 3. செருமங்கலம் 4. தலையாமங்கலம்.

- மன்னார்குடி பல புகழ் பெற்ற நாதஸ்வர கலைஞர்களைத் தந்துள்ளது. மன்னார்குடி மாணிக்கம் பிள்ளை, கோட்டுர் ராஜரத்தினம் பிள்ளை, மன்னார்குடி பரமசிவம் பிள்ளை பிரபலமானவர்கள்.
- மன்னார்குடி நாராயணசாமி பிள்ளை (1880-1940) ஈடிணையற்ற நாதஸ்வரக் கலைஞர். கொன்னக்கோல் பக்கிரயாப்பிள்ளையின் சகோதரர். வாயப்பாட்டுக்

கச்சேரிகளும் செய்வார். இவருக்கு தவில் வாசித்தவர்களில் மன்னர்குடி நடேச பிள்ளை, வேதாரண்யம் வேணுப்பிள்ளை, சிக்ல் ருத்ராபதி பிள்ளை முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

- மன்னார்குடி மாணிக்கம் பிள்ளை (1898-1947) ஒப்பற்ற நாதஸ்வர வித்வானாகப் பிரகாசித்தார். ராக ஆலாபணை செய்வதில் இணையற்ற கற்பனை நிறைந்தவர். ஓரிரு நிமிடங்களிலேயே ரகத்தின் ஜீவனை, பூர்ணமான ஸ்வருபத்தில் அதன் சுவையை வெளிப்படுத்தும் வன்மை பெற்றிருந்தார். மன்னார்குடி நாதஸ்வர சரத்திரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றவர்.
- கோட்டுர் என். ராஜரத்தினம் 40 ஆண்டு கால அனுபவம் பெற்ற ஒப்பற்ற நாதஸ்வர கலைஞர். "நாதஸ்வர கலாநிதி" "இன்பகான திலகம்" "கலைமாமணி" போன்ற பட்டங்கள் பெற்றவர்.
- **தி. ஜானகிராமன்** தனது ஜப்பான் பயண அனுபவங்களை உதயசூரியன் என்னும் தலைப்பில் சுதேசமித்திரன் வார இதழில் எழுதினார். இது 1967ல் நூலாக வெளியிடப்பெற்றது. ரோமானிய செக்கோஸ்லோவோக்கியா சென்ற அனுபவங்களை கருங்கடலும் கலைக்கடலும் என்னும் தலைப்பில் 1974ல் வெளியிட்டார்.
- **தி. ஜானகிராமன்** *அன்னை* (மூலம்: *கிரேசியா டெலடா* - நோபல் பரிசு பெற்றது)
- தி. ஜானகிராமன் **குறுநாவல்கள் *கமலம்* (1963), *தோடு*" (1963), *அவலும் உமியும்* (1963), *சிவஞானம்* (1964), *நாலாவது சார்* (1964), *வீடு***
- தி. ஜானகிராமன் **சிறுகதைகள் பாயசம் – பிடிகருணை-மனிதாபிமானம்-யாதும் ஊரே-அக்பர் சாஸ்திரிஅடி-சாப்பாடு போட்டு நாற்பது ரூபாய்-சிலிர்ப்பு-கடன் தீர்ந்தது-சிவப்பு ரிக்ஷா-சக்தி வைத்தியம்-எருமைப் பொங்கல்-ஒரு துளி துக்கம்-கமலம்-கொட்டுமேளம்-சிவஞானம்**
- தி. ஜானகிராமன் **பயண நூல்கள்-"உதயசூரியன்" (1967)-"கருங்கடலும் கலைக்கடலும் (1974)**

- **தி. ஜானகிராமன் கட்டுரை -*உதயசூரியன்* (ஜப்பான் பயண நூல்)-*அடுத்த வீடு ஐம்பது மைல்* (பயணக் கட்டுரை)- *கருங்கடலும் கலைக்கடலும்* (பயணக் கட்டுரை)-*நடந்தாய் வாழி காவேரி* (காவேரி கரை வழியாக பயணம்)**
- **தி. ஜானகிராமன் நாடகம்-"நாலுவேலி நிலம்" (1958)- "வடிவேல் வாத்தியார்** *(1963)*, **-"டாக்டர் மருந்து"**
- தி.ஜா எழுதிய நாவல்கள் : மோகமுள் -அமிர்தம் –அம்மா-- அந்ததாள் -மரப்பசு -நளபாகம் -மலர்மஞ்சம் -உயிர்த்தேன் அன்பே ஆரமுதே -செம்பருத்தி -அடி
- சக்தி வைத்தியம் என்ற சிறுகதைத் தொகுப்புக்காக தி.ஜா தமிழுக்கான சாகித்ய அகாதமி விருது பெற்றவர்.
- தி.ஜா நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைள், கட்டுரைகள், மூன்று நாடகங்கள், பயண நூல்கள். இவர் சமையற்கலையிலும் வல்லவர். இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம் முதலியவற்றிலும் ஈடுபாடு மிக்கவர்.
- மன்னைக்கு பெருமை சேர்த்த தலைசிறந்த தமிழ் எழுத்தாளர் **தி. ஜானகிராமன்**.
- **தி. ஜானகிராமன்** இவர் தஞ்சாவூர் புனித பீட்டர் பள்ளியிலும், சென்ரல் பிரைமரிப் பள்ளியிலும் தொடக்கக் கல்வியையும், 1929 - 1936 வரை கல்யாண சுந்தரம் உயர்நிலைப்பள்ளியில் உயர்நிலைக் கல்வியையும் கற்றவர். 1936 - 194 வரை கும்பகோணம் அரசினர் கல்லூரியில் இன்டர்மீடியட்டும், பி.ஏ.வும் பயின்றவர்.
- **தி. ஜானகிராமன்** இவர்1943 - 1944 வரை கும்பகோணம் நகர உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகவும், 1944 - 1945 வரை சென்னை எழும்பூர் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகவும், 1945 - 1954 வரை 9 ஆண்டுகள் தஞ்சை மாவட்டம் ஐயம்பேட்டையிலும், குத்தாலம் பள்ளியிலும் ஆசிரியராகவும் பணியாற்றியவர்
- வானொலியில் பணியாற்றி ஓய்வு பெற்றபின் இலக்கிய இதழாக விளங்கிய கணையாழி மாத இதழில் ஆசிரியராகப் பணியாற்றி வந்த தி. ஜானகிராமன் 1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு சிறு உடல் நலக் குறைவிற்குப் பிறகு இயற்கை எய்தினார்.

- மன்னார்குடி வட்டத்தில் கோட்டை என்ற பெயரினைப் பெற்றுள்ள சில ஊர்கள் உண்மையிலேயே அவ்வவூர் ஏதாவதொரு கோட்டையை உடையதாக வும், வேறு சில ஊர்கள் காரணமின்றி கோட்டை என்ற முடிவினை உடையதாகவும்உள்ளன.
- மன்னார்குடிவட்டத்தில் கோட்டை என்று முடியும் 11 ஊர்கள் அமைந்துள்ளன. 1.நெடுவாக்கோட்டை 2. மூவர் கோட்டை 3. காரக் கோட்டை 4. தளிக்கோட்டை 5. உள்ளிக் கோட்டை 6. கூப்பாச்சிக் கோட்டை 7. பரவாக்கோட்டை 8. சுந்தரக் கோட்டை 9. திருமக்கோட்டை 10. பளையக் கோட்டை 11. பருத்திக் கோட்டை.

- மன்னார்குடி பரமசிவம் பிள்ளை (1929-1976) தனது மாயக் குழலிசையால் இப்பரபஞ்சத்தையே தன்னிடம் கவர்ந்த ராஜகோபலானையொப்ப, தன் நாதஸ்வரக் குழலிசையால் கேட்பவரையெல்லாம் “பிரம்மாஸ்திரம்” போல் கவர்ந்திழுத்தார்.
- மிருதங்க வித்வான் <u>மன்னார்குடி ஏ.ஈஸ்வரன்</u> எட்டு வயதில் கச்சேரி செய்தார். புகழ்பெற்ற மிருதங்க வித்வான். அகில இந்திய வானொலியில் “ஏ” நிலைக் கலைஞைராகப் பணியாற்றியவர். உயர்முதல் நிலைக் கலைஞர்களின் இசை நிழ்ச்சிகளில் பக்க வாத்தியம் வாசித்தவர். உலகம் முழுவதும் கச்சேரி நடத்தியுள்ளார். “லய கலாதார சாம்ரா” “கலைமாமணி” போன்ற பட்டங்கள் பெற்றுள்ளார்.
- <u>மன்னார்குடி எம்.ஆர். வாசுதேவன்</u> இந்தியாவில் பல நகரங்களின் மேடைகளில் தவில் இசைத்து முழக்கியவர். அகில இந்திய வானொலியின் “ஏ” நிலைக் கலைஞர். “இசை மாமுரசு” “இன்பகான திலகம்” “கற்பனைகலாநிதி” “கலைமாமணி” போன்ற பட்டங்கள் பெற்றவர்.
- மன்னார்குடியின் இயற்கை வளச் சிறப்பையும், அருள்மிகு இராஜகோபால சுவாமி கோயில் “<u>செண்டடிகர் சன்னதி</u>” என்றும் செண்டலங்காரன் விறலிவிடு தூது இலக்கியம் வாயிலாக அறியப்படுகிறது.

- மன்னார்குடியில் சிறப்பியல்புகள் செண்டலங்காரன் விறலிவிடு தூது இலக்கியத்தில் பல இடங்களில் பேச்படுகிறது. சரஸ்வதி மகாலில் இந்தச் சுவடி உள்ளது.
- இராஜமன்னார்குடியின் இயற்கை வனப்பை எடுத்தியம்புகிறது <u>விஜயகுனா சரிதம்</u> என்னும் சமஸ்கிருத நூல்.
- மன்னார்குடி வட்டத்தில் தோன்றிய, தோன்றிக் கொண்டிருக்கிற படைப்புகளும் இலக்கியப் பெருமையைப் பெற்றுள்ள. மன்னர்குடி ஒரு பெரிய இலக்கியக் களஞ்சியமாகவும்திகழ்கிறது. எண்ணற்ற இலக்கிய படைப்பாளிகளையும் இலக்கிய படைப்புக்களையும் தமிழ் மொழிக்கு அளித்து வருகிறது.
- மன்னையின் மைந்தர்கள் தொடங்கியுள்ள மின்னிதழான "<u>திறவுகோல்</u>" மூலம் ஒரு ஆண்டிலேயே 100 படைப்பாளிகளை உருவாக்கி உள்ளனர்.
- <u>மன்னார்குடி நடேசப்பிள்ளை</u> கற்பனையுற்று மிக்க தவில் கலைஞராக விளங்கினார். திருகிவிட்ட வானொலிப் பெட்டியைப் போலச் சற்றும் சோர்வு, தளர்வின்றி, ஒலியும் குறையாமல், கற்பயெனும் விதவிதமான வண்ணங்களுடன் வாசித்துக் கொண்டே இருப்பார். ஐந்து மணி நேரமானாலும் ஒற்றைத் தவிலாகவே வாசிக்க வல்லவர்.
- புகழ்பெற்ற நாடக, திரைபடக் கலைஞர் எம்.ஜி. நடராஜப்பிள்ளை. தவில் கலைஞர் சின்ன பக்கிரியா பிள்ளை, வலையப்பட்டியின் குருநாதாராக விளங்கிய ராஜகோபால் பிள்ளை போன்ற பலர் பிறந்ததும், வளர்ந்ததும், வாழ்வதும் மன்னையில் என்பது குறிப்பிடத்தக்கது.
- துவாரயுகக் கடைசியில் கோவியர். கோபபிரயர் என்ற இரண்டு ரிஷிகளும் கிருஷ்ண்னனை தரிசிக்கப் புறப்பட்டனர். ஆனால், இவர்கள் போதற்குள் கலியுகம் தொடங்கிவிட்டது. கிருஷ்ணரும் வைகுந்தம் சென்று விட்டார். கவலையுற்ற இரண்டு ரிஷிகளிடமும் "தென்னகத்து துவாகையான மன்னார்குடி உறரித்ராநதியில் ஓராண்டு தவமியற்றி கிருஷ்ணனை தரிசிக்குமாறு" நாரதர் சொன்னார். ரிஷிகளும் அவ்வாறே செய்து கிருஷ்ணனின் தரிசதனத்தைப் பெற்றனர்.

எனவே, மன்னார்குடியைத் தென்னகத்து துவாரகை என்றும அழைக்கின்றனர்.

- பரவாசுதேவர் இயற்கையாகவே இம் மண்ணில் இருந்து தோன்றியதால் “வாசுவேதபுரி” என்றும் இவ்வூர் அழைக்கபபட்டுள்ளது.
- மறையோர் என்றால் வேதம் உணர்ந்தவர்கள் என்று பொருள். வேதத்தைப் படித்த, வேதத்தை உணர்ந்த சான்றோர்கள் நிறைந்த ஊர் இவ்வுராகும்.
- தஞ்சை அரண்மனையில் ஒன்பது சுரங்கங்கள் இருந்தன. தற்சமயம் 6 சுரங்கங்கள் இருக்கின்றன. மற்றவை அழிந்து விட்டன.1. மன்னார்குடி சொல்லும் வழி - நீளம் 22 மைல்கள் 2. ராணிமார்கள் குளிக்க குளத்திற்குச் செல்வது முக்கால் மைல் நீளம் 3. நாகப்பட்டிணம் - அரசர்படைகள் - பல்லக்குபோகும் வழி - 40 மைல் நீளம் 5. மாரியம்மன் கோயிலுக்குப் போகும் சுரங்கம் - 3 மைல் நீளம் 6. திருவையாறு கோயிலுக்குச் செல்லும் சுரங்கம் - 7 மைல் நீளம்.
- செங்கல்லாக இருந்த ராஜகோபலசுவாமி கோயிலைக் கற்கோயிலாக கட்டினான். மூன்றாம் குலோத்துங்கன். மூன்றாம் குலோத்துங்கன். போன்ற சோழ மன்னர்கள் மன்னார்குடியில் இருந்துள்ளனர்.
- நாயக்கர் காலத்தில் அச்சுதப்ப நாயக்கர், ரகுநாத நாயக்கர், விஜயரகுநாத நாயக்கர் போன்றவர்கள் மன்னார்குடியில் இருந்துள்ளனர். இவர்கள் எல்லாம் இங்கு குடியிருந்ததினால் மன்னார்கள் கோயில் என்றழைத்தனர்.
- நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தெலுங்கு மன்னர்கள் இங்கு இருந்தார்கள். தெலுங்கில் கோவில் என்றால் “குடி” என்று பொருள். அதனால் மன்னார் கோயில் மன்னார்குடி என்று பெரிடப்பட்டு விளங்கியது.
- மன்னார்குடிக்குத் தென்மேற்கே மகாதேவப்பட்டிணம் உள்ளது. இந்த ஊரில் ஐந்து வேலி நிலப்பரப்பில் கோட்டை ஒன்று உள்ளது. இக்கோட்டைக்குள் பெரிய அரண்மனை, சிறிய அரண்மனை எனப்படும் பகுதிகள் முற்றிலும் அழிந்த நிலையில் உள்ளன.

- மகாதேவப்பட்டிணம் கோட்டை முதலாம் துளசாவால் (1728-1736) கட்டப்பட்டவையாகும். இக்கோட்டைக்குள் ஆதிவராகசுவாமி கோயில் ஒன்றுள்ளது.
- மகாதேவப்பட்டிணம் ஊரின் வடக்கே உள்ள சம்போ மகாதேவர் கோயிலால்தான் இந்த ஊருக்கு மகாதேவப்பட்டணம் என்ற பேயரே ஏறபட்டிருக்கிறது.
- மகாதேவப்பட்டிணம் தான் துக்கோசியால் “சிவகாமசுந்தரி பரிணயம்” என்ற தெலுங்கு நாடகநூல் எழுதப்பட்டது. சிவபெருமான் பார்வதியை மணந்த வரலாற்றைக் கூறும் இந்நாடகம் ஆதிவராகசுவாமி கோயில் திருவிழாவில் நடிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.
- மகாதேவப்பட்டிணம் ஆதிவராகசுவாமி கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு (கி.பி.1728) இறைவனின் பல பெயர்களையும் கூறி வழிபாட்டுச் செய்தியையும் வளம் வேண்டும் வழிபாட்டையும் கூவதாக அமைந்துள்ளது.
- திருமக்கோட்டை செல்லும் வழியெங்கும் பசுமை விரித்தாடும சோலை என்றால் மகியையாகாது. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று காட்சியளிக்கும் வயல்வெளிகள், வாழைத்தோப்புக்கள், குளங்கள், கண்மாய்கள் என மன்னார்குடி தமிழகத்தின் திலகம் என்றால் மிகையாகாது தமிழகத்தை தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் மன்னார்குடி சென்றால் போதும்.



- இவ்வட்டத்தில் உள்ள திருமக்கோட்டையிலுள்ள சோழர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் இராசேந்திர சோழவளநாட்டு தென் கரம்பை நாட்டுப் பிரமதேயம் குலோத்துங்கச் சோழச் சதுர்வேதி மங்கலத்தினைச் சார்ந்த சிற்றூராக விளங்கியிருக்கிறது.
- மூன்றாம் ராஜராஜனின் கல்வெட்டு- இவ்வட்டத்தில் உள்ள திருமக்கோட்டையை "திருமையான மும்முடிச்சோழநல்லூர்" என்று குறிப்பிடுகிறது. விசயநகரவேந்தர் காலத்தில் திருமேற்கோட்டை என்று வழங்கப்பட்டுள்ளது."
- இவ்வட்டத்தில் உள்ள திருமக்கோட்டை ஞானபுரீஸ்வரர் கோயில் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் முதல் இராசராசன் காலத்தில கட்டப்பட்ட சிவன் கோயில் ஆகும். இதில் முதல் ராசராசசோழன், முதலாம் குலேத்துங்கசோழன், மூன்றாம் இராசராசன், மாறவர்மன், புவனேகவீரன், குலசேகரபாண்டியன், அச்சுதவேதராயர் ஆகியோரது கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டுகளில் இச்சிவன் கோயில் திருமெய்ஞானமுடையார் கோயில் என்று அழைக்கப்படுகிறது.
- திருமக்கோட்டை ஞானபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு நிலக்கொடை மற்றும் நந்தாவிளக்கு எரிப்பதற்குப் பலர் கொடையளித்தமை பற்றித் தெரிவிக்கின்றன. இங்குள்ள அம்மன் கோயிலைக் கட்டியவன் பல்லுராவுத்தன் புத்திரன் திம்மப்பன் என்று கல்வெட்டு ஒன்று தெரிவிக்றிது.
- **நாடக இயக்குனர் திருவேங்கடம், ஆர்மோனியக் கலைஞர் தியாகராஜன் ஆகியோர் இவருக்கு "மனோரமா" எனப் பெயர் சூட்டினர்.**
- **மனோரமா ஆரம்பத்தில் "வைரம் நாடக சபா" நாடகங்களில் சிறு வேடங்களில் நடித்து வந்தார். அக்காலத்தில் புதுக்கோட்டையில் எஸ். எஸ். ராஜேந்திரன் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த போது அவருக்கு**

**மனோரமா பி. ஏ. குமார் என்பவரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.**

- **மனோரமாவின் திறமையை அறிந்துகொண்ட இராசேந்திரன் தனது "எஸ்.எஸ்.ஆர். நாடக மன்றத்தில்" சேர்த்துக் கொண்டார். இந்நாடக நிறுவனத்தின் *மணிமகுடம், தென்பாண்டிவீரன், புதுவெள்ளம்* உட்பட நூற்றுக்கணக்கான நாடகங்களில் நடித்தார்**
- **மனோரமா முதன் முதலாக மஸ்தான் என்பவர் இயக்கிய ஒரு சிங்கள மொழித் திரைப்படத்தில் கதாநாயகிக்குத் தோழியாக நடித்திருந்தார். பின்னர் ராஜேந்திரன், தேவிகா நடித்த ஒரு திரைப்படத்தில் இவர் நடித்தார். ஆனால் இத்திரைப்படம் வெளிவராமல் பாதியிலேயே நின்று விட்டது.**

- திருமக்கோட்டையில் இரண்டு செப்பேடுகள் கிடைத்துள்ளன. கி.பி. 1519 ஆம் ஆண்டைச் சார்ந்த செப்பேடு திருமெய்க்குஞான சுவாமிக்காக ஆவிக்கோட்டை, கழிஞ்சாங்கோட்டை, உலையக் கொன்றல், கணியாகுறிச்சி, சொக்கநாதநல்லூர் என்ற ஐந்து ஊர்கள் தானமாக அளிக்கப்பட்டதைக் கூகிறது. இரண்டாவது செப்பேடு இச்சுவாமிக்க உச்சிக்கட்டளைக்கும் கயிலாசவாகன மண்டகபபடிக்கும் தானம் அளித்ததைத் தெரிவிக்கிறது.
- திருமக்கோட்டைப் பகுதயில் கிடந்த கோலத்தில் விளங்கும் ரெங்கனாதப் பெருமாள் கோயில் என்றழைக்கப்படும் கோயில ஒன்றும் உள்ளது. இக்கோயில் பழம்பெருமை படைத்தது. இக்கோயிலில் ஏழு கல்வெட்டுகள் உள்ளன.
- கி.பி. நான்காம் நூற்றாண்டில் அச்சுதவிக்கந்தன் என்ற களப்பிர அரசன் காவிரிப்பூம்பட்டிணத்திலருந்து சோழ நாட்டை ஆட்சி புரிந்தான். இவனது காலத்தில் புகழ்பெற்ற பௌத்த சமய நூல்களை எழுதிய புத்ததத்தர் என்ற பௌத்த துறவி வாழந்துள்ளார். இவரது ஊர் மன்னார்குடிக்கு அருகிலுள்ள பூதமங்கலம் ஆகும்.

- மன்னார்குடி வட்டத்திலுள்ள கி.பி. நான்காம் நூற்றாண்டில் அச்சுதவிக்கந்தன் என்ற களப்பிர அரசன் காவிரிப்பூம்பட்டிணத்திலருந்து சோழ நாட்டை ஆட்சி புரிந்தான். இவனது காலத்தில் புகழ்பெற்ற பௌத்த சமய நூல்களை எழுதிய புத்ததத்தர் என்ற பௌத்த துறவி வாழந்துள்ளார். இவரது ஊர் மன்னார்குடிக்கு அருகிலுள்ள பூதமங்கலம் ஆகும்.
- மன்னார்குடி வட்டத்திலுள்ள பூதமங்கலமே புத்ததத்தரின் ஊராகும் என்று பல்லவர் வரலாற்றை எழுதிய வரலாற்றாசிரியர் மீனாட்சி அவர்கள் கருதுகிறார்.

- பூதமங்கலத்தில் வேணுதாசர் என்பவரால் கட்டப்பட்ட பெரிய புத்தவிகாரம் ஒன்று இருந்துள்ளது.
- பூதமங்கலத்தில் தங்கியருந்த காலத்தில்தான் பாலி மொழியில் புத்ததத்தர் “விநயவிநிச்சயம்” என்னும் நூலை இயற்றினார்.
- பூதமங்கலத்தின் சிறப்பினையும் அந்த ஊரில் இருந்த பௌத்த விகாரம் பற்றியும் புத்ததத்தர் இந்நூலில் எடுத்துக் கூறியுள்ளார்.
- “ பூதமங்கலம் சோழநாட்டிற்குக் கொப்பூழ் போன்று (நாபிக் கமலம் ) இருந்தது.
- பூதமங்கலம் மரங்களாலும் சோலைகளாலும் பல்வேறு நீர்ப்பூக்கள் நிறைந்த குளங்களாலும் சூழ்ந்திருந்த ஊராக இருந்திருக்கிறது.
- பூதமங்கலம் வளமுடைய ஊராக விளங்கியது. காவிரி பாயும் இந்த ஊரில் அகழியால் சூழப்பெற்ற வேணுதாசரால் கட்டப்பட்ட பௌத்தவிகாரம் இருந்தது என்று புத்ததத்தர் தமது “விநயவிநிச்சயம்” நூலில் குறிப்பிடுகின்றார்.

- புத்ததத்தரின் நூலில் இருந்து பூதமங்கலம் அவரது காலத்தில் பெரியபட்டணமாக விளங்கியிருக்கிறது என்று அறியமுடிகிறது.
- பூதமங்கலத்தில் பௌத்த சமயம் தொடர்பான சான்றுகள் எதுவும் இல்லாமல் அழிந்துவிட்டன.
- பூதமங்கலத்தில் அழிந்துவிட்ட பழமையான இரண்டு மண்மேடுகள் கணாப்படுகின்றன. செங்கல் கட்டிடம் இங்கு இருந்து அழிந்தமைக்கான தடஷயங்கள் காணப்படுகின்றன. இவற்றில் அகழாய்வ செய்தால் பழமையான பௌத்த சமய சான்றுகள் கிடைக்க வாய்பபுள்ளது.
- பூதமங்கலத்திற்கு அருகில் பள்ளிவிருத்தி என்னும் சிறறூர் உள்ளது. அந்த ஊர் பௌத்த சமயத்தவர்க்கு அளிக்கப்பட்ட நிலங்களைக் கொண்டிருந்தைமையால் இப்பெயர் பெற்றது என்று வரலாற்றாசிரியர் மீனாட்சி கருதுகின்றார்.
- சோழநாட்டிற்கும் சீனாவிற்கும் இடையிலான வணிக உறவுகள் சீன அரச மரவினர்களான சோங் (1127-1279) யுவான், (1271-1368) ஆகியோர் காலங்களில் சீரோடு நடைபெற்றன. இதை உறுதிப்படுத்தும் வகையில் பட்டுக்கோட்டை, மன்னார்குடி வட்டங்களில் 2165 சீன நாயணஙகள் கிடைத்துள்ன. இக்காசுகள் புதையலாகக் கிடைத்த இடங்களில் மன்னார்குடிக்கு அருகில் உள்ள தளிக்கோட்டையும் ஒன்று.
- மன்னார்குடிக்கு அருகில் உள்ள தண்ணீர்குன்னத்தில் உள்ள கோயில் அம்மன் சன்னதி கி.பி.1839-ல் கேசவப்பெருமாள் என்பவரால் கட்டப்பட்டது என்பதை இங்குள்ள கல்வெட்டிலிருந்து தெரிந்து கொள்ளமுடிகிறது.

- தஞ்சை மாராட்டிய மன்னர் முதலாம் சரபோஜி ஆட்சிக் காலத்தில் 15-7-1722 அன்று கோட்டுர் கொழுந்தீஸ்வர சுவாமிக்கு அபிடேகக் கட்டளையாக பெருமாத்தேவர், திருமலைத் தேவர் என்னும் இருவர் உவரிச்சேரி என்னும் இடத்தில் முக்கால்வேலி நிலத்தைக் கொடையாக அளித்த

செய்தி கோட்டுர் கொழுந்தீசுவரர் கோயில் உள்ள கல்வெட்டடொன்றில் காணப்படுகிறது. இந்த உவரிச்சேரி என்ற பெயரே இன்று ஓவர்ச்சேரி என மருவி வழங்கி வருகிறது.

- கி.பி. 1118-ல் வெட்டப்பட்ட முதற் குலோத்துங்கனின்ன மன்னார்குடி இராஜகோபலசாமி கல்வெட்டு இராஜாதிராஜன் எனும் சோழன் பெயரில் அந்த ஊர் இருந்தது என்று சொல்வதாலும், கி.பி.1118 க்கு முன்பு இப்பெயரில் வாழ்ந்த சோழ மன்னன் முதலாம் இராஜராஜன் என்ற ஒருவனே என்பதாலும் கங்கை கொண்ட சோழன் எனும் முதலாம் இராஜாதிரராஜன் சோழனால்தான் இந்த ஊர் தோன்றியது என்பதைத் தெளிவாக அறியமுடிகிறது.
- இராஜாதிராஜன் தன் பெயரலால் தோற்றுவித்த தனியூர் இராஜாதிராஜ சதுர்வேதி மங்கலத்தில் மூன்று பெருங் கோயில்கள் இம்மன்னன் பெயரால் எழுந்தன.
- இராஜாதிராஜன் பெயரலால் 1. இராஜாதிராஜ விண்ணகரம் எனும் வைணவ ஆலயம், 2. செயங்கொண்ட என்ற விருதுப் பெயரில் எழுப்பப் பெற்ற ஜெயங்கொண்ட என்ற கோடீஸ்வர முடையார் கோயில் , 3. ஸ்ரீ கைலாசம் எனும் இராஜாதிராஜ ஈஸ்வரமுடையார் கோயில் சதுர்வேதி மங்கலத்தில் எழுந்தன.
- மன்னார்குடியை சோழர்களும், பாண்டியர்களும், நாயக்கர்களும், மராட்டியர்களும் ஆட்சி செய்துள்ளனர்.
- மன்னார்குடியை ஆண்ட சோழ மன்னர்களுள் சிற்ப்பானவர்கள் 1. முதல் இராஜாதிராஜன் 2. முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1070-1120) 3. மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178- 1218) 4. மூன்றாம் இராஜராஜன் (1216 -1256) 5. மூன்றாம் இரசேந்திர சோழன் (கி.பி. 1246 - 1279)
- மன்னார்குடியை ஆண்ட பாண்டிய மன்னர்களுள் சிற்ப்பானவர்கள் 1. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் 1252 - 1267) 2. குலேசேகர பாண்டின் (கி.பி.1268- 1311) 3. வீரபாண்டியன் ( கி.பி. 1253 - 1268) 4. பராக்கிராம பாண்டியன் (கி.பி. 1422 - 1463) 5. முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியன் (கி.பி. 1251 - 1268)

- **மனோரமா தில்லானா மோனாம்பாளின் “ஜில் ஜில் சுந்தரியாகவும்” சம்சாரம் அது மின்சாரத்தில் “ஆண்டாளாகவும்” அண்ணாமலையில் ரஜினியின் தாயாராகவும் நடித்த பாத்திரங்கள் ரசிகர்களின் மனதைக் கவர்ந்தவையாகும்.**
- **மன்னார்குடியில் பிறந்ததைப் பெரமையாகக் கருதும் மனோரமா அடிக்கடி தான் பிறந்த ஊரோடு தொடர்பு கொண்டிருந்தார்.**
- **மனோரமா 1985 ஆம் ஆண்டு தன்னுடைய 1000 வது திரைப்படத்தை நிறைவு செய்தார்.**

- மன்னார்குடியை ஆண்ட போசாளர் மன்னர்களுள் சிறப்பானவர் போசாளர் வீரராமநாதன் (கி.பி.1254 - 1295)
- மன்னார்குடியை ஆண்ட நாயக்க மன்னர்களுள் சிற்ப்பானவர்கள் 1. அச்சுதப்ப நாயக்கர் )கி.பி.1564 - 1600) 2. இரகுநாத நாயக்கர் கி.பி.1600 - 1645) விஜயராகவ நாயக்கர் (கி.பி. 1533 - 1675)
- மன்னார்குடியை ஆண்ட மராட்டிய மன்னர்களுள் சிற்ப்பானவர்கள் 1. சகஜி மன்னன் (கி.பி. 1684 - 1712) 2. துக்கோஜி (கி.பி. 1729 - 1735) 3. பிரதாப் சிங்.
- முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070 - 1120) மன்னார்குடி கோயிலுக்குப் பல திருப்பணிக்ள செய்துள்ளான்.
- முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070 - 1120) மன்னார்குடி ராஜகோபலசாமி கோயில் எனும் பெயரில் திருமால்கோட்டம் ஒன்றை நிறுவினான். அத அவன் காலத்தில் குலோத்துங்கச் சோழ விண்ணகரம் என வழங்கின்று.
- முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070 - 1120) காலத்திலிருந்து ராஜகோபால் சுவாமி கோயில் இறைவனுக்கு “வண்டுவராபதி ஆழ்வார்” என்ற பெயர் வழங்கி வந்திருக்கிறது.

- முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070 - 1120) சோழப் பெரும்பள்ளி என்னும் பௌத்த விகாரத்திற்கு நிலங்களைத் தானமாகக் கொடுத்தான்.
- முதலாம் குலோத்துங்கன்(கி.பி. 1070 - 1120) காலத்தில் கொற்கை சிவன் கோயிலும் சூரியனார் கோயிலும் கட்டப்பட்டன.
- முதலாம் குலோத்துங்கனின்(கி.பி. 1070 - 1120) ஏழாவது ஆட்சியாண்டில் (கி.பி.1076) தொடங்கி 45 - வது ஆட்சியாண்டுவரை (கி.பி.1115) கல்வெட்டு அமைக்கும் பணி தொடர்ந்துள்ளது.
- முதலாம் குலோத்துங்கனின் (கி.பி. 1070 - 1120) கல்வெட்டின் வாயிலாக -குலோத்துங்கச் சோழ விண்ணகரத்தாழ்வார் கோயிலில் எழுந்து அருளியுள்ள- வண்டுவராபதி ஆழ்வார்- சிறுகாலை சந்தி, உலா எழுந்தருளும் போது திருப் போனசம், அமுதுபடி, தளிகை ஆகியவற்றிறற்கு சபையார் நில தானம் கொடுத்தது, இறையிலயாகச் செய்தது போன்ற நிகழச்சியைக் கூறுகிறது.
- முதலாம் குலோத்துங்கனின் (கி.பி. 1070 - 1120) காலத்தில் ராஜகோபாலசாமி கோயிலின் முன்னர் மாமரம் ஒன்று இருந்திருக்கிறது. இம்மாமரத்தின் கீழே கி.பி.1018 -ல் இராசாதிராசச் சதுர்வேதி மங்கலத்து சபையார் கூடி காடு, நாடு, நகரம், கள்ளப்பற்று ஆகியவற்றில் 30,000 காசுகள் வசூலித்துக் கோயிலுக்குக் கொடுக்க முடிவு செய்தனர்.
- மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178-1218) இராஜகோபலசாமி கருவறை அர்த்த மண்டம், மூனன்றாம் கோபுரம் ஆகியவற்றைக் கட்டினான்.
- மன்னார்குடி ராஜகோபலசமி கோயிலில் மூன்றாம் ராஜராஜ சோழனின் (கி.பி.1216 - 1256) சாசனங்கள் உள்ளன. இதில் ஒரு சாசனம் வேறு எங்கும் சொல்லப்படாத அரிய வரலாற்றுச் செய்தி ஒன்றினைத் தருகின்றது.
- **மனோரமா கொஞ்சும் குமரி படத்தில் கதாநாயகியாகவும் (1963) மாலைரயிட்ட மங்கையில் (1958) நகைச்சுவை நடிகையாகவும் நடித்தார்.**
- **மனோரமா நடித்த முதல் படம் நீதிபத்.(1955)**

- மூன்றாம் ராஜராஜ சோழனின் (கி.பி.1216 - 1256) காலத்திய - திரிபுன சக்ரவர்த்திகள் இராஜராஜ தேவர்" என குறிப்பிடப் பெற்றுக் காணப்படும் (கி.பி.1239) கல்வெட்டு நகல் மன்னார்குடி கைலாசநாதர் கோயிலிலும் உள்ளது.
- கைலாசநாதர் கோயிலான ராஜாதிராஜீஸ்வர முடையார் கோயிலில் - இந்த ஊர் சபையார், மகாசபையார் மற்றும் ஜெயங்கொண்ட சோழப் பேரிளமை நாட்டவர், ராஜாதிராஜப் பேரிளமை நாட்டவர், கங்கை கொண்ட சோழப் பேரிளமை நாட்டவர், நாலாயிரப் பேரிளமை நாட்டவர். ஆளப்பிறந்தான் பேரிளமை நாட்டவர் ஆகியோர் கூடி பல முடிவுகள் எடுத்ததை இங்குள்ள கல்வெட்டில் காணலாம்.
- வரி வசூலிக்கும் அரசு அதிகாரிகள் தங்களுக்த் தோன்றியபடி எல்லாம் வரி வசூலித்து குடிகளுக்கு இன்னல்கள் செய்தால்-- மகாசபையோரும், நாட்டோரும் கூடி --எவ்வகை வரி கொள்வது, எவ்வாறு கொள்வது என்பது பற்றியும் --ஸ்ரீ கைலாசமுடையார் கோயில் திருவிழாவுக்கும், வண்டுவராபதி மன்னார் கோயில் திருவிழாவுக்கும் உரிய வருவாய் வகைகள் பற்றியும் தெளிவாக முடிவெடுத்து அதன்படி நடப்பதாக அனைவரும் ஒப்புக்கொண்டு. இரண்டு கோயில்களிலும் சாசனம் வெட்ட வேண்டும் என்று கூறி இக் கோயில் கல்வெட்டுகளில் பொறித்துளனர்.
- கைலாசநாதர் கோயிலான ராஜாதிராஜீஸ்வர முடையார் கோயிலில் உள்ள சாசனத்தை எழுதி கையொப்பம் இட்ட ஊர் கணக்கு அலுவலர்கள் சேகல் எனும் ஊரினைச் சேர்ந்த கருணாகரப்பிரியன், உத்தமப்பிரியன் என்ப்வர்களே இவர்கள் என்பதை இக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன.
- ராஜகோபலசமி கோயிலின் கல்வெட்டு ஒன்றில் - இராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம் இராஜாதி ராஜ விண்ணகரத்து எம்பெருமானுக்கு, சொந்தமான பன்னிரண்டு மாநிலத்தை இம்மன்னனது 13 வது ஆட்சியாண்டிலிருந்து வரியில்லாத நிலமாக மாற்றி ஆணையிட்டு. தன்னுடைய பிறந்த நாளான புரட்டாசி மூல நட்சத்திர தினத்தன்று பெருமாளுக்கு திருவிழா நடத்தித் தீர்த்தம் அருளிச் செய்வதற்கும், மாதநைந்தோறும் மூல நட்ச்திர தினததன்று

பெருமாள எழுந்தருளவும், எல்லா வாகனங்களிலும் பெருமாள் எழுந்தருளவும் வைத்த அறக்கட்ளை பற்றி விவரிக்கின்றது.

- ஸ்ரீ- கைலாசமான ராஜாதி ராஜேஸ்வரம் எனும் அச்சிவாலயத்தில் மூன்றாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டுக்கள் நான்கு உள்ளன. இவை நான்குமே அம்மன்னனின் 23 ஆம் ஆண்டு கல்வெட்டுகளாகும்.
- மூன்றாம் ராஜராஜனின் தன் பிறந்த நாளான புரட்டாசி மூல நட்சத்திர நாளில் ஆண்டுதோறும் இராஜகோபாலப் பெருமாள திருவீதி உலா வரச் செய்து தீர்த்தம் அருளி திருவிழாக் கொண்டாடச் செய்ததோடு மாந்தோறும் மூல நட்சத்திர நாளில் பெருமாளை திருவீதி எழுந்தருளச் செய்தும், எல்லா வாகனங்களிலும் உலா வரச் செய்தும் கொண்டாடினான் என்பதை இங்குள்ள கல்வெட்டில் நாம் காண முடிகிறது.
- மூன்றாம் ராஜராஜனின் பிறந்த நாள் புரட்டாசி மூலம் என்பதைத் தமிழக வரலாற்றுக்கு மன்னார்குடி கல்வெட்டு ஒன்று பதிவு செய்துள்ளது.
- மூன்றாம் இராஜேந்திர சோழனின் (கி.பி. 1246 -1279) நான்கு கல்வெட்டுகள் மன்னையில் உள்ளன.
- வண்டுவராபதி மாமுனிகள் மடம் ஒன்று பற்றியும், திருப்பரகலன்கள் அளித்ததும் அண்ணா மலைநாதரை எடுப்பித்த செய்தியும், நிலக்கொடைகள் பற்றியும் மூன்றாம் இராஜேந்திர சோழனின் கல்வெட்டுகள் கூறுகின்றன.
- மூன்றாம் இராஜேந்திர சோழனின் இருபத்தொன்றாம் ஆண்டு (கி.பி. 1267) சாசனமொன்று ராஜகோபாலசாமி திருக்கோயிலிலுள்ளது.
- ராஜகோபாலசாமி திருக்கோயிலோடு இணைந்து நிகழந்த மண்டலத்தார் மடத்தின தலைவராகத் திகழ்ந்த வண்டுவராபதி மஉறாமுனிகளுக்கும் அவரது சிஷ்ணை பெரிய பிராட்டிக்கும் இத்திருக்கோயில் மடப்புரமாக அளித்த நிலத்தை, அவர்கள் காலத்திற்குப் பின்பு

முறையாகப் போற்ற வேண்டி அம்மாஉறாமுனிகள் எழுதிய சாசனமே கல்வெட்டாக உள்ளது.

- மூன்றாம் இராஜேந்திர சோழனின் கல்வெட்டால் தவசீலர் ஒருவர் இக்கோயிலோடு இணைந்த மடத்தில் இருந்து தொண்டு செய்தார் என்று அறியலாம்.
- மூன்றாம் இராசேந்திரசோழனின் 27வது ஆட்சியாண்டில் (கி.பி.1267) இராசகோபாலசுவாமி கோயில் இறைவனுக்கு ஈச்சோப்பி (விசிறி?) ஆழி, சங்கு, பகல்விளக்கு, சிற்றம், (எக்காளம் போன்ற பல திருப்பரிகலன்கள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.
- மூன்றாம் இராசேந்திரசோழனின் ஆட்சிகாலத்தில் மன்னார்குடியில் "வண்டுவராபதி மாமுனிகள் மடம் என்ற மடம் இருந்திருக்கிறது.
- "வண்டுவராபதி மாமுனிகள் மடத்தின் தலைவர் வண்டுவராபதி மகாமுனிகளும் அவரது சிஷ்யையான பெரிய பிராட்டி என்பவரும் தங்களது செல்வத்தை இட்டுக்கொண்டு இராசாதிராசச் சருப்பேதி மங்கலத்துப் பிடாகையான சோழநல்லூரில் மடப்புற இறையிலியாய் நிலத்தினை அனுபவித்து வந்தனர்.
- வண்டுவராபதி மகாமுனிகள் தாம் இறந்த பிறகு நிலத்தினையும் மடத்தினையும் தன் சிஷ்யை நிர்வகிக்கவும், மடத்தின் பணிப்பெண்களின் (வெட்ளாட்டி) உணவுக்கும் உடைக்கும் இந்நிலத்தினைப் பயனபடுத்தி வரவும் வழிவகை செய்திருந்தார்.

- ஜடாவர்மன் சுந்தரபாண்டியனுடைய (கி.பி. 1252 - 1267) கல்வெட்டு இராஜகோபாலசுவாமி கோயில் இரண்டாம் கோபுரச் சுவரில் தென்பகுதி நிலையில் காணப்படுகின்றது. வழிபாட்டில் ஏற்பட்ட தடையினை நீக்கி தொடரச் செய்தது பற்றி கூறப்பட்டுள்ளது.

- **மனோரமா திரு. அண்ணாதுரையோடு "நான்கண்ட இந்து ராஜயம் என்ற படத்திலும் திரு. கருணாநிதயுடன் "உதயசூரியன்" என்ற படத்திலும் திரு எம்.ஜி.ஆருடன் "நீதி" என்ற படத்திலிரும் செல்வி ஜெயலலிதாவுடன்**

**"கலாட்டா கல்யாணம்" என்ற படத்திலம் நடித்திருக்கிறார்.**

- மன்னார்குடி அண்ணாமலைநாதர் கோயிலில் வீரபாண்டியனின் (கி.பி.1253 - 1268) கல்வெட்டு காணப்படுகிறது.
- அம்மை பெரியாச்சி, இறைவனின் பெயரால் திருநாமத்துக் காணியாக 155 வேலி நிலம் விலைக்குப் பெற்று வீரபாண்டியனின் வழங்கியிருக்கிறார்.
- நான்கு குதிரை பதிணென்விஷயத்தார் என்ற வணிகக் குழுவினர் சாரிகைக் கோட்டை புவனேசுவீரன் மடிகையில் கூடி மன்னார்குடி அண்ணாமலைநாதர் கோயில் இறைவன் திருவண்ணாமலை உடையாருக்குத் திருப்பணிக்கும், கறியமுதுக்கும், தங்களது வணிகப் பண்டங்களான மிளகு முதலியவற்றின் மீது தீர்வை விதித்துக் கொடுக்க முடிவெடுதத செய்தி அண்ணாமலைநாதர் கோயில் முன்மண்டப தெற்குச் சுவரிலுள்ள வீரபாண்டியனின் கல்வெட்டொன்றில் காணப்படுகிறது.
- ஜெயங்கொண்ட சோழீசுவர முடையார்கோயில் திருமுன் மண்டபம் "விக்கிரம பாண்டியன், ஜெயங்கொண்ட சோழீசுவரர் கோயில் தன் பெயரால் சந்தி ஏற்படுத்தி தன் பிறந்த நட்சத்திர நாளை இறைவன் தீர்த்தமாடும் நாளாகக் கொண்டு விழா ஏற்படுத்தி, அமுதுபடி, சாத்துபடி உள்ளிட்ட செலவினங்களுக்காக வளத்தாமங்கலத்திலிருந்து வந்த நிலத்தின் வரி வருமானத்தை வழங்கியிருக்கிறான்.
- மன்னன் வீரபாண்டியன் காலத்தில் மன்னார்குடியில் வணிகக் குழுவினர் பாதுகாப்பாக தங்கி செயல்பட்டனர்.
- மன்னன் வீரபாண்டியன் காலத்தில் மன்னார்குடியில் வணிகர்கள் தங்கியிருந்த இடம் "புவனேசுவீரன் மடிகை" என்றும் "விக்கிரம பாண்டியன் மடிகை" என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

- மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயிலில் போசாள மன்னன் வீரராமநாதன் (கி.பி. 1254 - 1295) கல்வெட்டு காணப்படுகிறது. இது இவன் பெயரில் சிறப்பு வழிபாடு செய்ய சந்தி ஏற்படுத்தியதைத் தெரிவிக்கிறது.
- பராக்கிரம பாண்டி (கி.பி. 1422 - 1463) மன்னனின் கல்வெட்டுக்கள் கைலாசநாதர் கோயிலிலும், ஜெயங்கொண்டநாதர் கோயிலிலும் காணப்படுகின்றன.
- ஜெயங்கொண்டநாதர் கோயிலில் அத்தியாயனம் பண்ணும் பட்டர்கள் ஆறு பேருக்கு இந்த ஊரின் பாடாகையான காகைற்பு நல்லூரில், இறைவனின் திருநாமத்துக்காணி நிலத்திலிருந்து 12 மாநிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதை பராக்கிரம பாண்டியன் கல்வெட்டிலிருந்து அறியலாம்.
- அச்சுதப்ப நாயக்கரது (கி.பி.1422 - 1600) சாசனங்களாக ராஜகோபாலசாமி கோயிலில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன.
- கி.பி. 1577 ஆம் ஆண்டான சகாப்தம் 1499 இல் வெட்டப்பெற்ற ராஜகோபாலசாமி கோயிலின் முதல் கல்வெட்டில், தஞ்சை மன்னரான அச்சுதப்ப நாயக்கர் தனது இராஜ குருவாகத் திகழ்ந்த திருமலநம்பி திருமால் தாத்தாச்சாரியர் என்பவருக்கு ஒரு குளம் உட்பட ஆறு வேலி நிலத்தினை வேட்கோவனூர் எனும் ஊரில் அளித்ததைக் குறிப்பிடுகின்றது.
- தஞ்சை மன்னரான அச்சுதப்ப நாயக்கர் தனது இராஜ குருவாகத் திகழ்ந்த திருமலநம்பி தாதாச்சாரியாரின் செப்புச்சிலை இராஜகோபாலசாமி கோயிலிலேயே இருப்பதைக் காணலாம்.
- அச்சுதப்ப நாயக்கரின் மற்றொரு கல்வெட்டில் ராஜகோபாலசாமி கோயிலிலுக்காக இரண்டு வேலி நிலத்தினை அச்சுதப்ப நாயக்கர் கட்டளையாக அளித்து இறைவனுக்குக் குறிப்பிட்ட சில வகை தளிகைகள் நடத்த ஏற்பாடு செய்ததை விவரிக்கின்றது.
- மன்னார்குடி இராஜகோபாலசாமி திருக்கோயிலின் சன்னதிக்கு முன்புள்ள மண்பத் தூண்களில் இரகுநாத நாயக்கர் (கி.பி. 1600 - 1645) செய்த துலாதானம், உறிரண்ய பாவத தானம், கோதானம் ஆகியவற்றைக் காட்டும்

சிற்பங்களுடன் மனைவியர் இவருடன் இராஜகோபலனை வணங்கும் சிற்பமும் உள்ளது.

- இரகுநாத நாயக்கர் இராஜகோபாலசுவாமி கோயிலில் சில கோபுரங்களையும் மண்டபங்களையும் தோதற்றுவித்துள்ளார்.
- இராஜகோபாலனின் கருவறைக்கு முன் உள்ள மகாமண்டபத்தில் பல்வே தானங்களை அமைச்சர் கோவிநத தீட்சிதருடன் இருந்து இரகுநாத நாயக்க மன்னன் செய்தான் என்பதை அங்குள்ள சிற்பங்கள் எடுத்துக் காட்டுகின்றன.
- சுவர்ணமேரு தானம், கோதானம், துலாபார தானம் போன்றவற்றை இரகுநாத நாயக்க மன்னன் அளிக்கும் காட்சிகளோடு தேவியர்களுடன் இம்மன்னன் இறைவனை வணங்கும் காட்சியும் இராஜகோபாலசுவாமி கோயிலில் நான்கு பெருந்தூண்களில் இடம் பெற்றுள்ளன.
- கு. தாமோதரன் எழுதி தொல்லியல் துறை வெளியிட்டுள்ள “கலை வளர்க்கும் தஞ்சை” என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகளை பார்க்க முடிகிறது..
- ம.பெ.சிவஞானம் எழுதியுள்ள” “விடுதலைப் போரில் தமிழகம் “ என்ற புத்தகத்தில் சுதந்திரப்போரட்டத்தில் மன்னார்குடி ஆற்றிய பணிகள் பற்றி தெரிந்து கொள்ளலாம்.
- குடவாயிற் பாலசுப்பிரமணியம் எழுதியுள்ள “சோழ மண்டலத்து வரலாற்று நாயக்கர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்” என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகள் ஏராளம் உள்ளன.

- திருச்சிக்கு அருகில் 50 கல் தொலைவில் மாமலை என்ற ஊரில் இருந்து கருங்கற்களை கொண்டுவந்து மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயிலுக்கு ஐந்து பெரிய கோபுரங்களையும் பல வண்ணச் சிற்ப வேலைப்பாடுகளையும் விஜயராகவ நாயக்கர் (கி.பி. 1633 - 1675) செய்தார்.
- விஜயராகவ நாயக்கர் ராஜகோபாலசுவாமி கோயிலுக்கு நந்தவனங்களையும், உறரித்ராநதி படிக்கட்டுக்களையும் அமைத்தார்.

- ராஜகோபாலசுவாமிக்கு நவரத்தின கவனம், வைரமுடி ஆகியவை செய்து சமர்ப்பித்து வழிபட்ட பெருமையும், விஜயராக நாயக்கரையே சேரும்.
- ராஜகோபாலசுவாமி கோயிலின் திருப்பள்ளியறையில் முன்னால் உள்ள தூணின் அடிவாரத்தில் அச்சுதப்ப நாயக்கர், விஜயராகவ நாயக்கர் அவர் மனைவி செண்பகலெட்சுமி ஆகியொர் கூப்பிய கரங்களுடன் சிற்பமாக விளங்குகிறார்கள். உற்சவக் காலங்களில் பெருமாள் இச்சிலையருகே எழுந்தருளி நிற்கும்போது தீட்சதர்கள், "அனைத்துலகும் ஆண்ட அச்சுத விஜயராகவ மன்னார்தானுக்கு அருளிப்பாடி" என்று அருட்பா பாடுவர்.
- சகஜி மன்னன் (கி.பி. 1684 - 1712) தஞ்சை அரண்மனையில் செங்கோலோச்சும்போது கும்பகோணத்திற்கு அருகில் உள்ள சாக்கோட்டையில் முதலாம் சரபோசியும், மன்னார்குடிக்கு அருகில் உள்ள மகாதேவப்பட்டினத்தில் துளசாவும் இரந்து கொண்டு அந்தந்தச் சுபாக்களைத் (நாட்டுப் பிரிவுகளை) திறம்பட நிருவகித்தனர்.
- மன்னார்குடி இராஜகோபாலப் பெருமானின் திருவிழாவைக் கண்டுகளித்த சகஜி மன்னன் அவர்மீது பல தெலுங்குப் பாடல்களைப் பாடியுள்ளார்.
- இராஜகோபாலர் கருட வாகதனத்தில் பவனி வருதல், செங்கமலவல்லியின் சிறப்புகள், குதிரை வாகனத்தில் எழுந்தருளுதல், திருத்தேர் மெதுவாக ஊர்ந்தபோது கோபாலன் கீர்த்தி உரைத்தல், சிருங்காரப்பாடல் என்று சகஜிமன்னன் பாடியவை இளிமை பயப்பவையாய்த் திகழ்கின்றன.
- விஜயராகவ நாயக்கரின் உள்ளம் கவர்ந்த தனிப்பெருந் தெய்வமாக விளங்கியர் மன்னார்குடி இராஜகோபாலப் பெருமானாவார்.
- இராஜாதிராஜ விண்ணகரம் என்றும், குலோத்துங்க சோழவிண்ணகரம் என்று அழைக்கப் பெற்ற மன்னார்குடி திருமால் ஆலயம் விஜயராகவ நாயக்க மன்னவனின் காலத்தில் மிக விரிவு பெற்ற பெருங்கோயிலாக மாறியது.
- விண்ணுயர்ந்த கோபுரங்கள், திருமதில்கள், மண்டபங்கள் எனப் பலவிதமான கட்டடங்கள் விஜயராகவ நாயக்க

மன்னவனால் எடுக்கப் பெற்றன. இவை கலை நயம் வாய்ந்தவை. இவற்றுள் குறிப்பிடத்தக்கது நூற்றுக்கால் மண்டபமாகும்.

- அழகிய அரங்க மேடையோடு திகழும் ராஜகோபால சுவாமி நநூற்றுக்கால் மண்டபத்துத தூண் ஒன்றில் விஜயராகவ நாயக்கர் மற்றும் அவனது தேவியர் இருவரது உருவச் சிற்பங்கள் இடம் பெற்றுத் திகழுகின்றன.
- இராஜகோபாலப் பெருமானின் கருவறை முன்பு உள்ள மண்டபத்தில் விஜயராகவனும் அவனது தேவியும் சன்னதிக்கு எதிரே வீழ்ந்து வணங்கும் கோலத்தில் உள்ள சிற்பப் பலகை ஒன்றைத் தரையில் பரவச் செய்து, என்னெற்றும் தனது பக்தி நிலைபெறுமாறு செய்துள்ளது குறிப்பிடத்தக்காகும்.
- மன்னார் எனும் இராஜகோபாலனின் மீது கொண்ட அளவிற்கரிய பக்தியின் காரணமாக “மன்னாருதாசன” என்ற பெயரினைத் தன சிறப்புப் பெயராக விஜயராகவ நாயக்க மன்னன் சூட்டிக் கொண்டான்.
- மன்னாருதாசன் என்ற பெயரால் பெருமிதம் கொண்ட விஜயராகவ நாயக்க மன்னன் பல செப்புத் திருமேனிகளை ராஜகோபாலாசாமி கோயிலுக்காகச் செய்தளித்தான்.



- விஜயராகவ நாயக்க மன்னன் ராஜகோபாலாசாமி கோயிலுக்காக வழங்கிய பல செப்புத் திருமேனி பீடத்தில் “அச்சுத விஜயராகவ மன்னாருதாசன் சதா சேவை” என்று தமிழில் பொறிக்கச் செய்தான். ஆழ்வார்களின் படிமங்களிலும், சில இறை உருவங்களிலும் இதனை இன்றும் காணலாம்.

- அராஜகோபாலனின் தேவியான செங்கமலவல்லி நாயகிக்கு உரிய தேர் கோயிலின் உட் பிராகாரத்திலேயெ பவனி வருவதாகும்.
- செங்கமலவல்லி நாயகிக்கு உரிய தனித்தேர் ஒன்றினைச் செய்தளித்த விஜயராகவ நாயக்க மன்னன் , தேர் ஏற்று கூடம் (தேர் மண்டபம்) ஒன்றினையும் உருவாக்கித் தந்து அம்மணடபத்திலேயே தம் தேவியோடு உள்ள தனது உருவச் சிலையையும் அமைத்துள்ளான்.
- ரங்கஜம்மா எழுதிய மன்னாருதாச விலாசம் எனும் நாடக நூல் மன்னார்குடி இராஜகோபாலசுவாமி கோயிலுக்கும் விஜயராகவ மன்னனுக்கும் உள்ள தொடர்பை விரிவாகக் கூறுகின்றது.
- **மனோரமா தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, தமிழ் உட்பட இதுவரை 1200 திரைப்படங்களில் நடித்துள்ளார்.**

- மன்னாருதாச விலாசம் நாடகத் துவக்கத்தில் பங்குனித் திருவிழாவுக்காக மன்னன் விஜயராகவனிடமிருந்து முதல் தேங்காய் வாங்குவதற்காகச் செங்கோல் பாருபத்யக்காரன் ஐஞ்சுவகை நிருவாகத்து நம்பிமார். தலத்தார், ஜியாள, ஏகாங்கிகள், வியராவிகள், கொத்தியாள் ஸ்ரீபாதந்தாதாங்கிகள், திருவாபரண கணக்கப்பிள்ளை, இராஜபோகத்தூர் ஆகிய அனைவரும் புடைசூழ யானை மீது இராஜகோபால சாமியின் ஸ்ரீமுகத்தினை வைத்துக்கொண்டு தஞ்சை வந்து மன்னனிடம் சமர்ப்பித்ததாகக் கூறுகின்றது.
- மன்னாருதாச விலாச நாடகத்தில் கூறப் பெறும் ஸ்ரீமுகம் என்பது மன்னார்குடி இராஜகோபாலப் பெருமானே மன்னன் விஜயராகவனுக்கு எழுதுவது போன்று எழுதப் பெற்ற கடிதமாகும்.
- மன்னாருதாச விலாச நாடகத்தில் மன்னார்குடி இராஜகோபாலப் பொற்காசுகளும் குத்தகையாகக் கிடைத்தன என்பதை மன்னாரு எனும் நூல் வாயிலாக அறியமுடிகிறது.
- இராஜகோபாலன் என்றாலேயே நம் மனக்கண் முன் நிறபவன் விஜயராகவ நாயக்க மன்னன்தான்.

- கி.பி.1532 லிருந்து 1575 வரை வாழந்த விஜயராகவ நாயக்க மன்னன் ராஜகோபாலசாமி கோயிலுக்குச் செய்த அளவு வேறு எந்த மன்னர்களும் செய்யவில்லை என்பதுதான் வரலாற்று உண்மை.
- மன்னை ராஜகோபலசாமி மீது அளவற்ற பற்றுக் கொண்டிருந்த விஜயராகவ நாயக்க மன்னன் - 1675 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3 ம் நாள் ஏகோஜி என்ற மராட்டிய படைத் தலைவனோடும்,இரண்டு பீஜப்பூர் முகமதிய தளபதிகளுடனும் கடும் சண்டையிட்டு வீமரணம் அடைந்தான்.
- இராஜகோபாலசாமி கோயிலும் தற்போது காணும் பெரிய வெளிக் கோபுரங்கள் நான்கிளையும், ஆயிரங்கால் மண்டபத்தையும், கிருஷ்ண தீர்த்தத்தையும், இன்ன பிற மண்டபங்களையும், அகழியையும், கோட்டையையும் விஜயராகவ மன்னன் உருவாக்கியுள்ளான்
- திருமலை நம்பி தாத்தாச்சாரியார், திருமங்கை ஆழ்வார். பெரியாழ்வார் போன்ற ெப்புத் திருமேனிகளை செய்தளித்தவன் விஜயராகவ நாயக்க மன்னனே.
- விஜயராகவ நாயக்க மன்னன் காலத்தில் இராஜகோபலசாமி கோயிலுக்கு உரிய நிலங்களிலிருந்து மூன்று இலட்சம் கலம் நெல்லும், முப்பதினாயிரம் பொற்காசுகளும் குத்தகையாகக் கிடைத்தன என்பதை மன்னாருதாச விலாசம் எனும் நூல் வாயிலாக அறிய முடிகிறது.
- மகிச் சிறந்த இசை வல்லுநராகவும் நாடக மேதையாகவும் வாழந்த விஜயராகவ நாயக்க மன்னன் தன் கலை ஆற்றல் முழுவதையுமே மன்னார்குடி இராஜகோபாலனுக்கே அர்ப்பணித்தான்.
- “பிரகலாதநாடகம்” எனும் தெலுங்க பாகவதமேளா நாடகத்தை விஜயராகவ நாயக்க மன்னன் இயற்றி இராஜகோபாலன் முன்பு ஆயிரங்கால் மண்டபத்தில் நடைபெறச் செய்தான்.
- தொண்டிடரடிப் பொயாழ்வார் கதை திருவரங்கத்திற்கே உரியதாயினும் அக்கதையின் ஒரு பகுதி மன்னார்குடி இராஜகோபாலன் கோயிலில் நிகழ்வதாக நாடகத்தை

அமைத்து "விப்ரநாராயணன் சரித்திரம்" என்ற பெயரில் மன்னார்குடி கோயிலில் நடைபெறச் செய்தான் விஜயராகவ நாயக்க மன்னன்.

- இசை, நாட்டியம், நாடகம் போன்ற பல்வேறு கலைகள் விஜயராகவ நாயக்க மன்னன் காலத்தில் பரிணமித்த அளவு மன்னார்குடி வரலாற்றிலேயே நிகழ்ந்ததில்லை என்று வரலாற்றாசிரியர்கள் நிச்சயமாக பதிவு செய்துள்ளனர்.
- விஜயராகவ நாயக்க மன்னன் இராஜகோபலசாமி கோயிலுக்கு புதிய தேர்கள் அளித்தும், திருவிழாக்கள் நடத்தியும் சிறப்பிதததைப் பல்வேறு நூல்கள் விரிவாகக் கூகின்றன.
- இன்றும் இராஜகோபலசுவாமி ஆண்டுதோறும் திருவிழாக்களின் போது நான்கு முறை விஜயராகவ நாயக்கர் அலங்காரம் பூண்டு சேவை சாதிப்பது கொள்ளாக் காட்சியாக விளங்குகிறது.
- ராஜகோபாலனின விஜயராகவ நாயக்கர் அலங்காரத்தில், இம்மன்னனின் உருவ சிலைகளில் காணப்படுவது போன்றே இராஜகோபாலனும் சாய்ந்த கொண்டையுடன் திகழ்வார்.
- விஜயராகவ நாயக்க மன்னனின் மைந்தனான மன்னாரு தேவன் என்பானும் தன்ன தந்தையைப் போல பல்வேறு பணிகளை ராஜகோபாலசாமி கோயிலுக்கு புரிந்துள்ளான்.
- மன்னாருதாசன் செங்கமலவல்லி மீது எழுதிய "கோமாப்ஜ நாயிகா சுயவரம்" எனும் நூல் இவனது இராஜகோபாலா பக்திக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- ராஜகோபாலசாமிக்கு மார்கழி அத்யயந உத்சவம் 20 நாட்கள் ஆண்டுதோறும் திகழ்கின்றது. இதில்வைகுண்ட ஏகாதேசிக்கு முன் பத்து நாட்கள் நடைபெறும்விழா பகல்பத்து என்றும், பின் பத்து நாட்கள் நடைபெறும் விழாவுக்கு இராப்பத்து என்றும் பெயர்.
- ராஜகோபாலசாமிக்கு ஏகாதேசிக்கு முன் பத்து நாட்கள் நடைபெறும்விழாவில் ஆறாம் நாள் விழாவன்று - இராஜகோபலப் பெருமானுக்கு -விஜயராகவ நாயக்கர் அலங்காரம் செய்யப்படுகிறது. சுவாமிக்கு இடப்பக்கம் சரிந்த கொண்டையிட்டு. விஜயராகவ நாயக்கர் உருவம் போன்றே அலங்காரம் அமைகின்றது. நாயக்கர் ஆட்சிக்

காலத்திலிருந்து இவ்விழா தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

- மன்னார்குடி இராஜகோபல சுவாமி திருக்கோயிலுக்கும் விஜயராகவ நாயக்கருக்கும் உள்ள தொடர்பை---- ராஜகோபாலனுக்கு விஜயராகவ நாயக்கர் அலங்காரம் இன்றும் செய்யப்பட்டு வருவதிலிருந்து அறியலாம்.
- ராஜகோபாலசாமி வீதி உலாப்போகும் வேளையில் உட்கோபுர வாயிலுக்கு அருகே வரும்போது, மன்னர் விஜயராகவ நாயக்கர் பெயர் கூவப் பெற்று, விருதுகள் சொல்லப்படும் மரபு இன்றும் தொடர்ந்து நிகழ்கின்றது.
- மராட்டிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட சகஜி மன்னவன், தஞ்சையில் வாழ்ந்து, மன்னார்குடி இராஜகோபலன் மீது அளவிலா பக்தி பூண்டு தெலுங்கு மொழியல் பாடியுள்ள இசைப்பாடல்களை நோக்கும்போது இம்மன்னனின் மாட்சிமையையும், மனித நேயத்தையும், பக்தி வெளிப்பாட்டையும் நாம் காண முடிகிறது.
- மன்னார்குடிக்கு தென் மேற்கே 10கி.மீ. தொலைவில் உள்ளது மகாதேவப்பட்டிணம். துக்கோஜி (கி.பி.1729- 1735) என்று அழைக்கப்ட்ட முதலாம் துளசா மன்னர் தன் காலத்தில் இங்கு ஒரு பெரிய கோட்டையைக் கட்டி வாழ்ந்தார்.
- மராட்டிய மன்னன் துக்கோஜி பெரிய பக்தராகவும்., இசை மேதையாகவம் , கவிஞராகவும். மருத்துவ நிபுணராகவம் திகழ்ந்தார். இவர் காலத்தில் பல கோயில்களில் திருப்பணி செய்யப்பட்டன.
- தஞ்சை மராட்டிய மன்னர் பிரதாபசிங் காலத்திய (11.5.1757) செப்பேடு, இராசராவளநாடு, ராசேந்திரசோழ வளனாடு, பொய்யூர்க் கூற்றத்துப் பாப்பாகுடினாடு, செறுநல்லிக்கோட்டை நென்மேலி வாடியிலிருக்கும் நல்லவன் விசையதேவரவர்கள் குமாரா ராமலிங்க விசையா தேவரவர்கள் பாப்பானாட்டவர்களுக்குக் காணிக்கையாக இருக்கிற செயங்கொண்டனாத சுவாமி" என்று குறிப்பிடுகிறது.
- மன்னார்குடி செயங்கொண்டநாதர் கோயிலில் பாப்பா நாடு சமீன்தார் ஒருவரின் சிற்பம் வழிபாட்டிலிருந்து வருகிறது.

- இராமலிங்க விசையாத்தேவர் அவர்கள் செயங்கொண்டநாத சுவாமியின் அர்த்தசாம பூசைக்காக 46 பொன் இராகோபாலச் சக்கரத்தை மூலப்பொருளாக வழங்கியிருக்கிறார்.
- பிராதாப்சிங் காலத்திய மற்றொரு செப்பேடு (12.5.1758) பாப்பாக்குடி நாட்டில் (வெண்ணாற்றுக்கு மேற்கே உள்ள) மேல்வரை (வெண்ணாற்றுக்கு கிழக்கே உள்ள) கீழ்கரையிலிருக்கும் பதினாறு கரைக்குட்பட்ட பேர்கள் சகலரும் சேர்ந்து செயங்கொண்டநாதரின் உச்சிக்கால பூசைக்காக 45 பொன் இராசகோபாலச் சக்கரம்அளித்தமையைக் குறிக்கிறது.
- பிரதாப்சிங் காலத்திய பிறிதொரு செப்பேடு (26.6.1758) செயங்கொண்டநாத சுவாமிக்குக் காலைச் சந்திக்கும், சுக்கிரவாரக் கட்டளைக்கும், சங்கவனம் சமீனைச் சேர்ந்த ஸ்ரீ சவ்வாயி விசைய ரெகுநாத வாளோசி மெய்க்கன் கோபாலர் அவர்கள் கொடையளித்திருந்த விபரத்தைத் தெரியப்படுத்துகிறது.
- பிரதாப்சிங் காலத்திய பிறிதொரு செப்பேடு செங்காண்டநாதர் காலைச் சந்திக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு பணம் வீதம் ஆண்டொன்றுக்கு 120 பணம் என்ற பணக்கில் ஆண்டொன்றுக்கு 72 பொன் இராசகோபாலச் சகக்கரம் வழங்கப்பட்டிருக்கிறது.
- பிரதாப்சிங் காலத்திய செப்பேட்டில் செங்காண்டநாதர் சுக்கரவாரக் கட்டளைக்கு மாதம் ஒன்றுக்கு பொன் 1, பணம் 6, ஆக வருடம் ஒன்றுக்கு 19 பொன் இரண்டு பணம் வழங்கப்பட்டிருக்கிறது.
- பிரதாப்சிங் காலத்திய மற்றொரு செப்பேடு சிங்கவனம் சமீன்தார் சவாயி விசையரெகுநாத மெய்க்கன் கோபாலர் செயங்கொண்டநாதருக்கு சாயரட்சைக்கு (மாலை வழிபாட்டிற்கு) ஆண்டொன்றுக்கு 40 பொன் வழங்கிய செய்தியைப் புலப்படுத்துகிறது. கோட்டுர் கொழுந்தீஸ்வரர் கோயிலுக்கு அபிடேகக் கட்டளைக்கு தோட்ட நிலம் கொடையாக அளித்துள்ளார்.
- முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியன் (கி.பி. 1251 - 1268) ஆட்சிக் காலத்தில், அம்மன்னனின் பிறந்த நட்சத்திரமான

புரட்டாசி மாதம் மூலத்திலே ராஜகோபாலசாமி இறைவன் திருநாள் எழுந்தருளித் தீர்த்தம் பிரசாதிக்கவும் திங்கள் தோறும் திங்கள் திருநாள் எழுந்தருளவும், சர்வ வாகனங்களிலும் ஏறியருளி" எழுந்தருளவும், வழிவகை செய்துள்ளார்.

- WhoIs who freedom Fighters Vol !! – Govt of Tamil Nadu Auges 1973 No's 427 – 562 பக்கங்களில் மன்னார்குடி சுதந்திரப் போராட்ட தியாககள் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- "தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம்" என்ற புத்தகத்தின் ஆசிரியர் இராஜேந்திரன் மன்னார்குடி சுதந்திரப் பேராட்ட இயக்க வரலாற்றைப் பதிவு செய்திருக்கிறார்.
- "தமிழ்நாட்டில் காந்தி" என்ற புத்தகத்தில் அதன் ஆசிரியர் ராமசாமி மன்னார்குடியில் காந்தி வந்து கலந்து கொண்ட நிகழ்ச்சிகளை தெரிவித்திருக்கிறார்.
- **மனோரமா சொந்தமாக நாடகக்குழு, மொலைக்காட்சி, திரைப்படம் என்று எல்லாவற்றிலும் நடிப்பில் தனக்கென தனி முத்திரை பதித்துள்ளார்.**

- தெய்வங்களின் பெயரிலும், தனிமனித பெயரிலும், அரசர்களின் பெயரிலும், தாவரங்களின் பெயரிலும் மன்னார்குடி வட்டத்தில் ஊர்கள் உள்ளன. 1. ராஜம்மாள்பரம் 2. துளசேந்திரபுரம் 3. ஆதிச்சபுரம் 4. ரெங்கநாதபுரம் 5. ராதா நரசிம்மபுரம் 6. ராமாபுரம்.

- ஊர்ப் பொதுவாக அமைந்த இடம் நத்தம் எனப்படும். அத்தகைய இடம் குடியிருப்பாக மாறிய பின்னரும் பழைய பெயர் எளிதாக மறையவில்லை. 1. மேலநத்தம் 2. எடையர் நத்தம் 3. மாராச்சேரி நத்தம் 4. பெருமாள் கோயில் நத்தம்.
- திருக்கோயிலுக்கு அரசர் இறையிலியாக விட்ட நிலங்களும், ஊர்களும் தேவதானம் என்பபட்டன. மன்னார்குடி வட்டத்தில் பாலையூர் சரகத்தில் 84 தேவதானம் என்ற ஊர் உள்ளது.

- முக்தா சீனிவாசன் எழுதிய "இணையற்ற சாதனையாளர்கள்" பாகம் 11 என்ற புத்தகத்தில் மன்னார்குடி சுதந்திரப்

போராட்ட வீரர் பாஸ்யம் அய்யங்காரின் வரலாற்றை கண்ணீர் மல்க பதிவு செய்துள்ளார்.:.

- வேதாரண்யம் உப்பு சக்தியாககிரகம்" என்ற புத்தகத்தில் அதில் கலந்து கொண்ட மன்னை தியாககள் பற்றியும் மன்னார்குடியில் நடந்த உப்பு சத்தியாகிரகம் பற்றியும் ராஜாஜி பதிவு செய்துள்ளார்.
- Freedom Movement Mannarkudi" Poornachandran .s என்ற புத்தகத்தில் மன்னார்குடியில் சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளை விபரமாக அறிந்து கொள்ளலாம்.
- "சுதந்திரப் போராட்ட தியாக தீபங்கள்" என்ற தலைப்பில் 137 தியாகிகள் பெயர், போராட்ட ஆண்டு, பங்குபெற்ற நிகழ்ச்சி, தண்டனைப் பெற்று- சிறை இருந்த சிறைச்சாலையின் பெயர் ஆகியவற்றை "மன்னார்குடி வரலாறு" என்ற புத்தகத்தில் விபரமாக அதன் ஆசிரியர் மன்னார்குடி பானுகுமார் பதிவு செய்துள்ளார்.




- குஜராத்தின் பர்தோலி மக்கள் போராட்டம் தான் நாடெங்கும் விடுதலைப் போருக்கு வேகம் கொடுத்தது. இதே போன்று விடுதலைப் போரில் மன்னார்குடி மக்கள் வெகுண்டு எழுந்தனர். இம்மக்களின் எழுச்சியே ஆங்கிலேய அரசை

எதிர்த்துப் போராடும் தென்னகத்து மக்களுக்கு வேகத்தை ஊட்டியது. இதனைக் கண்ட மகாத்மா காந்தியடிகளே “மன்னார்குடியைத் தென்னாட்டு பர்தோலி” என்றழைத்தார்.

- 1905ன் வங்கப் பிரிவனை நிகழ்வின் போது தமிழகத்தின் அரசியல் சூழ்நிலை பிரிவனைத் திட்டத்திற்கு எதிராக இருந்தது. தமிழகமெங்கும் போராட்டம் வெடித்தது. மன்னார்குடியிலும் போராட்டம் வெடித்தது.
- மன்னார்குடியின் துணை கலெக்டரான மீர் சுல்தான் சாகிப் மன்னார்குடி இளைஞர்களிடையே அதிகரித்து வந்த பிரிவினைக்கு எதிரான உணர்வுகள் (சுதந்திர தாகம்) குறித்து சென்னை அரசுக்கு அறிக்கை அனுப்பினார்.
- அன்னிபெசண்ட் அம்மையார் பிரிவனை எதிர்ப்புக் கிளர்ச்சியின் ஒழுங்கற்ற போக்கு குறித்து விமர்சனம் செய்து, ஆங்கிலேயர்களுக்கு விசுவாசமாய் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய போது, மன்னார்குடி இளைஞர்கள் அதை உகந்ததாக ஏற்கவில்லை. அவருடைய கருத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அன்னிபெசண்டின் உருவச் பொம்மையை எரித்தனர்.
- சென்னை திருவல்லிக்கேணி ஜிம்மா மசூதிக் கூட்டத்தில் காந்திஜி பேசி பேச்சில் கவர்ந்திழுக்கப்பட்டு மன்னார்குடி கே. சந்தானம் அய்யங்கார் இந்திய தேசீய காங்கிரசில் சேர்ந்தார்.
- மன்னார்குடி கே. கீர்த்திவாஸ் நாட்டின் விடுதலைப் போருக்கான இயக்கத்தில் சேர்ந்து 1923 ஆம் ஆண்டு நாக்பூரில் நடைபெற்ற கொடி அணிவகுப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டார். இதே போன்று சுதந்திரப் போரின் ஒவ்வொரு கட்டத்திலும் மன்னார்குடி மக்கள் பங்கு கொண்டனர்.
- மகாத்மா ஆரம்பித்த ஒவ்வொரு போராட்டத்திற்கும் மன்னார்குடி மனப்பூர்வமான ஆதரவை நல்கியது
- ஒத்துழையாமை இயக்கத்தின் இறுதித் தீர்மானமாகிய கதர் இயக்கத்தில் மன்னார்குடி தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டது.
- கதர் இயக்கத்தின் முதல் செயலாளராக திரு.கே. சந்தானம் அய்யங்கார் 1921 ஆம் ஆண்டில் பதவி ஏற்றார்.

- ஒத்துழையாமை இயக்கத்தில் மன்னார்குடி மாணவர்களும் பெரும் பங்கேற்றனர்.
- திலகர் இறந்ததற்காக பின்லே காலேஜ் மாணவர்கள் ஒரு நாள் துக்க விடுப்பு கோரினார்கள். இதனை கல்லூரி முதல்வர் நிராகரித்ததோடு, திலகர் பெயருக்கு களங்கம் தரும் சொற்களையும் கூறினார். இதனால் மாணவர்களிடைய பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. திலகர் பற்றி அவர் கூறிய வார்த்தைகளைத் திரும்ப பெறக் கோரிப் போராடினார்கள். இப்போராட்டத்தில் மாணவர்கள் வென்றனர்.
- சுதந்திரப் போராட்டத்தில் மன்னார்குடி மாணவர்கள் ஈடுபட்டிருந்த நேரத்தில் (16.8.1920) நீடாமங்கலத்திற்கும் நாகப்பட்டிணத்திற்கும் இடையில் காந்திஜி பயணம் செய்து கொண்டிருந்தார். பயண திட்டத்தில் மாறுதல் செய்ய இயலாத காரணத்தினால் காந்திஜியால் மன்னார்குடி மாணவர்கள் அழைப்பை ஏற்று அப்போது மன்னை வரஇயலவில்லை.
- மன்னார்குடியில் 1924 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாடு.
- மன்னார்குடியில் 1924 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாட்டில் முக்கிய தலைவர்களான திரு. ராஜகோபாலாச்சாரியாரும் திரு எஸ். சத்தியமூத்தியும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டனர்.
- மன்னார்குடியில் 1924 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ள பல தலைவர்களுக்கு ஆங்கிலேய அரசு தடை விதித்தது. இத்தடையாணை வாழங்குவதற்கு முன்னர் திரு .எஸ். சத்தியமூர்த்தி உரையை நிகழ்த்தி முடித்துவிட்டார்.
- மன்னார்குடியில் 1924 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாட்டினால் மன்னார்குடியில் காங்கிரஸ் பெரும் வளர்ச்சியடைந்தது, தேசிய இயக்கத்தைப் பற்றிய விழிப்புணர்வும் ஏற்பட்டது.
- மன்னார்குடியில் 1924 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாட்டினால் மன்னை மக்களின் மனதில் தேசிய உணர்ச்சி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

- பின்னாளில் 1927 ல் காந்திஜி மன்னார்குடி வரும்போது காட்டப்போகும் ஆதரவுக்கும் 1930 ல் உப்பு சத்தியாகிரகிகளுக்கு மன்னார்குடியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுவதற்கும் ----மன்னார்குடியில் 1924 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாடே அடிப்படையாக அமைந்தது.
- பின்னாளில் மன்னார்குடியில் நடந்த சட்ட மறுப்பு இயக்கத்திற்கும், கதர் இயக்கத்திற்கும், வெள்ளையனே வெளியேறு போராட்டத்திற்கும், 15.8.1942 ல் புரட்சி வெடிப்பதற்கும் ----மன்னார்குடியில் 1924 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாடே அடிப்படையாக அமைந்தது.
- காந்திஜி தமிழகத்திற்கு கதர்நிதி திரட்டுவதற்காகவும் கதர்பிரச்சாரம் செய்வதற்காகவும் 1927 ஆம ஆண்டு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இச்சுற்றுப்பயணத்தின் போது 15.9.1927 அன்று காந்திஜி மன்னார்குடி வந்தார்.
- காந்திஜி 15.9.1927 அன்று மன்னார்குடி வரும் வழியில் மன்னையில் எல்லையில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. ராஜப்பையன்சாவடியில், பஞ்சாயத்துப் போர்ட் தலைவர் திரு. ப. நடராஜப்பிள்ளை பொன் முடிப்பினைத் தந்தார்.
- மகாத்மா காந்திஜி 15.9.1927 அன்று மன்னார்குடி வந்தபோது மன்னை நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. பின்லே காலேஜ், தேசிய உயர்நிலைப் பள்ளி இரண்டுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டது.
- மகாத்மா காந்திஜி 15.9.1927 அன்று மன்னார்குடி வந்தபோது பின்லே காலேஜ், தேசிய உயர்நிலைப் பள்ளி இரண்டுக்கும் காந்திஜி விஜயம் செய்தார்.
- மகாத்மா காந்திஜி 15.9.1927 அன்று மன்னார்குடி வந்தபோது பின்லே காலேஜ் முதல்வர் , தேசிய உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஆகிய இருவரும் சிறப்பான வரவேற்பு தந்தனர்.
- “கிதையை மாணவர்களும், மாணவிகளும் கற்க வேண்டும்” என்று , தேசிய உயர்நிலைப் பள்ளி வருகைப் பதிவேட்டில் எழுதிய காந்திஜி கையொப்பமிட்டார்.

- மகாத்மா காந்திஜி 15.9.1927 அன்று மன்னார்குடி வந்தபோது அன்று மாலை பின்லே காலேஜ் விளையாட்டு மைதானத்தில் திறந்தவெளி பொதுக்கூட்டத்தில் காந்திஜி நீண்ட நேரம் பேசினார். தேசிய உணர்வுமிக்க இப்பேச்சை கேட் மக்கள் வெள்ளம் கரைபுரண்டோடியது.
- மகாத்மா காந்திஜி 15.9.1927 அன்று மன்னார்குடி வந்தபோது அன்று மாலை பின்லே காலேஜ் விளையாட்டு மைதானத்தில் திறந்தவெளி பொதுக்கூட்டத்தில் கே.எஸ். சாம்பசி ஐயர் (எம்.எல்.சி.) மன்னை மக்கள் சார்பில் நன்கொடை அளித்தார்.
- ஆங்கிலேய அரசு கைதுக்கு உட்படாமல் இரகசியமாக மன்னார்குடியில் அடைக்கலம் புகுந்த பாரதியார் -- இந்நகரத்துக்கு அருகில் உள்ள நாகை கிராமத்தில் கோடியாளம் சகோதரர்கள் வீட்டில் மறைவாக மாறு வேடத்தில் பாரதியார் தங்கியிருந்தார்.
- தமிழக்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கி உப்புசத்தியாக்கிரகிகள் ஊர்வலமாகப் புறப்பட்டனர். 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் நாள் உப்புசத்தியாக்கிரகிகள் மன்னார்குடி வந்தடைந்தனர்.
- தமிழக்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கி உப்புசத்தியாக்கிரகிகள் மன்னார்குடிக்கு 23-4-1939 ஆம் நாளன்று வந்தபோது வரவேற்பு குழுவினருடன் பெருமளவில் பொதுமக்கள் திரண்டு, பாமணி ஆற்றங்கரையில் பூரண கும்பம் வைத்து உற்சாகத்ததுடன் வரவேற்றனர்.
- தமிழக்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கி உப்புசத்தியாக்கிரகிகள் மன்னார்குடிக்கு 23-4-1939 ஆம் நாளன்று வந்தபோது புகழ் பெற்ற ஓவியர் திரு. பரமசிவம் பிள்ளை அழகிய பாரமாதா ஓவியத்தை வரைந்து அளித்தார்.
- தமிழக்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கி உப்புசத்தியாக்கிரகிகள் மன்னார்குடிக்கு 23-4-1939 ஆம் நாளன்று வந்தபோது- பாமணி ஆற்றங்கரையில் "உபந்யாசத்திற்கு" வரவேற்புக் குழுவினர் ஏற்பாடும் செய்திருந்தார்கள்.

- தமிழக்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கி உப்புசத்தியாக்கிரகிகள் மன்னார்குடிக்கு 23-4-1939 ஆம் நாளன்று வந்தபோது பாமணி ஆற்றங்கரையில் ராஜகோபாலச்சாரியார் ஒரு மணிநேரம் சிறப்பான உபந்யாசம் செய்தார்கள்.
- மகாத்மா காந்திஜி 15.9.1927 அன்று மன்னார்குடி வந்தபோது அன்று மாலை பின்லே காலேஜ் விளையாட்டு மைதானத்தில் திறந்தவெளி பொதுக்கூட்டத்தில் மன்னார்குடி நகராட்சி, தாலுக்கா போர்டு. ராஜாஜி படிப்பகம் போன்றவற்றின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் பேசினார்கள்.
- மகாத்மா காந்திஜி 15.9.1927 அன்று மன்னார்குடியின் வருகை இந்நகர மக்களின் மனதில் சுதந்திர தாகத்தை கொழுந்துவிட்டு எரியச் செய்தது.
- மகாத்மா காந்திஜி 15.9.1927 அன்று மன்னார்குடி வந்தபோது - இந்நகரத்தில் உள்ள ஆர்.பி. சிவம் நகரில் உள்ள திரு.சடகோப முதலியார் பங்களாவில்தான் தேசப்பிதா இரண்டு நாட்கள் தங்கினார்.
- இந்தியா இதழில் 1908 ல் ஆங்கிலேயருக்கு எதிராக வெளியான கட்டுரைகளைக் காணரம் காட்டி பாரதியாரை எப்படியும் கைது செய்யும்படி இரகசிய போலீசாரை பிரட்டிஷ் அரசாங்கம் அனுப்பியது. இச்சூழ்நிலையில் பாரதியாருக்கு இரகசியமாக அடைக்கலம் தந்தது மன்னார்குடி.
-
- தமிழக்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கி உப்புசத்தியாக்கிரகிகள் மன்னார்குடிக்கு 23-4-1939 ஆம் நாளன்று வந்தபோது இந்நகர வணிகர்கள் சத்தியாக்கிரகிகளுக்கு ராஜமரியாதை தந்தனர். தங்கள் கடைகளின் முன்பு பல்வேறு நிறமுள்ள பூக்களைப் பரப்பிவைத்தனர். சத்தியாக்கிரகிகளுக்கு மாலையிட்டு வரவேற்ப அளித்தனர்.
- தமிழக்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கி உப்புசத்தியாக்கிரகிகள் மன்னார்குடிக்கு 23-4-1939 ஆம் நாளன்று வந்தபோது மக்கள் தாராளமாக நன்கொடை

தந்தனர். மன்னை மக்களின் சார்பாக ரூ.1500/- பணமாகவும் நகைகளாகவும், நன்கொடைகள் தந்தனர். பாலம்பாள் பத்துபவுன் சங்கிலயை நன்கொடையாக அளித்தார்.

- தமிழக்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கி உப்புசத்தியாக்கிரகிகள் மன்னார்குடிக்கு 23-4-1939 ஆம் நாளன்று வந்தபோது நன்னிலம் வட்டத்தின் சார்பில் திரு. நாராயணசாமி ஐயர் 7.500 ரொக்கமாகவும் இருபது மூட்டை அரிசியும் தந்தார்.
- தமிழக்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கி உப்புசத்தியாக்கிரகிகள் மன்னார்குடிக்கு 23-4-1939 ஆம் நாளன்று வந்த அன்று முழுதும் மன்னையில் தங்கியிருந்தனர்.
- தமிழக்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கி உப்புசத்தியாக்கிரகிகள் மன்னார்குடிக்கு 23-4-1939 ஆம் நாளன்று வந்தபோது உப்புசததியாக்கிரகிகள் இரண்டாவது தலைவரான திரு.கே. சந்தானம் ஐயங்கார் எல்லாப் பணிகளையும் மேற்பார்வையிட்டார்.
- தமிழக்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கி உப்புசத்தியாக்கிரகிகள் மன்னார்குடிக்கு 23-4-1939 ஆம் நாளன்று வந்தபோது அவர்களுடன் பேரணியில் மன்னார்குடி மக்கள் பலரும் பெருமளவில் கலந்து கொண்டனர்.
- தமிழக்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கி உப்புசத்தியாக்கிரகிகள் சென்ற போது அதில் அயோத்தியராம ரஷித், கே. சந்தானம் ஐயங்கார், கணேச ஐயர், ராஜகோபால அய்யங்கார். சோமசுந்தர் தேவர், பி.வி. முத்துகிருஷ்ணன், மகாலிங்கம் பிள்ளை, நடராஜ பிள்ளை ஆகியோர் மன்னார்குடி சார்பில் வேதாரண உப்புசத்தியாக்கிரகப் போரட்டத்தில் கலந்து கொண்டனர்.
- மன்னை சுதந்திரப் பேராட்டளிகளான திரு கணேச ஐயர், ராஜகோபால அய்யங்கார். சோமசுந்தர் தேவர், என். ஜி. நடராஜபிள்ளை, டாக்டர் பி.வி. முத்துகிருஷ்ண அய்யர். என்.கே. மகாலிங்கம் பிள்ளை, பி.வி. முத்துகிருஷ்ணன், ஆகியோர் உப்பு காய்ச்சிய போரட்டத்தில் பங்கேற்தற்காக வேதாரண்யத்தில் கைது செய்யப்பட்டனர்.

- மன்னார்குடியிலும் உப்புசத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது. 1930ஆம் அண்டு மே மாதம் 18 ம் நாள் மன்னார்குடி காங்கிரஸ் கமிட்டி செயலாளராக இருந்த பாலையுர் ராஜகோபால ஐயர் பந்தலடியில் ஒரு கூட்டம் போட்டார். கோபிநாதன் குளத்தில் உப்பு சத்தியாக்கிரகப் போரட்டம் செய்யப் போவதாக இக்கூட்டத்தில் அறிவித்தர். மறுநாள் 600 சத்தியாக்கிரகிகளுடன் உப்பு சத்தியாக்கிரகம் செய்தார்.
- உப்புசத்தியாக்கிரகத்திற்கு மன்னார்குடி காட்டிய ஆதரவு அளவிடற்கரியது. இந்தயிய பீனல் போடு 117-ஸ்ரீன் கீழ் பாலையூர் ராஜகேபால ஐயர் கைது செய்யப்பட்டு, 18 மாதம் கடுங்காவல் தண்டனையும் பெற்றார்.
- மன்னார்குடியில் என்.ஜி. நடராஜப் பிள்ளை தமது நாடகத்தின் மூலமாகவும் பாட்டின் மூலமாகவும் சுநந்திர எழுச்சியை மக்கள் மனதில் விதைத்தார்.
- இரண்டாம் உலகப் போரில் இந்தியாவை பிரிட்டிஷ் ஈடுபடுத்தியதை எதிர்த்து நாடெங்கும் போராட்டம நடைபெற்றது. மன்னார்குடி எம்.எல்.ஏ. திரு கே. சந்தானம் இந்த போர் எதிர்ப்பு இயக்கத்தை மன்னார்குடியில் தொடங்கினார்.
- பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முறையற்ற போர் குறித்து 12.12.1940-ல் பந்தலடியில் ஆக்ரோஷமாக மக்களிடையே பேசினார். இரண்டாம் உலகப்போருக்கு ஆட்களோ பணமோ என்று எந்த வகையிலும் உதவ வேண்டாம் என்று மன்னை மக்களைக் கேட்டுக் கொண்டார். அந்த இடத்தியே கைது செய்யப்பட்டு ஓராண்டு கடுமையான சிறைத் தண்டனைக்கு ஆளானார்.
- சந்தானம் அய்யங்கார் கைது செய்யப்பட்டதும் மன்னார்குடி மக்கள் உலகப்போருக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர்.
- தனிநபர் சத்தியாக்கிரகத்திற்கு அடுத்த பொறுப்பாளரான திரு. காக்காஜி டி. ராமசாமி - மன்னார்குடியின் முக்கிய கடைவீதியில் உலகப்போருக்கு எதிரான கோஷங்களை எழுப்பி சத்தியாக்கிரகம் செய்தார். இவரும் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

- இரண்டாம் உலகப் போரில் இந்தியாவை பிரிட்டிஷ் ஈடுபடுத்தியதை எதிர்த்து திரு எஸ. சோமசுந்தரத்தேவர். டாக்டர் பி.வி. முத்துகிருஷ்ண ஐயர், திரு எஸ்.எஸ், ஆறுமுகம் பிள்ளை, திரு சேதுராமன், திரு ராமசாமி உடையார், திரு. எஸ்.என். கல்யாணசுந்தரம் பிள்ளை போன்றவர்களும் இப்போரட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு சிறை தண்டனை அனுபவித்தனர்.
- மன்னார்குடி நகரக் காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர் திரு. காக்காஜி டி. ராமசாமி தன்னுடைய தனிநபர் சத்தியகாக்கிரகம் குறித்து காவல் துறை அதிகாரிகளுக்கு முன் அறிவிப்பு கொடுத்தார். அதன்படி 19.02.1941-ல் மன்னார்குடி கடைவீதியில் போர் எதிர்ப்பு முழக்கமிட்டார்.. பந்தலடியில் இவர் போலீசாரால் அடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். இதனால் இவரது காது செவிடாகிப் போனது. மூன்று வாரம் கடுங்காவல் தண்டை விதிக்கப்பட்டு மன்னார்குடி சிறையில் அடைக்கப்பட்டார்.
- 1942 ஆம் ஆண்டு ஆகஸ்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் நாடெங்கும் தொடங்கியது. இப்போராட்டத்தில் கடுமையுடன் தமிழக நகரங்கள் குதித்தன. இராமநாதபுரம், தஞ்சாவூர், மன்னார்குடி, கும்பயோணம், திருவையாறு ஆகிய இடங்களில் இறுதிக்கட்டப் போராட்டம் வன்முறையாக வெடித்தது.
- மகாத்மா காந்தியின் மன்னார்குடி வருகையும் மன்னார்குடி வழியாகச் சென்ற உப்பு சத்தியாக்கிரக ஊர்வலமும் இதுபோன்ற ஏனைய நிழ்வுகளும் மன்னார்குடி மக்களிடம் தேசிய உணர்வைக் கொழுந்துவிட்டு எரியச் செய்து கொண்டிருந்தன. இந்த கிளர்ச்சித் தீயானது 1942 ஆகஸ்டு 15-ல் பற்றி எரியத் தொடங்கியது.
- தஞ்சை மாவட்டத்தின் மையப்பகுதியில் மன்னார்குடி இருந்ததால், தமிழகத்தில் எங்கு சுதந்திரப் போராட்டம் நடைபெற்றாலும் அது உடனே மன்னார்குடியில் எதிரொலிக்கும். மேலும், ஏனைய பகுதிகளைவிட மன்னார்குடியில் தேசபபற்றுமிக்கவர்கள் அதிகமிருந்தனர்.
- 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் மன்னார்குடி காகாஜி டி. ராமசாமி தலைமையில் கோபாலசாமி

தென்கொண்டார், கே. சந்தானம் அய்யங்கார். பி.பி முத்துக்கிருஷ்ணன், குழந்தைவேலு எம்எல்.ஏ., பி. கோவிந்தசாமி போன்றவர்கள் காசுசெட்டித் தெருவில் இருந்து ராஜகோபாலசாமி கோயில்வரை அமைதி ஊர்வலமாகச் சென்றனர். ஆனால், இந்த ஊர்வலம் ரயில்வே நிலையம அருகே வன்முறையாக மாறியது. மன்னார்குடி உணர்ச்சிப் பிழம்பாய்த் திகழ்ந்தது.

- 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் புரட்சியில் மன்னையின் மைந்தர்கள் சுமார் 1000 பேர்கள் கையில் அரிவாள் தடிகளை ஏந்தித் தொலைபேசி வயர்களை அறுத்தனர். ரயில் நிலையம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. ரயில்வே ஸ்டேசனில் பிஷ் பிளேட்டுக்கள் அகற்றப்பட்டன. வழியில் இருந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த கோப்புகள் எரிக்கப்பட்டன. தபால் பெட்டிகள் உடைக்கப்பட்டன. முனிசிபல் அலுவலகம் சேதப்படுத்தப்பட்டது. அனைத்து ஆவணங்களும் எரிக்கப்பட்டன.
- 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் புரட்சியில் மன்னார்குடி காவல் நிலையத்தில் 42 போலீஸ்காரர்களே இருந்தனர். மாஜிஸ்ட்டு ப. சிவராமன் மன்னார்குடி வந்து மூன்றுமுறை தடியடி நடத்தி வன்முறையை அடக்கினார். நூற்றுக்கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டனர்.
- ஆகஸ்ட் புரட்சி போராட்டத்தினால் மன்னார்குடிக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 33,150 என்று சப்-மாஜிஸ்ட்ரேட் கண்ணப்ப முதலியார் தனது மதிப்பீட்ட அறிகையைச் சமர்ப்பித்தார். சென்னை மாநகரத்திலேயெ குண்டுருக்கு அடுத்து அதிக இழப்பு ஏற்பட்டது மன்னார்குடியில் தான்.

- வெள்ளையனே வெளியேறு ஆகஸ்ட் போராட்டத்தினால் மன்னார்குடிக்கு ஏறபட்ட இழப்புத் தொகையை போலீசாரின் கொடி அணிவகுப்பு மிரட்டலுடன் இத்தண்டனைத் தொகையை மன்னார்குடி மக்களிடம் வசூலித்தனர்.

- வெள்ளையனே வெளியேறு ஆகஸ்ட் போராட்டத்தினால் மன்னார்குடிக்கு ஏறபட்ட இழப்புகள் குளித்து ஆய்வு செய்ய அரசாங்கம் 1944-ல் திரு. வைத்தியநாதன் தலைமையில் ஒரு குழுவை அனுப்பியது. இழப்பீடுகளை ஆய்வு செய்த குழு விதிக்கப்பட்ட அபராத் தொதகையில் 17% சதவீதத்தை குறைத்து மதிப்பிட்டு இதனை உரியவர்களிடம் திருப்பி வழங்கப் பரிந்துரைத்தது.
- மன்னார்குடி மண் மனம் வீசும் மல்லிகை மன்னார்குடி மக்கள் பாசத்திற்காக உயிரை கொடுக்கும் மக்கள் வாழும் ஊர் எங்க மன்னார்குடி.
- காவிரிப் பிரச்சினையில் தமிழகத்திற்கு சாதகமாக இன்று தீர்ப்பு வந்துள்ளதற்கு முக்கியக் காரணமே மன்னார்குடி ரங்கநாதன்தான் என்று கூறியுள்ளார் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜோதிமணி. அவருக்கு தனது பேஸ்புக்கில் நன்றியும் தெரிவித்துள்ளார்.
- “தனியொரு மனிதராக காவிரிப் பிரச்சினையை உச்சநீதிமன்றம் வரை முன்னெடுத்து வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த தீர்ப்புக்கு காரணமாக இருந்த மன்னார்குடி ரங்கநாதன். அவரது வழக்கில்தான் தமிழக அரசு பிறகு வாதியாக சேர்ந்துகொண்டது. எளிய மனிதர்களே பெரிய போராட்டங்களை முன்னெடுத்து வெற்றியும் காண்கிறார்கள்.அவருக்கு நன்றியும், வாழ்த்துகளும்”
- காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் மன்னார்குடி எஸ்.ரங்கநாதன். விவசாயிகளுக்காக குறிப்பாக தஞ்சை டெல்டா விவசாயிகளுக்கு சேவை செய்து வருபவர்.
- தமிழகத்திலேயே மிகப்பழமை மற்றும் பெருமை வாய்ந்த மன்னார்குடிக்கு நிகரான வேறு நகராட்சி இருக்குமா என்றால் அது ஒரு மிகப்பெரிய கேள்விக்குறியே.
- மன்னை மதிலழகு அதைவிட மன்னை மக்களின் மதியழகு என்று கூறுவார்கள் தமிழகத்திற்கே அரசியல் கற்றுக்கொடுத்த ஜாம்பவான்கள் வாழ்ந்த இந்த மண்ணில்தான் தஞ்சை பெரியார் மன்னை நாரயணசாமி, கோபால்சாமி தெண்கொண்டார்

போன்றவர்கள் மக்கள் சேவை செய்து ஊருக்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

- பொன் விளையும் மன்னார்குடி பூமியில் விளைந்த நெல்லிலிருந்து ஒரு பருக்கை அரிசியாவது உண்ணாதவர் தமிழகத்தில் இருந்திட முடியாது.
- கடுமையான உழைப்பும், இனிமையான பேச்சும், அசராத தன்னம்பிக்கையும் தளராத மனமும், பிறளாத வாக்கும், என்றுமே அடகு வைக்கப்படாத தன்மானமும் உடையவர்கள்தான் மன்னை வாழ் மக்கள். இப்படிப்பட்ட நற்குணங்கள் மிகுதியாக இருப்பதால்தான் எங்கள் மக்கள் அவர்கள் வயிறு காய்ந்தாலும் வயல்களை காய விடாமல் தமிழகத்தின் பசியை தீர்த்து வருகிறார்கள்.
- மன்னார்குடியின் மூத்த சுதந்திரப் போராட்ட வீரர்களான தேசிகாச்சாரி, கோமளத்ததம்மாள் தம்மபதிகளுக்கு 9.3.1903 அன்று காகாஜி ராமசாமி பிறந்தார்.
- மகாத்மா காந்தி மன்னார்குடி வந்தபோது, பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த காகாஜி ராமசாமி காந்திஜியின் பார்வையிலும், பேச்சிலும் ஈர்க்கப்பட்டார். அன்று இரத்தத்தோடு ஊறிய சுதந்திர உணர்வு இறுதிவரை அவரது உடலில் ஓடியது.
- மன்னார்குடி காகாஜி ராமசாமி பதினைந்து வயதில் பொதுவாழ்வில் ஈடுபடுத்திக் கொண்டார். இவருக்கு வழிகாட்டியாகவும் குருவாகவும் இருந்தவர் முன்னாள் இரயில்வே அமைச்சர் கே. சந்தானம் ஆவார்.
- மூதறிஞர் ராஜாஜி, காமராஜ், முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் , டாக்டர் சுப்பராயன், உறாலாசிவம் போன்றவர்கள் மன்னார்குடி காகாஜி ராமசாமியின் உணர்வுக்கு உரமூட்டி வந்தார்கள்.
- சுதந்திரப் போராட்டக்காலத்தில் எந்தக் காரியத்தைக் கொடுத்தாலும், பறந்து பறந்து. ஓடியாடி, சுறுசுறுப்போடு செய்வார் ராமசாமி செய்வார். “ஏனப்பா, காக்கா மாதிரிப

பறக்குறே” என்று நண்பர்கள் சொல்ல காக்காஜியை, “காக்கா” என்று அழைத்தவர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை.

- 1932 ஆம் ஆண்டு சனவரி 16 ஆம் நாள் காந்தி இர்வின் ஒப்பந்தம் முறிந்தததை ஒட்டி, மன்னையில் நடந்த போராட்டத்தில் இவர் கைது செய்யப்பட்டார். ஆறு மாத காலம் சிறைத் தண்டனை, இவரது முதல் சிறைத்தண்டனை அனுபவம் இதுவே ஆகும்.
- 1940ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஒருமாத சிறைத்தண்டனை பெற்றார் மன்னார்குடி காகாஜி ராமசாமி .
- மன்னார்குடி காகாஜி ராமசாமி 1941 அம் ஆண்டு கொழுந்து விட்டு எரிந்த போரட்டத்திரல பல தழும்புகளைப் பெற்றார். போலீசாரின சித்ரவதைக்கு ஆளானா, மூட்டிக்கு மூட்டி தட்டியதில் முழங்கால் எலும்புகள் இரண்டும் முறிந்தன.
- மன்னார்குடி காகாஜி ராமசாமி வெள்ளையனே வெளியேறு (1942) போராட்டத்தில் ஒரு ஆண்டு தண்டனை பெற்றார். எளிமையான வாழ்வு நடத்தி 8.1.1995ல் இயற்கை எய்தினார்.
- கே. பாஷ்யம் அய்யங்கார் 1907ல் மன்னார்குடிக்கு அருகில் உள்ள சேராங்குளத்தில் பிறந்தவர். பட்டதாரி சிறந்த ஓவியர்.
- மன்னார்குடி கே. பாஷ்யம் அய்யங்கார் தம் கையாலேயே தீட்டிய மூவர்ணக் கொடியை 1932 சனவரி 25ல் வெள்ளையன் ஆட்சிக் காலத்திலேயே சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை உட்புறத்தில் இருந்த வயர்லஸ் நிலையத்தின் நீண்டு உயர்ந்த 200 அடிக்கம்பத்தில் கட்டினார்.
- சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை உட்புறத்தில் இருந்த வயர்லஸ் நிலையத்தின் நீண்டு உயர்ந்த 200 அடிக் கம்பத்தில் நள்ளிரவில்- ஸ்தம்பத்தின் ஒளி வினாடிக்கு வினாடி சுற்றி வரும்போது கம்பத்தோடு உடலைக் கட்டிக் கொண்டு உச்சியில் ஏறி, யார் கண்ணிலும் படாமல் கொடியைக் கட்டினார் மன்னார்குடி கே. பாஷ்யம்

அய்யங்கார் . சனவரி 26ல் அதிகாலையில் ஆணவம் பிடித்த ஆங்கிலேயர் கொடியைப் பார்த்து அதிர்ந்து போனார்கள்.

- பெல்லாரி சிறையில் தேச பக்தர் மகாவீர் சிங் குல்லாய் போட மறுத்தார். சிறை அதிகாரி மேஜர் ஜெனரல் இன்ஸின் 30 கசை அடி கொடுக்க உத்திரவிட்டார். மற்றக் கைதிகளையும் அச்சுறுத்த சிறையில் மத்தியப் பகுதியில் அனைவரும் பார்க்கும்படி மகாவீர் சிங்கின் கை, கால்கள் கட்டப்பட்டு கசை அடி கொடுக்கப்பட்டது. ஆர்யா எனும் பாஷ்யமும் அங்கு விலங்கிட்டுக் கொண்டு வரப்பட்டார்.
- தக்க சமயத்திற்காக சில நாட்கள் காத்திருந்த பாஷ்யம் பேதி மருந்து கேட்டு வாங்கி அதை வாயில் அடக்கி வைத்துக் கொண்டார். கழிப்பறைக்குச் செல்ல விலங்கை விலக்கினர். பேதி மருந்தை அங்கு துப்பிட்டு வெளியே வந்தார். யாரும் எதிர் பார்க்காத வகையில் இன்ஸ்துரையின் உச்சந்தலையில் ஓங்கி **பூட்ஸினால் அடித்து, தங்கள் தோழர் மகாவீர் சிங்கை அடித்ததற்குத் தண்டனை வழங்கினார்**.
- அடுத்த நிமிடமே பாஷ்யத்தை அறையில் தள்ளி அதிகாரிகள் அடித்தனர். இன்ஸ்துரை பல முறை **பூட்ஸ் பாலால் உதைத்தான். மகாவீர் சிங் மற்றக் கைதிகள் பார்க்கும்படி இடுப்பிற்கு கீழே மாறி மாறி சவுக்கடி கொடுத்தனர். சதை பிய்த்துக் கொண்டு ரத்தம் பீறிட்டது.**
- **பாஷ்யம் கண்களில் ஒரு சொட்டுக் கண்ணீர் வரவில்லை. ஒவ்வொரு அடிக்கும் வந்தேமாதரம் ஜெய பேரிகை கொட்டடா என்று முழங்கினார். கசையடி முடிந்து தள்ளாடி நடந்த போது “ஜயமுண்டு பயமில்லை மனமே” என்ற பாரதியின் பாடலைப் பாடினார்.**

- **தற்போது புழக்கத்தில் இருக்கிறதே பாரதியார் படம். அதை வரைந்தது யார் தெரியமா? ஆர்யா என்கிற பாஸ்யம்தான்.**
- மன்னார்குடி கே. பாஷ்யம் அய்யங்கார் வரைந்த காந்தியடிகள், பாரதியார் ஓவியங்கள் பிரபலமானவை. தீரர் சத்திய மூர்த்தியின் சிலை- இவர் வடித்ததுதான்.
- தமிழகத்தில் அதிகமான சுதந்திர தியாகிகள் இருந்துள்ள நகரம் மன்னார்குடியாகும். அதிகமானோர் பென்சன" தொகைகள் பெறுவதும் மன்னார்குடியில் தான். இதனால் தான் மன்னார்குடிக்கு பென்ஷணர் நகரம் என்ற பெயரும் உண்டு.
- தியாகிப் பென்சன் தொகைகள் பெறுபவர்களைத் தவிர சுதந்திரப் போராட்டத்தில் சிறை செல்லாமல் பங்காற்றியவர்கள், சிறைக்குச் சென்றும் அரசு கெஜட்டில் பல்வேறு காரணங்களினால் இடம் பெறாதவர்கள், வெளியில் இருந்தபடி பொருளாலும், தியாகிகள் குடும்பத்திற்கு துணையாக இருந்தவர்கள் எனப் பலர் இருந்துள்ளனர்.

- **<u>மன்னார்குடி வட்டத்தில்</u> கோட்டூர் கொழுந்தீசுவரர் கோயில் அமைந்துள்ளது. <u>சம்பந்தர்</u> பாடல் பெற்ற இத்தலம் தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரைத்தலங்களில் 111ஆவது <u>சிவத்தலமாகும்</u>. இக்கோயிலில் உள்ள இறைவன் கொழுந்தீஸ்வரர்,இறைவி மதுரபாஷிணி. இத்தலத்தில் அரம்பையும் ஐராவதமும் வழிபட்டனர் என்பது தொன்நம்பிக்கை.**
- “ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்” என்பது பழமொழி. எனவேதான் நம் முன்னோர்கள் ஆற்றங்கரையில் ஊரை அமைத்தனர். வடக்கே ஓடும் பாமணி ஆற்றங்கரையில்

மன்னார்குடியை அமைத்து கோயில் கட்டினார்கள்.



- ஆறு இல்லை என்றால் அந்த ஊருக்கு அழகு இல்லை. எனவேதான் நம் முன்னோர்கள் கோரையாறு, முள்ளியாறு கிளைகளிலும் மன்னார்குடி வட்டப் பகுதிகளை உருவாக்கினார்கள். இந்த ஆற்றங்கரைகளில் தொல் நாகரீகம் கொண்ட ஊர்தான் மன்னார்குடி.
- மன்னார்குடியின் அடையாளம் இராஜ கோபாலசாமி கோயில்தான்.
- ஆயிரம் ஆண்டு கால வரலாற்றுச் சிறப்புமிக்க ராஜ கோபாலசாமி கோயிலை ராஜாதி ராஜ சோழன் கட்டினார். மூன்றாம் ராஜாதி ராஜ சோழன் கல்வெட்டில் விண்ணகரம்” என்பதுதான் இக்கேயிலனின் மூலப்பெயராகும்.
- எழுத்தாளர் (இப்புத்தகத்தின் ஆசிரியர்) மன்னார்குடி பானுகுமார் வரை 69 படைப்புகளை வெளியிட்டுள்ளார்.





-




- ராஜாதி ராஜ சோழன் கட்டிய ராஜகோபாலசாமி கோயிலை ஒரு நூற்றாண்டு சென்ற பிறகு கி.பி.1113ல் முதலாம் குலோத்துங்கன் செங்கற்களால் கட்டப்பட்ட இக்கோயிலை கருங்கற்கள் கொண்டு திருப்பணி செய்து தன் பெயருடன் "ஸ்ரீகுலோத்துங்க சோழ விண்ணகரம்" எனப் பெயரிட்டார்.
- முதல் குலேத்ததுங்கச் சோழனால் எடுப்பிக்கப்பெற்ற கருவறையுடன் ராஜகோபாலசாமி கோயில் பின்வந்த பல மன்னர்களால் வளர்ந்து மன்னர்களின் உள்ளத்தைக் குடிகொண்டு மன்னார்குடியாகத் திகழ்ந்தது.
- அச்சுதப்ப நாயக்கர், அவர் மகன் இரகுநாத நாயக்கர், அவரது மகன் விஜயராகவ நாயக்கர், அவர்து மகன் மன்னாரு தேவன் போன்ற தஞ்சை நாயக்கர்கள் இக்கோயிலை 7 பிரகாரங்களோடு மிக விரிவுடையதாகச் செய்து மண்டபங்கள், திருக்குளங்கள் ஆகியவற்றைத் தோற்றுவித்து எழிலுறச் செய்தனர்.
- விஜயராகவ நாயக்கர் திருச்சிக்கருகில் 50 மைல் தொலைவிலிருக்கும் மாமலை என்ற ஊரிலிருந்து கருங்கற்களைக் கொணர்ந்து ராஜகோபாலசாமி கோயிலில்

ஐந்து பெரிய கோபுரங்களையும், பல வண்ணச் சிறபங்களுடன் கூடிய வேலைப்பாடுகளையும் செய்தார்.

- மகாபாரதத்தில் புலஸ்தியர் பீஷ்மரிடம் சம்பகாரணிய சேஷத்திரப் (மன்னார்குடி) பெருமையைக் கூறும் போது "தத் ரோஷ்ய ரஜநீ மேகாம் கோஉறஸ்ர பவேத்த" என்று கூறுகிறார். அதாவது இத்தலத்தில் ஓரிரவு தங்கினாலும் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலன் கிட்டும் என்பது இதன் பொருளாகும்.
- வேதவியாசர் அருளிய பிரம்மாண் புராணத்தில் காணப்பெறும் சம்பகாரணய சேஷத்திர (மன்னார்குடி) மகாத்மியம் (வடமொழி மூலம்) கி.பி.1903 ல் டி.எஸ். வாமராவி என்பவரால் அச்சிடப்பெற்றது.
- சம்பகாரண்ய சேஷத்திர (மன்னார்குடி) மகாத்மியம் (வடமொழி மூலம்) 1959 ல் ராஜகோபாலசாமி திருக்கோயில் வெளியீடாக அதன் மொழி பெயர்ப்பு வெளியிடப்பட்டது. அதன் சுருக்கம் 1966 இல் இத்திருக்கோயிலில் வெளியிடப்பெற்ற தல வரலாற்றிலும் கொடுக்கப்பட்டுள்ளது.
- பிரமாண்டப் புராணத்தின் உத்தரகாண்டத்தில் விஷ்ணு சேஷத்திர விபாகம் என்ற எட்டு அத்தியாயங்கள் உள்ளன. அதிலேயே தட்சிணதுவாரகை என்னும் சம்பகாரணிய மான்மியம் கூறப்பட்டுள்து.
- மன்னார்குடி திருத்தலம் மகான்கள் பலரின் திருப்பாதங்களால் புகழ் பெற்ற பதியாகும்.
- புராணங்களில் மன்னார்குடி திருத்தலங்களைப் பற்றிய குறிப்புகளில் இங்கு தவம் செய்த முனிவர்கட்கு எம்பெருமாள் த்னனடைய குரவைக் கூத்தினை (ராஸ்கரீடையை) மீண்டும் ஒரு காட்சியாகக் காட்டியருளியதாக கூறப்பட்டுள்ளது.
- ராஜகோபால பெருமாள் ராணிகதீடை என்னும், குரவைக் கூத்தினை அன்றைய நாள் பிருந்தாவனத்திலே செய்து

மகிழ்ந்த பின், குரவைக் கூத்தினில் தன்னுடன் ஆடிய கோபிமார்களுடன் ஜலக்கிரீடை செய்தான் என்று பாகவதமும் விஷ்ணுபுராணமும் கூறுகின்றன.

- இராஜகோபாலசாமி கோயிலுக்கு முன்னர் அச்சுதப்ப நாயக்கரால் கட்டப்பட்ட கருடஸ்தம்பம் கருடஸ்தம்பம் மிகவும் சிறப்புடையது.
- இராஜகோபாலசாமி கோயிலுக்கு முன்னர் உள்ள 5` x 5` அளவுடைய பலகைக்கல் தலையொடு 54 அடி உயரமுடைய கருடஸ்தம்பம் வியப்பிற்குரியதாகும்.
- கருங்கற்களே இல்லாத இம்மாவட்டத்திற்குப் புதுக்கோட்டை குன்னாண்டார் கோயில் மலைப் பகுதிகளிலிருந்து இக்கல்லைக் கொண்டு வந்து இராஜகோபாலசாமி கோயிலுக்கு முன்னர் கருடஸ்தம்பம் நிறுத்தியுள்ளது மகத்தான சாதனையாகும்.
- இராஜகோபாலசாமி கோயிலுக்கு முன்னர் உள்ள கருடஸ்தம்பத்தின் மேல் தளத்தில் கருடனுக்கு ஒரு சிறிய அழகிய கோயிலும் உள்ளது. கருடன் கை கூப்பிய கரங்களுடன் மேற்கு நோக்கி விளங்குகிறார்.
- இராஜகோபாலசாமி கோயிலுக்கு முன்னர் உள்ள கருடஸ்தம்பத்தில் இராஜகோபாலன், அனுமன், அச்சுதப்ப நாயக்கர், அவரது தேவி மூர்த்திமாம்பா ஆகியோரது சிற்பங்கள் இடம பெற்றிருப்பது போற்றுதற்குரியது.
- தமிழகத்தில் தலைசிறந்த வைணவக் கோயிலான இராஜகோபாலசாமி கோயிலை கட்டி முடிக்க “50 ஆண்டுகள் ஆனது” என வரலாறு கூறுகிறது.
- இராஜகோபாலசாமி கோயில் 23 ஏக்கர் பரப்பளவில் 16 கோபரங்களுடன் பிரம்மாண்ட முறையில் மைந்துள்ளது.
- இராஜகோபாலசாமி கோயில் கிழக்குப் பகுதி ராஜகோபரம் 154 அடியில் விண்ணைத் தொடும் உயரமுடன் கம்பீரமாக காட்சியளிக்கிறது.

- இராஜகோபாலசாமி கோயிலில் எழு பிரகாரங்கள், 24 சன்னதிகள், நீண்ட நெடிதுயர்ந்த மதில்கள், மாண்டபங்களுனட் 18 விமானங்களும் கொண்ட இம்மாபெரும் திருக்கோயில் கவின்மிகு சிற்பங்களும் கட்டடக்கலை நுட்பங்களும் கொண்ட காலப் பெட்டகம்.
- இராஜகோபாலசாமி கோயில் பாஞ்சாராத்திர ஆகம விதிப்படி நடப்பவை ஆகும்.
- மன்னார்குடியைப் பற்றி வரலாற்றாசிரியர் திரு. கே. சொக்கலிங்கம் குறிப்பிடும்போது "The following are proven about this place" – "மன்னார்குடி மதில் அழகு" "கோயில் ஒருபாதி குளம் ஒரு பாதி" – "மறையோர் மிகுந்தது மன்னார்குடி" என்று கூறுகிறார்.

- எழுத்தாளர் (இப்புத்தகத்தின் ஆசிரியர்) மன்னார்குடி பானுகுமார் வரை 69 படைப்புகளை வெளியிட்டுள்ளார்.




- மன்னார்குடி குளக்கரை பற்றியும், காவிரியாறு பாய்ந்து வளம் செய்யும் தஞ்சை மாவட்டத்தில் இந்தஊர் மிகுதியான 64 குளங்களை தன்னகத்தே கொண்டுள்ளது பற்றியும் - வரலாற்றாசிரியர் திரு. கே. சொக்கலிங்கம் கூறுகிறார்.
- இராஜகோபாலசாமி கோயிலின் புனித தீர்த்தங்களாக பல குளங்களும், பாமணியாறும் உள்ளன என்று வரலாற்றாசிரியர் திரு. கே. சொக்கலிங்கம் கூறுகிறார்.

- “எண்ணில்லாத் தீர்த்தமும் எம்பெருமான் சேவையும்- கண்ணினால் கண்டால் போதுமே--புண்ய நதியாம் உறரித்ரா நதி பாமணியும்--கண்யமான கிருஷ்ண கஜேந்திரி கோப்பிரளமும்- கண்ணுக்கு உகந்த கோபி ருக்மணி சங்கு சக்கரமும்-பண்ணின வினையைத் தீர்க்கும் பாற்கடலும் தாங்கி நிற்குமே” என்ற பாடல் மன்னார்குடி புண்ய தீர்த்தங்களைப் பதிவு செய்துள்ளது.
- பங்குனி மாத பிரமோற்சவ நிறைவில் ராஜகோபாலசாமி கோயிலுக்கு அருகில் உள்ள கிருஷ்ண தீர்த்தத்தால் ஸ்ரீராஜகோபாலன் தெப்போற்சவம் கண்டருளுவார்.
- ராஜகோபாலசாமி கோயிலிலுள்ள கோபரங்கள் மீது விழும் மழை நீர், பரந்த முற்றவெளியில் பெய்யும் மழைநீர் அனைத்தும் ராஜகோபாலசாமி கோயிலுக்கு அருகில் உள்ள கிருஷ்ண தீர்த்தத்தில் சேகரமாகும் வண்ணம் இத்திருக்குளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னதாகவே மழைநீர் சேகரிப்பு திட்டத்தில் நம் முன்னோர்கள்--- இராஜகோபால சாமி கோயிலுக்கு அருகில் உள்ள கிருஷ்ண தீர்த்தக் குளத்தை உருவாக்கியருப்பதைக் காணும்போது வியப்பும், பெருமையும் மேலிடுகிறது.
- ராஜகோபாலசாமி கோயிலில் எழுந்தருளியிருக்கப் பெற்ற இறைவனும் மனிதனைப் போலவே துயிலெழுந்து நீராடி, உணவு உண்டு மக்களைக் காத்து கலையின் அம்சங்களை அனுபவித்து உறக்கம் செல்வதாகக் கருதி ஆகம முறைப்படி வழிபாடுகள் நிகழந்து வருகின்றன.
- ராஜகோபாலசாமி கோயிலில் நாள் தோறும் ஏழுகால வழிபாடு இன்றும் நடைபெற்று வருகிறது.
- ராஜகோபாலசாமி கோயிலில் பர வாசு தேவப்பெருமாள், ஸ்ரீதேவி பூதேவியுடன் கம்பீரமாக விளங்குகிறார்.

- ராஜகோபாலசாமி கோயிலில் பரவாசு தேவப்பெருமாள் நின்ற திருக்கோலத்தில் சங்கு சக்கரம் கதையுடன் வெள்ளிக் கவசம் பூண்டு நம் தீ வினையகற்றி அருள் பாலிக்கின்றார்.
- ராஜகோபாலசாமி கோயிலில் ஸ்ரீ செங்கமலத்தாயார் (உறமாப்ஜ நாயகி, ஏப்தாவ்ஜ நாயகி) படிதாண்டாப் பத்தினியாக செங்கமலத்திலேயே வீற்றிருக்கிறார்.
- ராஜகோபாலசாமி கோயிலில் ஸ்ரீ செங்கமலத்தாயார் ராஜநாயகி, துவாரகா நாயகி எனும் இரண்டு தோழிகளுடன் காட்சியளிக்கினறார்.
- ஆதிசங்கரர், ஸ்ரீ வித்யா ராஜ கோயில் என்ற பெயரில் பகவானின் விக்ரகத்தை அமைத்து, ஸ்ரீவித்யா என்னும் இயந்திரத்தையும் ராஜகோபாலசாமி கோயிலிலுக்கு அமைத்துக் கொடுத்தார்.
- மன்னார்குடி இராஜகோபாலனார் வடிவழகு உலகப் புகழ் பெற்றது.
- சத்தியபாமாவுடன் பசு மாடு, கன்றுகளுடன் மேய்க்கும் திருக்கோலமாய் பசுவிடம் சிறிது சாய்ந்து கொண்டு ஒற்றை அடையுடன் ஒரு காதில் ஓலையும், ஒரு காதில் குண்டலமும் விளங்க ஒரு கையின் நுனியில் மும்மடிப்புள்ள சாட்டையுடன் கூடிய தங்கச் கோலை ஏந்தியும், இடது திருக்கரத்தைச் சத்திய பாமாவின் திருத்தோளிலே பதியச் செய்தும் திரிபங்க லலிதாகரமாய் உள்ளம் கவர் பேரழகனாய் அருள்மிகு ஸ்ரீவித்யா ராஜகோபாலன் காட்சியளிக்கின்றார் மன்னார்குடியில்.
- இராஜகோபால கோயிலின் பெருமாள் சன்னதியில் பாலசுவாமிகளால் பூஜிக்கப்பெற்ற 5 தலை நாகத்தின் அணைப்பில் கால் விரலை வாயில் வைத்துக் கொண்டு குழந்தையாக காட்சி தரும் ஸ்ரீச ந்தான கோபாலனை கையில் வாங்கிப் பிரார்த்தனை செய்பவர்களுக்கு வேண்டிய வரம் அருள்வான் என்கிறது தலவரலாறு.

- எழுத்தாளர் (இப்புத்தகத்தின் ஆசிரியர்) மன்னார்குடி பானுகுமார் வரை 69 படைப்புகளை வெளியிட்டுள்ளார்.




- தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களிலேயே அதிக அளவு ஆபரணங்கள் உள்ள திருக்கோயில்---- மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயில் இதுதான்.
- ஆழ்வார்களோ நாயன்மார்களோ மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பாடவில்லை.
- முனிவர்களும், அரசர்களும் மன்னார்குடி இராஜகோபாலாசாமி திருக்கோயிலைப் பாடியுள்ளனர்.
- மன்னார்குடி இராகோபாலசாமி திருத்தலம் மகான்கள் பலரின் திருப்பாதங்களால் புகழ்பெற்ற பதியாகும். பல மகான்களால் பாடப்பெற்ற கோயிலாகும்.
- மணவாள மாமுனிகள் - கோபல விம்சதி, கமலா ஸ்துதி, ராஜகோபால மங்கலம் என்ற தலைப்புகளில் மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பாடி பரவசமடைந்துள்ளார்.

- மன்னாரு தேவன் - “இராஜகோபால விலசமு செங்கமலவள்ளி” என்ற தலைப்பில் மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பாடி பரவசமடைந்துள்ளார்.
- விஜயராகவ நயாக்கர் - “பரிணய - இராஜகோபால தண்டகம், தட்சிண துவாரகசதள பரணயமு, மன்னர் மோனப் பள்ளு. உறமாமப்ஜ நாயகி ஸவம் வரமு” என்ற தலைப்புகளில் மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பாடி பரவசமடைந்துள்ளார்.
- விஜயராகவ நாயக்கர் அவைப் புலவர் புலவர் ரங்காஜம்மா - “மன்னாரு விலாசம்” என்ற தலைப்பில் மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பாடி பரவசமடைந்துள்ளார்.
- பெரும்பாலும் கோயிலுக்கு மான்யமாக வழங்கப்பட்ட பெரிய நந்தவனம் அடங்கிய பகுதியே தோட்டம் என்ற ஊராகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கோட்டூர் சரகத்தில் இவ்பூர்களைக் காண முடிகிறது. 1. கோட்டூர்த் தோட்டம் 2. ஆசாப் பக்கிரத் தோட்டம் 3. நீலகண்ட காடேரால் தோட்டம் 4. பிகாஜி கோயில் தோட்டம் 5. ரெங்கமாவுத்தன் தோட்டம் 6. வெங்கட்ராவ் தோட்டம்.

- கோயில் – கோவில் என இருவிதமாக இம்முடிவுகள் வழங்குகின்றன. இம் முடிவுகளைக் கொண்ட ஊர்களில் சில சிறப்பான ஒரு கோயிலை உடையதால், அப்பெயராலே அந்த ஊரும் வழங்குவதாக உள்ளன. மன்னர்குடி சரகத்தில் கைலாசநாதர் கோயில் என்று ஒன்று உள்ளது.
- கோட்டம் என்பது ஆழ்நீர் நிலை. நீர் நிலை தேங்கியுள்ள பகுதி என்ற பொருளினை உடையது. பாலையூர் சரகத்தில் மானங்காத்தான் கோட்டகம் என்ற ஊர் உள்ளது.

- வேளாங்குடி வரதாசார்ய ஸ்வாமி - “ஸ்ரீராஜகோபால மீது எட்டெதுகைக் கவிதைகள் பாடி பரவசமடைந்துள்ளார்.
- நம்மாழ்வார் “பாசுரம் பாடி பரவசமடைந்துள்ளார்.
- சகஜி மன்னன் - இசைப் பாடல்கள் “விஷ்ணு பல்லக்கி சேவா பிரபந்த” என்ற தலைப்பில் மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பாடி பரவசமடைந்துள்ளார்.
- ஸ்ரீ ராஜி சாஸ்திரிகள் - ராஜகோபல நவரத்ன மாலிக ஸ்ரீ ராஜ கோபால மஉறித்வை அனுக்கரமானிகா, 623 சுலோகங்கள் 18 நாள் உறசலத்தைப்பா என்ற தலைப்பில் மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பாடி பரவசமடைந்துள்ளார்.
- செண்டலங்காரப் பிள்ளை - விறலிவிடுதூது, வண்ணங்கள் இரண்டு காப்புமாலை ஒன்று, தனிப்பாடல்கள் என்று மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பாடி பரவசமடைந்துள்ளார்.
- ஊத்துக்காடு வெங்கடய்யர், - கீதகோவிந்தத்தில் பூரி ஜெகந்நாதனைப் பாடியது போல் மன்னன் ராஜகோபாலனைப் பற்றி கர்நாடக இசையில் தன்னுடைய கிருஷ்ண கானத்தில் பாடியுள்ளார். பல தமிழ் செலுங்குப் பாடல்களால் மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பாடி பரவசமடைந்துள்ளார்.
- ஸ்ரீ பராங்குச தேசிகர் மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பற்றி பல பாடல்களைப் பாடி பரவசமடைந்துள்ளார்.
- முத்துசாமி தீட்சதர் - ராஜகோபாலனை பல்வேறு ராகத்தில் பல கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். தன்னுடைய புகழ்பெற்ற கீத்தனைகளில் உறரித்ராநதி குளத்தையும் பங்குனித் திருவிழாவின் மோகினி அலங்காரத்தையும பரவசத்துடன் பாடியுள்ளார்.

- செங்கல்வ கவிகள் உறக்ரகஞர் .என்ற தலைப்பில் மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பற்றி பல பாடல்கள் பாடி பரவசமடைந்துள்ளார்.
- ஸ்ரீ தியாகராஜர் - மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பற்றி பல பாடல்களைப் பாடி பரவசமடைந்துள்ளார்.
- ஸ்ரீ முத்துசாமி தீட்சதர் - மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பற்றி பல பாடல்களைப் பாடி பரவசமடைந்துள்ளார்.
- எழுத்தாளர் (இப்புத்தகத்தின் ஆசிரியர்) மன்னார்குடி பானுகுமார் வரை 69 படைப்புகளை வெளியிட்டுள்ளார்.






- சுத்தானந்த பாரதியார் - மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலைப் பற்றி தனிப் பாடல்களைப் பாடி பரவசமடைந்துள்ளார்.
- மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலின் திருத்த மண்டபத்தின் தென் பகுதியில் உள்ளது ஒரு சுரங்கப் பாதை. இது திருக்கோயிலின் மேல கோபர வாசல் வரை உள்ளதாக தெரிகிறது. சுமார் 10 அடி அகலமும் 50 அடி நீளமும் கொண்டதாக உள்ளது.
- மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலில் பூஜை செய்ய 21 தீட்சதர்கள் உஉளளனர். இவர்களுக்கு ஊதியம் கிடையாது. பக்தர்கள் தருவதையே பெறுகிறார்கள்.
- மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயில் 1926 ஆம் ஆண்டு தேவஸ்தான பரிபாலன குழுவின் ஆளுகைக்குப்பின்

1951 ஆம் அண்டு முதல் சென்னை அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

- மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயில் இரண்டாம் நிலைத் திருக்கோயிலாகும்.
- மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலில் நான்கு பணியாளர்கள் உட்பட 50 பணியார்கள் பணி புரிகின்றனர்.
- மன்னார்குடி இராகோபாலாசாமி திருக்கோயிலுக்கு 1000 ஏக்கருக்கு மேல் நிலங்கள் உள்ளன.
- துவைத, அத்வைத, விஷிஷ்ட வேறுபாடின்றி அனைவரும் போற்றி வணங்கி சிறப்பு மிக்கது மன்னையம்பதி.
- மன்னார்குடி நகரத்தின் கீழப்பாலம் பகுதியின் பாமணியாற்றங்கரையின் கரையில் கைலாச நாதர் கோயில் அமைந்துள்ளது. இச்சிவாலயம் சிறிய கருங்கல கட்டுமானக் கோயிலாகத் திகழ்ந்தாலும் மிக அழகான  அமைப்போடு திகழ்கின்றது.
- மன்னார்குடி கைலாச நாதர் கோயிலுக்கு இரண்டு நுழைவாயில்கள் உள்ளன.
- விமானம், அர்த்த மண்டபம், முன் மண்டபம், உட்பகுதியில் மேற்கு நோக்கிய நடராஜர் சந்நிதி, தெற்கு நோக்கிய வடபுறமாய் அமைந்த அம்மன் கோயிலுடன் இணைந்த மகாமண்டபம் ஆகிய அமைப்புகளைக் கொண்டது மன்னார்குடி கைலாச நாதர் கோயில்.
- மன்னார்குடி கைலாச நாதர் கோயிலில் கைலாசநாதர் என்றழைப்படும் சிவலிங்கம் உள்ளது. இது சுமார் ஐந்தரைஅடி உயரமுடையது. வட்டமான ஆவுடையைக் கொண்டுள்ளது.

- மன்னார்குடி கைலாச நாதர் கோயில் காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டாகும்.
- மன்னார்குடி கைலாச நாதர் கோயிலில் இறைவன் உலா வருதல் போன்ற பெரிய திருவிழாக்கள் கிடையாது.
- மன்னார்குடி கைலாச நாதர் கோயிலின் சிறப்பு பெயரான "ஜெயங்கொண்டான்" என்ற பெயரில் ஜெயங்கொண்ட சோழீஸ்வரமுடையார் என்று இச்சிவலாயம் பெயர் பெற்றது.

- மயிலை சீனி. வேங்கடாசாமி எழுதி 2001 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள "நுண்கலைகள் " என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகள் ஏராளம் உள்ளன.
- எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் எழுதி 1966 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள "சோழர் கலைப்பணி" என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகள் ஏராளம் உள்ளன.
- புலவர் கோவிந்தராஜனார் எழுதி தஞ்சை சரஸ்வதி மகால் 1963 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள "செண்டலங்காரன் விறலிவிடுதூது" என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகள் ஏராளம் உள்ளன.
- மன்னார்குடி கணபதி அச்சகம் 1938 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள "இராஜகோபாலசாமி திருக்கோயில" புத்தகத்தில் மன்னார்குடி வரலாற்று செய்திகள் காணலாம்.
- எழுத்தாளர் (இப்புத்தகத்தின் ஆசிரியர்) மன்னார்குடி பானுகுமார் வரை 99 உரைகளை Vethathiriam Banukumar என்ற தலைப்பில் You tube ல்

விவேகாநந்தரின் எண்ணமே அறிவுத்திருக்கோயில்




https://youtu.be/NB6ulfdEllw

- வெளியிடப்பட்டுள்ளது.

சேவைக்காக வாழ்ந்தவர்.




https://youtu.be/fOy5aR35kqc

மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்



அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

சீன தத்துவஞானி கன்பூசியஸும் வேதாத்திரி மகரிஷியும்




https://youtu.be/NWbtjV-mM2I




1. விவேகாந்தரின் எண்ணமே அறிவுத்திருக்கோயில்
   https://youtu.be/NB6ulfdEllw
2. முழு ஆளுமையை வளர்த்துக் கொள்வது எப்படி?
   https://youtu.be/XOBur8II5pw
3. இவர்களல்லவோ மகான்கள்!
   https://youtu.be/LVb16R7Bx9U - - - - -

- வெளியிட்டுள்ளார்.

- ஆர். ராமஷேகன் 1985ல் எழுதியுள்ள” “சண்பகாரண்யம் என்னும் மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசாமி திருக்கோயில் வரலாறு” என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகள் ஏராளம் உள்ளன.
- மன்னார்குடி கணபதி அச்சகம் 1938 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள “ஸ்ரீ ராஜகோபலசாமி கீர்த்தனைகள்-செங்கமலவல்லியார்” புத்தகத்தில் மன்னார்குடி வரலாற்று செய்திகள் காணலாம்

- மன்னார்குடி கைலாச நாதர் கோயிலில் சுமார் 26 செப்புத் திருமேனிகள் உள்ளன. இவை 12 ஆம் நூற்றாண்டிலிருந்து தற்காலம் வரை பல காலங்களில் உருவாக்கப்பட்டவை.
- மன்னார்குடி கைலாச நாதர் கோயிலில் உள்ள நடராஜப் பெருமாள் திருவுருவத்தின் பேரழகைக் காண கண் கோடி வேண்டும்.
- மன்னார்குடி கைலாச நாதர் கோயிலின் எண் முறையே போசாள அரசன் வீர சோமீஸ்வரன், மூன்றாம் இராஜராஜன், அரசன் பெயர் அறியப்படவில்லை. பராக்கிரம பாண்டியன் காலத்தியது.
- “உடையார் சீகயிலாய முயைாயார் இராஜாயி ராஜீ பலரமுடையார் கோயிலில்” – “உடையார் ராஜாயிராஜீவர முடையார் கோயிலில்” – உடையார் ஸ்ரீ கைலாஸயிகமுடையாரான இராஜ வர முடையார் கோயிலிலே” “ ஸ்ரீ கைலாசநாதமுடையார் கோயில்” --- என்று கல்வெட்டுகளில் மன்னார்குடி கைலாசநாதர் கோயில் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

- மன்னார்குடி மேற்குப் பகுதியில் பேருந்து நிலையத்திலிருந்து 2 கீ.மீ. தூரத்தில் அமைந்த எழில் மிகுந்த சிவலாயம் அண்ணாமலை நாதர் கோயிலாகும்.
- மன்னார்குடி அண்ணாமலை நாதர் கோயிலில் சுதைச் சிற்பங்கள் சிதைந்தும், செங்கற்கள் பல்லைக் காட்டியும் பரிதாபமாககத் தோற்றம் தருகிறது.
- மன்னார்குடி அண்ணாமலை நாதர் கோயில் 35 அடி கோபுரத்துடன் கிழக்கு நுழைவாயிலாக திகழ்கிறது.
- மன்னார்குடி அண்ணாமலை நாதர் கோயில் 15 அடி உயரம் கொண்ட மதிலும், ஒரே திருச்சுற்றினையும் கொண்டுள்ளது.
- மன்னார்குடி அண்ணாமலை நாதர் கோயில் கருவறை, அர்த்த மண்டபம், முன்மண்டபம், மகா மண்டபம் என்ற அமைப்பினை உடையது.
- மன்னார்குடி அண்ணாமலை நாதர் கோயிலில் இரண்டு நுழைவாயில்கள் உள்ளன.
- மன்னார்குடி அண்ணாமலை நாதர் கோயில் திருமுற்றம், மடை வளாகம், தீர்த்தக்குளம் ஆகியவை இரண்டு வேலி நிலப்பரப்பில் அமைந்துள்ளது.
- மன்னார்குடி அண்ணாமலை நாதர் கோயிலில் அண்ணாமலையார் சன்னதி, உண்ணாமலை தேவி அம்மன் சன்னதி (இது கி.பி. 4ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்) விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர். நந்தி, பைரவர் சந்நிதிகளும் உள்ளன.
- மன்னார்குடி அண்ணாமலை நாதர் கோயிலில் 15 செப்புத் திருமேனிகள் உள்ளன. கி.பி.12 ஆம் நூற்றாண்டிலிருந்து 18 ஆம் நுஸற்றாண்டு வசசரையிலான காலத்தைக் கொண்டுள்ளன.
- மன்னார்குடி அண்ணாமலை நாதர் கோயிலில் மாணிக்கவாசகர். சம்பந்தர், அப்பர், சண்டீஸ்வரர் முதலிய செப்புத் திருமேனிகள் குறிப்பிடத்தக்கன.

- “உடையார் திரு அண்ணாமலை உடையார்” – “திருவண்ணாமலையுடையார் கோயில்” – “ என்று மூன்றாம் இராஜேந்திரனின் கல்வெட்டுகள் மன்னார்குடி அண்ணாமலை நாதர் கோயிலைப் பற்றி குறிப்பிடுகின்றன.
- “உடையார் திருவண்ணாமலை உடையாற்கு” என்று வீரபாண்டியன் கல்வெட்டிலும் மன்னார்குடி அண்ணாமலை நாதர் கோயிலைப் பற்றி குறிப்பிடுகின்றன.
- மன்னார்குடி அண்ணாமலை நாதர் கோயிலில் உள்ள ஆறு கல்வெட்டுகள் கல்வெட்டுத் துறையால் வெளியிடப்பட்டுள்ளன.

- எழுத்தாளர் (இப்புத்தகத்தின் ஆசிரியர்) மன்னார்குடி பானுகுமார் வரை 99 உரைகளை Vethathiriam Banukumar என்ற தலைப்பில் You tube ல் வெளியிடப்பட்டுள்ளது “ஞாபகம் வருதே ஞாபகம் வருதே”

மயானம் https://youtu.be/s_KTnLHFFcg

- மன்னார்குடி பாமணி ஆற்றங்கரையின் வடகரையில் 19,602 சதுர அடியில் ஜெயங்கொண்டநாதர் கோயில் அமைந்துள்ளது. அத ஒரு சிவாலயம்.
- சோழ மன்னன் இராஜாதிராஜனின் சிறப்புப் பெயரான “ஜெயங்கொண்டான்” என்ற பெயரில்- செயங்கொண்ட சோழீஸ்வரமுடையார் என்று மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயில் பெயர் பெற்றது.

- மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயில் 18 அடி உயரமுடைய மதிலைக் கொண்டுள்ளது.



- மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயில் பலமுறை திருப்பணிகளுக்கு உட்பட்டதால் சோழர்களில் கல்வெட்டு எதையும் முழுமையுடன் காணமுடியவில்லை.
- மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயிலில் சுமார் 6 அடி உயரத்தில் மேடைபோல் அமைத்து அதில் கருவறை, அர்த்த மண்டம், முன்மண்டபம் ஆகியவை இடம் பெற்றிருக்கின்றன.

- மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயிலில் ஒரு கோபுரமும் ஒரு வாயிலும் உள்ளன.
- மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயிலின் அம்மன் பெயர் பிரகான் நாயகியகும். நடனசம்மந்தர், சோமாஸ்சுந்தர் (சிவன்) போன்ற செப்புத் திருமேனிகள் உள்ளன.
- மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் ரோகிணி நாளில் குழம்புப்பால் திருவிழா நடைபெறுகிறது. இக்கோயிலில் இது மிகப்பெரிய திருவிழாவாகும்.
- மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயில் ஆண்டுதோறும் நடைபெறும் குழம்புப்பால் திருவிழாவில், பசும்பாலில் நாட்டுச் சர்க்கரை, குங்குமப்பூ, ஏலக்காய் முதலிய நறுமணப் பொருட்களைச் சேர்த்து காய்ச்சி, குழம்புப்பால் செய்து ஜெயங்கொண்டநாதருக்கு படைத்து வழிபட்டு, பின்பு

இராஜகோபாலுக்கு அனுப்புவது வழக்கமாக உள்ளது. இதனை சிவபெருமான் பெருமாளுக்கு பால் அனுப்புவதாக மக்கள் நம்பினர்.

- மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயிலில் நான்கு செப்பேடுகள் உள்ளன.
- தஞ்சை மராட்டிய அரசர் பிரதாபசிம்மன் காலத்தில் மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயிலுக்கு அளிக்கப்பெற்ற அறக்கொடைகளை நான்கு செப்பேடுகள் கூகின்றன.
- மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயிலின் ஏழு கல்வெட்டுக்கள் இதுவரை வெளிவந்துள்ளன.
- சத்ரபதி சிவாஜியின் ஆன்மிககுரு ராமதாஸ் சுவாமிகள் தஞ்சையை ஆண்ட ஏகோஜக்கும் ஆன்மீக போதனைகள் செய்தா. இச்சுவாமிகள் தன்னுடைய மூன்று சீடர்களை தஞ்சைக்கு அன்ப்பி ராபக்தி பிரசாசாரக் கேந்தரத்தை அமைக்கச் சொன்னார். அதன்படி மன்னார்குடியில் பிரச்சாரக் கேந்திரத்தை ஆனந்தமௌனி என்ற சீடர் அமைத்தார்.
- ஆனந்தமௌனிக்கு இரண்டு சீடர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவரான மேரு சுவாமிகள் தனது குருவிடம் நீங்காத பக்தியும், அன்பும் கொண்டு பல நூல்களைக் கற்றார். அனந்தமௌனி சுவாமிக்குப் பிறகு மன்னார்குடி பிரச்சார கேந்திரத்திற்கு தலைவராகவும் அமர்ந்தார்.
- மராட்டிய அந்தணர் குலத்தில் பிறந்த மேரு சுவாமிகள் மன்னையில் தங்கி சமயப் பணிக்ள கற்றார். இராம சோகளா, பீமோ உபகேச. அவதூத கீது, சிவானந்தலகிரி, ஆத்ம சாட்சாத்கார பூரணம் ருதகர, சோடசகலா, பிரம்மசமவிதி, ஆன்நத வால்மீகி இராமாயணம் போன்ற சிறந்த நூல்களையும், ஆயிரத்திற்கு மேற்பட்ட சபங்க, பத பாடல்களையும், கவிதைகளையும் எழுதினார்.

- அனந்தமௌனி சமாதிக் கோயிலும், மேரு சுவாமிகளின் சமாதிக் கோயிலும் அவருக்குப் பின் வந்த சேது சுவாமிகளின் சமாதிக் கோயிலும் மன்னை மக்களால் போற்றப்பட்டு பாதுகாத்து வரப்படுகின்றன.

- மன்னார்குடியில் ஐயர் சமாதி எனப்படும் இடத்தில் சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள் ஜீவசமாதி



அமைந்துள்ளது.

- நூற்றாண்டுகளுக்கு முன்னர் சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள் மன்னையில் தங்கி பல்வேற சித்து விளையாட்டுகளின் 5லம் மக்களின் துன்பம் போக்கியுள்ளார்.
- தன்னை நாடிவரும் நோயாளிகளுக்கு தன்னிடம் இருந்த சூட்டுக்கோல் மூலமும், மூலிகைகள் மூலமும் மன்னார்குடி சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள் வைத்தியம் செய்துள்ளார்.
- குஷ்டம் முதலிய பெரும் வியாதி உள்ளவர்களிடம் பேசிக்கொண்டே நோயாளிகளின் கவனத்தை வேறுபக்கம் திசை திருப்பி, அவர்கள் அறியாதவாறு தன்னிடம் உள்ள நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய இரண்டு கம்பிகளால் அந்த

அடியாரின் தொடையில் ஒரு இழுப்பு இழுத்து விடுவார் மன்னார்குடி சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள்.

- தன்னை நாடிவரும் நோயாளிகளை சுடப்பட்ட கம்பி மூலம் பிணியைப்போக்கியதால் சூட்டுக்கோல் ராமலிங்கம் என்று மன்னை மக்களால் அழைக்கப்பட்டார். தன்னை நாடி வந்தவர்களுக்கு சடச்சுட அன்ம் வழங்குவார்.
- மன்னார்குடி சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகளது அருள்வாக்குப்படி இவர் முக்தி அடைந்தபோது மன்னார்குடி நகரத்தில் நெசவுத்தறிகளும், எண்ணெய் கட்டும் செக்குகளும் சில விநாடிகள் நின்றன. தான் எப்படி எங்கு அடக்கம் செய்ய வேண்டும் என்று உயிருடன் இருந்தபோது கூறியிருந்தவாறு அடக்கம் செய்யப்பட்டார்.
- மன்னார்குடி சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகளது சீடரான மாயாண்டிச் சித்தரின் ஜீவ சமாதியும இவரது சமாதியருகே அமைந்துள்ளது. 

- மன்னார்குடியில் வாழ்ந்த டாக்டர் மேனன் குடும்பத்தால் ஆதரிக்கப்பட்ட வாட்டார் மௌனகுரு சுவாமிகள் சமாதியும் நகரின் தெற்கே அமைந்துள்ளது.
- மன்னையில் உள்ள வண்டுவராபதி மாமுனிகள் மடத்தில் சில குறிப்புகளைக் கொண்ட கல்வெட்டு ஒன்றுள்ளது.
- மன்னையில் உள்ள வண்டுவராபதி மாமுனிகள் மடத்துத் தலைவரும் அவரது சிஷ்யை பெரிய பிராட்டி என்பவரும் மட அபிவிருத்திக்காக தங்களது செல்வத்தைச்

செலுத்தியுள்ளளனர். மடநிலம் வரி நீக்கப்பட்டு அவர்கள் சேர்த்த நிலங்கள் மடத்துக்காக அனுபவிக்கப்பட்டன. அந்நிலத்தின் எல்லைகளும், இருப்பிடமும் குறிக்கப்பட்டுள்ளது.

- அச்சுதப்ப நாயக்கரின் மன்னார்குடி கல்வெட்டுக்ளை ஆராயும் போது கி.பி. 1577 ல் மன்னார்குடியில் திருமலை நம்பி தாத்தாச்சாரியார் என்ற வைணவ குரு ஒருவருக்கு நிலங்கள் அளித்த செய்த தெரிய வருகின்றது.
- இராஜகோபாலசாமி திருக்கோயிலில் திருமலை நம்பி தாத்தாச்சாரியார் உருவச் சிலையும், செப்புத் திருமேனியும் வழிபாட்டில் இன்றும் உள்ளன. செப்புத் திரு மேனியின் பீடத்தில் திருமலைநம்பிதாத்தாச்சாரியார் என்ற கிரந்த எழுத்துக்களில் எழுதப் பெற்றுள்ள பொறிப்பு காணப்படுகிறது.
- அச்சுதப்ப நாயக்கர் “நம் திருமலை நம்பி திருமலதாத்தாச்சாரியார்” என்று மன்னார்குடி கல்வெட்டில் குறிப்பிட்டிருப்பதும், அவருக்குச் சிறப்புகள் செய்திருப்பதும் கொண்டு அவர் நாயக்கரால் மதிக்கப்பெற்ற வைணவ குரு என்பதை நன்கு அறியலாம்.
- இராஜகோபாலசாமி திருக்கோயிலில்- பத்மாசனத்தில் அமர்ந்த கோலத்தில் கூப்பிய கரங்களுடன் காணப்பெறும் திருமலை நம்பி தாத்தாச்சாரியாரின் நெற்றியிலும் புஜங்களிலும் திருமணக்குறிகளும், தோள்களில் சங்கு சக்கரப் பொறிப்புகளும் காணப்படுகின்றன.
- ஐப்பசி திருமூலத்தில் திருநகரியில் அவதரித்த அந்தமில்சீர் மணவாள மாமுனிகள் மன்னை திருத்தலத்தில் பல்லாண்டு தங்கியிருந்ததாகவும் இப்பெருமாளிடம் போரில் ஈடுபட்டிருந்ததாகவும் வரலாறு கூறுகின்றது.
- மன்னை திருத்தலத்தில் பல்லாண்டு தங்கியிருந்த மணவாள மாமுனிகள் - மன்னை இராஜகோபால பெருமாளின் அன்றாட வழிபாட்டு முறைகளை முறைப்படுத்தினார்.

நாள்தோறும் திருவாய்மொழி பாசுரங்களை ஒழுங்குபடுத்தினார். இம்முறையே இன்றும் நடைபெற்று வருகிறது.

- மன்னை திருத்தலத்தில் பல்லாண்டு தங்கியிருந்த மணவாள மாமுனிகள் - மன்னை இராஜகோபால பெருமாளைப் பற்றி சிறப்புகளை “கோபால விம்சதி”, “கமலா ஸ்துதி”, “ராஜகோபால மங்கலம்” என்ற நூல்களில் எழுதியுள்ளார்.
- மன்னை திருத்தலத்தில் பல்லாண்டு தங்கியிருந்த மணவாள மாமுனிகள் - மன்னை இராஜகோபால பெருமாளைப் பற்றி சிறப்புகளை எழுதிய மூன்று நூல்களிலும்- -யாதவாப் யுதய வர்ணனைகளையும் விம் சதியிபாயும் சேவித்ததால் சுவாமி தேசிகன் இப்பெருமமாளின் வடிவினை உள்ளத்தில் கொண்டு இந்நூல்கள் இயற்றியதாக தோன்றுகிறது.
- மன்னை திருத்தலத்தில் பல்லாண்டு தங்கியிருந்த மணவாள மாமுனிகள் - மன்னை இராஜகோபால பெருமாளைப் பற்றி சிறப்புகளை எழுதிய மூன்று நூல்களிலும்- பெருமாளின் பெருமைகளை எடுத்தோதி “ஏழை ஏதிலன் கீழ்டமகன் என்னாது யாவர்க்கும் சேவை சாதிக்கும்” இறைவனின் பெருமைகளை விளக்கியுள்ளார்.
- மன்னை திருத்தலத்தில் பல்லாண்டு தங்கியிருந்த மணவாள மாமுனிகள் ஏற்பாட்டின்படிதான் ஆடித்தேர் நடைபெற்று வருகிறது.
- செங்கமலத்தாயார் என்றும் செண்பகலெட்சுமி என்றும் இச் செண்பாரண்யத் திருத்தலத்தில் எழுந்தருளி அருள் பாளித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீதாயாருக்கு ஆடிப்பூரத் திருவிழா கொண்டாட மணவாள மாமுனிகள் அருளச் செய்துள்ளார்.
- 150 ஆண்டுகளுக்கு முன்னர் வேதாரண்யம் செம்பேடையில், ரங்காச்சாரி-ஜானகியம்மாளுக்கு 27.9.1829ல் பிறந்த வாசுதேவர்...சிறுவயதிலேயே மன்னார்குடிக்கு

தெற்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ள நாகை என்ற கிராமத்தில் வந்து தங்கி ஜபம், தியானம் செய்து வந்தார். இங்குள்ள மக்கள் இவரைஆதி உத்ரயோகி என்றழைத்ததோடு, குருவாகவும் ஏற்றுக் கொண்டு நாகை ஜப்தா என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்னர்.

- மன்னார்குடி நாகை ஜப்தாவை உருவாக்கிய ஆதிஉத்ரயோகி சீடர்கள்-- பிரணவ சக்ர வடிவில் குஸ்மாகரகம் கட்டி-- தவம் செய்து வந்தனர்.
- மன்னார்குடிக்கு அருகில் நாகை ஜப்தாவை உருவாக்கிய உத்ரயோகி மகாசமாதியாவதற்கு முன் தன் சீடர்களிடம் "எனக்குப் பிறகு வடக்கிலிருந்து ஒரு உத்ரயோகி வந்து தெற்கில் தங்குவார்" என்று கூறியிருந்தார்.
- மூன்று தலைமுறைகளுக்குப் பிறகே ஆதி உத்ரயோகி கூறிய யோகி பாண்டிச்சேரியில் வந்து தங்கிய அரவிந்தர் என்பதை மன்னார்குடி நாகை ஜப்தாவில் தோன்றிய கோடியாளம் சகோரதர்கள் கண்டுணர்ந்தார்கள்.
- ஸ்ரீஅரவிந்தர் தனது வரலா்றறை முதலில் எழுதிய "YOGIC SADHAN' என்ற புத்தகத்தில் மன்னார்குடி நாகை ஜப்தா, குஸ்மாகரகம் போன்ற விவரங்களைக் குறிப்பிட்டுள்ளார்.
- மன்னார்குடி முதல்தெருவில் உள்ள ஏ.சீனிவாச அய்யங்கார் தனது வீட்டில் ஆதி உத்ரயோகியின் பாதுகைகளை பத்திரமாக பத்திரப்படுத்தி வழிபட்டு வருகின்றனர்.
- பாமணி, கோட்டூர், திருக்களர். திருவெண்டுதுறை முதலிய பாடல் பெற்ற கோயில்கள் மன்னார்குடி வட்டத்தில் உள்ளன.
- மன்னார்குடிக்கு அருகில் உள்ள பாமணி (திருப்பாதாளீச்சரம்) ஊருக்கு திருஞானசம்பந்தர் வந்த பதிகம் (கி.பி.640-656) பாடியிருப்பதால் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்தே இந்த ஊரும், இந்த ஊரில் உள்ள சிவாலயமும் இருந்து வருவதும் தலமாகப் போற்றப்படுவதும் தெரியவருகிறது.

- பாமணி என்ற இத்திருத்தலம் மன்னார்குடி புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே இரண்டு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.
- பாமணி, பாம்பணி சர்ப்பபுரம் எனப் போற்றப்படும் இந்த ஊரிலுள்ள சிவாலயம் பாதாளீச்சரம் என்ற பெயரில் வழங்கி வருகிறது.
- பிற்காலச் சோழர் கல்வெட்டுகளிலும் பாண்டியர் கல்வெட்டுகளிலும் இந்தஊர் சுத்தவல்லி வள நாட்டில் பாம்புணிக் கூற்றத்திலருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளதால், இந்த ஊரின் பெயரில் ஒரு கூற்றம் இருந்தமை புலனாகிறது.
- பாமணி ஊரின் பெயர் “திருப்பாம்புணி” என்றும், சிவாலயம் “திருப்பாதாளீச்சரம்” என்றும் அழைக்கபட்டிருக்கிறது.
- “பாம்புணி” என்று சோழர் காலத்தில் வழங்கி வந்த இந்த ஊர்ப் பெயர் காலப்போக்கில் மருவி இன்று “பாமணி” என்ற பெயரில் வழங்கி வருகிறது. இதனுடைய தலவிருட்சம் மாமரம். அம்பிகை அமிர்தநாயகி.
- திருப்பாதாளீச்சரம் இன்றைய தினம் நாகநாதசுவாமி திருக்கோயில் என்ற பெயரில் வழங்கி வருகிறது.
- நாட்டுக்கோட்டை நகரத்தாருள் ஓக்குர் திரு. இலட்சுமணன்செட்டியார் பாமணி கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளார்.
- விழுப்பரையர் மகள் கங்காண்டார் என்பவர் பாமணி கோயிலில் தாம் எழுந்தருளிய இறைவன் திருமேனியின் வழிபாட்டிற்காக நிலக்கொடை வழங்கியுள்ள செய்தி சடையவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டில் காணப்படுகிறது.
- பாமணி நாகநாதசுவாமி கோயிலில் உள்ள இரண்டு கல்வெட்டுகளில் “ஸ்ரீபூதி விண்ணகராழ்வார்”என்ற பெருமாள் கோயிலில் விளக்கெரிக்க 96 ஆடுகள் வழங்கப்பட்ட

செய்தியும், தினமும் ஒருவருக்கு உணவளிக்கக் கொடை வழங்கப்பட்டிருந்த செய்தியும் காணப்படுவதால் முதலாம் இராசராசசோழனின் ஆட்சிக்காலத்தில் இக்கோயில் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

- பூதி விண்ணகராழ்வார்" என்ற பெயரில் பாமணிப் பகுதியில் பெருமாள் கோயில் ஒன்றிருந்ததும் புலப்படுகிறது.
- **மன்னை ப. நாராயணசாமி** தமிழக அரசியல்வாதி . தமிழக அமைச்சரவையில் கூட்டுறவு, விவசாயம், உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பணியாற்றியுள்ளார். திராவிடக் கொள்கையில் பற்றுக் கொண்ட இவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆரம்ப காலம் முதல் முக்கியப் பங்கு வகித்தவர். இவரது குடும்ப பெயர் *ப. நாராயணசாமி ஓந்திரையர்* ஆகும்.



- 1971ம் ஆண்டு திமுக முன்னாள் அமைச்சர் மன்னை நாராயணசாமி முயற்சியால் மன்னார்குடி மக்களுக்கு அளித்த பரிசு பாமணி உரத்தொழிற்சாலை. இங்கு தயாரிக்கப்படும் பாமணி. 17:17:17 என்ற உரம் தமிழகம் மட்டுமல்லாமல் அண்டை மாநிலங்களிலும் சிறப்பான வரவேற்பை பெற்றுள்ளது.
- பாமணி உரத்தொழிற்சாலை. 2013-14ம் ஆண்டு 15 ஆயிரம் டன் உற்பத்தி செய்த இந்த தொழிற்சாலையில், 2017-18 ம் ஆண்டு தற்போது வரை ஏறத்தாழ 8 ஆயிரம் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

- பாமணி உரத்தொழிற்சாலை- 2013-14ம் ஆண்டு 15 ஆயிரம் டன் உற்பத்தி செய்த இந்த தொழிற்சாலையில், 2017-18 ம் ஆண்டு தற்போது வரை ஏறத்தாழ 8 ஆயிரம் டன் மட்டுமே உற்பத்தி

செய்யப்பட்டுள்ளது.கடந்த காலங்களில் டிசிளம்எப் மூலம் 2000 டன் விற்பனை செய்யப்பட்ட நிலையில், தற்போது 375 டன் மட்டுமே இச்சங்கங்களால் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

- பாமணி உரத்தொழிற்சாலையை நவீன மயமாக்கி பல்வேறு விவசாய இடுபொருட்களை தயாரிக்கலாம். இதன் மூலம் பலருக்கும் வேலை வாயப்பு கிடைக்கும். தொழிற்சாலையை நவீன மயமாக்கி பல்வேறு விவசாய இடுபொருட்களை தயாரிக்கலாம். இதன் மூலம் பலருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

- பாமணி உரத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் மண்புழு உரம் ஒரு கிலோ ரூ.15 என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. அதனையும் பாமணி 17:17:17 காம்ப்ளக்ஸ் உரத்தையும் விவசாயிகள் அதிகம் பயன்படுத்த வேண்டும்.
- பாமணி உரத்தொழிற்சாலையில் 1971ம் ஆண்டு 185 நிரந்தர பணியாளர்கள், நூற்றுக்கணக்கான தற்காலிக ஊழியர்கள் பணியில் இருந்தனர். தற்போதைய அரசு இந்த தொழிற்சாலை மீது கவனம் செலுத்தாத நிலையில் தற்போது 9 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 24 தற்காலிக ஊழியர்கள் மட்டுமே உள்ளனர்.
- சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களுள் 112 வது தலமான திருவெண்டுறை, மன்னார்குடி வடபாதிமங்கலம் சாலையில் மன்னார்குடியிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.
- பிரம்மேசுவரர், பிரமபுரீசர்,மதுவனேசர் என்றழைக்கப்படும் திருவெண்டுறைநாதர் திருக்கோயிலைத் திருஞானசம்பந்தர் பதிகம் பாடிப் போற்றியிருக்கிறார்.
- திருவெண்டுறை ஆலயம் கி.பி.ஏழாம் நுற்றாண்டிலிருந்தே சிறப்புடன் விளங்கி வருகிறது. “வேன் கண்ணி” என ஞானசம்பந்தர் இந்தஊர் இறைவியைக் குறிப்பிட்டுப் பாடியிருப்பது போலவே, இன்றளவும் இறைவியின் பெயர் வேனெடுங்கண்ணி (வடமொழியில் சத்தியாயதாட்சி, பிரகதாம்பாள்) என்றழைக்கப்டுவதும் குறிப்பிடத்தக்கது.

- திருக்களார் கிராமம் மன்னார்குடியிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. காவிரித் தென்கரைத் தலம். 105 ஆவது திருத்தலம் திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.
- மன்னார்குடிக்கு அருகில் உள்ள திருக்களார் - பராசரமுனிவர். துர்வாசமுனிவர். கால பைரவர் பூஜித்துப் பேறு பெற்றது.
- மன்னார்குடிக்கு அருகில் உள்ள திருக்களார் தலத்தின் வேறு பெயர்கள் - பாரஜாதவனம், தருவனம், கற்பகவனம், துர்வாசமுனிவருக்குப் பெருமான் நடனக் காட்சி தந்த தலம்.
- மன்னார்குடிக்கு அருகில் உள்ள திருக்களார் தலத்தின் சுவாமி - களர்முனை நாதர், பாரிஜாதவனேஜஸ்வரர். அம்பிகை - இளங்கொம்பன்னாள் - அமுதவல்ல-அழகேஸ்வரி. தீர்த்தம் - துர்வாசர் தீர்த்தம், பிரமதீர்த்தம், ருத்ரதீர்த்தம், ஞான தீர்த்தம். தல மரம் பாரிஜாதம். பண் - சீகாமரம்.
- மன்னார்குடிக்கு அருகில் உள்ள திருக்களார் திருஞானசம்பந்தரால் பாடி பரவசப்பட்ட தலமாகும். சம்பந்தர் 11 பாடல்களைப் பாடி மகிழ்ந்துள்ளார்.
- மன்னார்குடிக்கு வந்து திருகுளத்தில் நீராடி செங்கமலத்தாயார் சமேதரான ஸ்ரீவித்யா இராஜகோபாலனை தரிசித்தால், கோடி பசுக்களைத் தானம் செய்த பலனும், கோடி திருமணம் செய்து வைத்த பலனும் கிடைக்கும் என்கிறது தலவரலாறு.
- பாடல்கள் பல பெற்ற திருத்தலங்கள் நிறைந்த மன்னார்குடி பழமையான ஊராகும். திருஞானசம்பந்தர் முதல் பல முனிவர்களாலும், சித்தர்களாலும் பாடப் பெற்ற கோயில்களின் அரிய செய்திகளின் வழியே மன்னார்குடியின் புகழை அறியலாம்.
- இராஜ மன்னார்குடியில் வாழும் மக்கள் அறச்சிந்தனையும், பொது நல நாட்டமும் உடையவர்களாய் விளங்குகின்றனர்.
- இராஜகோபலசாமி கோயிலில் நடைபெறும் விழாக்களில் இந்துக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு கடவுளை வழிபடுகின்றனர்.
- மன்னார்குடியில் -தொடக்க காலத்தில், மன்னர்கள் ஏற்படுத்திய விழாக்கள் அனைத்தும் இன்று மக்களால்

நடத்ப்படுகின்றன. இவ்விழாக்களைக் குறிப்பிட்ட சாதியினர் தங்கள் பொறுப்பில நடத்துகின்றனர்.

- வாழ்க்கையில் ஒரு முறையாவது காசிக்குப் போக வேண்டும் என்பது போல வாழ்க்கையில் ஒரு முறையாவது மன்னார்குடியில் 18 நாள் திருவிழாவை தரிசிக்க வேண்டும்.
- இராஜகோபலசாமி பிரமோறச்சவமானது மிகச் சிறப்பாக வேறு எந்த ஊரிலும் இல்லாத அளவுக்கு நடைபெற்று வருகிறது. தீட்தர்கள் பெருமாளுக்கு அழகுக்கு அழகு செய்வதைக் கண்டால் மெய் சிலிர்க்கும்.
- காலம் காலமாக மரபுகள் துளியும் மாறாமல் நடைபெற்று வரும் மன்னார்குடி திருவிழாக்கள் நாம் கண்டு தரிசிக்க வேண்டிய அருங்காட்சிகள்.
- மன்னார்குடியைச் சுற்றியுள்ள ஊர்களில் மாரியம்மான் கோயில், காளியம்மன் கோயில், அய்யனார் கோயில் திருவிழாக்கள், தீமிதி, அங்கா பரமேஸ்வரி அம்மன் மயானசூறை மதலரிய திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன.
- சோழர்கள் ஆட்சியில் சைவம் நன்கு வளர்ந்தது. சமயக் குரவர்களில் திருஞானசம்பந்தர், மன்னார்குடி வட்ட கோயில்களைப் பாடி பரவசமடைந்துள்ளார். பாமணி, கோட்டூர், திருக்களார், திவேண்டுதுறை முதலிய ஊாக்ள பாடல் பெற்ற் கோயில்களை கொண்டவையாகும்.
- நாயக்க மன்னர்கள் காலத்தில் மன்னார்குடியில் வைணவம் தழைத் தோஙிகயது. மன்னார்குடி., திருமக்கோட்டை முதலிய இடங்களில் உள்ள பெருமாள் கோயில்கள் குறிப்பிடத்தக்ன. பல்வேறு வைணவப் பெரியார்கள் இச்சமயத்தைப் பாடி புகழந்துள்ளனர்.
- திருவாருர் மாவட்டத்தை உள்ளடக்கிய சோழநாட்டில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே பௌத்த சமயம் சிறப்புற்று விளங்கிற்று. சமீப காலங்களில் மன்னார்குடி வட்டத்திலும் அதன் எல்லையை ஒட்டிய பகுதிகளிலுள்ள ஊாகளிலும பௌத்தம தொடர்பான சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றில் குறிபபிடத்தக்க ஊாகளில் பூதமங்கலம் என்ற ஊரும் ஒன்று.

- மன்னார்குடி சோழர் காலத்தில் சமணத் தலமாக இருந்திருக்கலாம் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். இன்றும் இந்த ஊரில் சமணர்கள் வாழ்ந்து வருகின்றனர். சைவ, வைணவ சமயங்களின் எழுச்சியில் இங்கிருந்த சமணப்பள்ளி, பள்ளன்கோயில் சமணப்பள்ளியைப் போன்று முற்றிலுமாக அழிந்துபட்டிருக்க வேண்டும்.
- கிறிஸ்துவ சமயம் மன்னார்குடிக்கு சிறப்பான கல்விப் பயின் மூலமும், இறைப்பணியின் மூலமும் பெறும் வளர்ச்சியை உண்டாக்கியது.
- “மன்னார்குடிக்கு ஐந்து மைல் கிழக்கே - வழகிழக்கில் உள்ள கூத்தாநல்லூர் இஸ்லாமியர் அதிகம் வாழும் பகுதி மக்கட் தொகை 3104 பேர்களில் 2677 பேர்கள் இஸ்லாமியர்கள் என்று கெஜட்டியர் கூறுகிறது.
- தெய்வீகப் பேரொளியைச் சிந்தி எழில் சிறந்திலங்கும் நகரம் மன்னார்குடி. ஆநிரைக் காப்பான் விரும்பி விளையாடும் விண்ணகக் கோயில்களும், பிறையணிந்த பெருமான் பீட ஆலயங்களும், மடலாயங்களும், சத்திரங்களும் சார்ந்துள்ள நகரம்.
- வைணவமும் வைசமும் என வளர்த்த பெரு நகரம் மன்னார்குடி. ஜைனமும், கிறித்துவமும் இஸ்லாமும் இணைந்த நகரம்.
- பெசண்ட் அம்மையார் தந்த பிரம்மஞானசபையும், வள்ளலார் பெயரில் வளரும் திருச்சபைகளும், வேதாத்திரி மகரிஷியின் மனவளக்கலை மன்றங்களும், ஓம் சக்தி மன்றங்களும், புகழ்பெற்ற சர்ச்சுகளும், மசூதிகளும் இங்கு உண்டு.
- இந்துக்கள், இஸ்லாமியர், கிறித்துவர்கள், சமணர்கள் போன்ற பல்வேறு மக்கள் மன்னையில் வாழ்கின்றனர். இந்து சமயத்தில் பிராமணர். கள்ளர். வன்னியர். யாதவர், நாடார். தேவர், செட்டியர், முதலியார் போன்ற பிரிவகளில் உள்ளவர்கள் இங்கு வாழ்கின்றனர். அதில் பிராமணர்கள் அதிகம் வாழ்கின்றனர்.
- மன்னார்குடி வட்டத்துக்காரர்களின் தலையாய பண்பாடு “விருந்தோம்பல்” ஆகும். “செலவிருந்தோம்பி வருவிருந்து

பார்த்திருக்கும் பண்பாளர்கள். முனபின் தெரியாதவர்கள் வீடு தேடி வந்து விட்டாலும் அவர்களுக்கும் விருந்து படைக்கும் குணம் இவர்களிடம் இயற்கையாக அமைந்துள்ளது.

- மரியாதை வழங்குவதில் பெயர் போனவர்கள் மன்னார்குடிக்காரர்கள். வாங்க, போங்க, உட்காருங்க என்று தான் பேசுவார்கள். வயதில் பெரியவர்களை ஐயா என்றழைப்பார்கள் பல வீடுகளில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வாங்க ஐயா, போங்க ஐயா, சின்ன ஐயா, பெரிய ஐயா, நடு ஐயா என்றுதான் அழைப்பார்கள்.
- வம்பு , வழக்குகள், தகராறுகள் போன்றவற்றில் "நாட்டுப் பஞ்சாயத்து மூலம் தீர்க்கும் வழக்கம் இன்றும் இவ்வட்டத்தில் நடைமுறையில் இருந்து வருகிறது. (எட்டு நாட்டு பஞ்சாயத்து முறையும் அமுலில் உள்ளது.)
- மன்னார்குடி வட்டத்திலுள்ள எல்லா விசேஷங்களிலும் வெற்றிலை, சீவலுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள்.
- திருமணம், மற்றும் பிற சடங்குகளுக்கு விருந்தினர்களாகிய உறவினர்களை அழைப்பதற்கு அழைப்பிதழுடன் வெற்றிலை சீவல் வைத்து ஒரு குறிப்பிட்ட தொகையையும் வைத்து அழைப்பார்கள்."பாக்கு பணம் வைத்து அழைப்பது" என்ற சம்பிரதாயம் இந்த வட்டத்தில் நடைமுறையில் உள்ளது.
- துக்கம் கேட்க வருபவர்களுக்கு வெற்றிலை சீவல் தட்டு வைப்பது இந்த வட்டத்தில் இங்கு மட்டும்தான்.
- மன்னை வட்டத்தில் ஒரு இல்லத்தில் ஒருவர் இறந்து விட்டால் அதனை "தண்டோரா" மூலமும், நெருங்கிய உறவினர்களுக்கு ஆள் அனுப்பியும் தெரிவிப்பார்கள்.
- திருமணம், காதணி விழா போனற் நிகழ்ச்சிகளில முதலிடம் அளிப்பது தாய் மாமனுக்குத்தான். மாமன் சீர் கொடுத்தால்தான் திருமணம், காதணி விழா போன்றவைகள் நிறைவாக இருக்கும் என்ற வழக்கத்தில் உள்ளவர்கள். இது மட்டுமல்ல் துக்க காரியங்களிலும மாமன் மாரியாதையை ஏற்க வேண்டும்.

- மன்னை வட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பெரும்பான்மையினரைக் கொண்ட ஜாதியினரை முதன்மையாக வைத்து அக்கிராம நிகழச்சிகள் நடைபெறும்.
- மன்னார்குடிகாரர்கள் வெற்றிலைப் பிரியர்கள். அவர்கள் வெற்றிலை போடுகிற அழகைப் பார்த்திருக்கிறீர்களா? வெற்றிலையை வலிக்காமல் எடுத்து அதன் முதுகைத் தடவிக்கொடுத்து. சுண்ணாம்பைத் துளி விரலால் ஓவியம் வரைவது போலத் தீட்டி, மெதுவாக மடக்கி, பாக்கை வாசனை பார்த்து....சரி போதும்....சுருக்கமாக---- அவர்கள் வெற்றிலை போடுவது ஏதோ ராக ஆராபணை பண்ணுவது போல இருக்கும்.
- மன்னார்குடி வட்டத்தில் குளம், ஏரி, ஆறு, வாய்க்கால், கிணறு பாசனங்கள் உள்ளன.
- கல்லணையில் காவிரியிலிருந்து பிரிந்து செல்லும் வெண்ணாறு 43 மைலில், நீடாமங்கலம் அருகே முக்கொம்பு என்ற இடத்தில் கோரையாறு, பாமிணியாறு என்று பிரிகிறது. இரண்டு ஆறுகளும் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி வட்டங்கள் மூலமாகச் சென்று முத்துப்பேட்டை அருகே கடலில் கலக்கின்றன.
- நீடாமங்கலம் அருகே முக்கொம்பில் பிறந்த பாமிணியாற்றின் நீர்ப்பாசனம் 38,357 உற்கடேராகும்.
- பாமிணியாற்றின் நீளம் 33 மைலாகும். இதனால் பயன்பெறும் ஆயக்கட்டுகளின் பரப்பளவு 37,344 ஏக்கராகும்.
- இவ்வட்டத்தில் பாயும் முள்ளியாற்றின் நீளம் 27 மைலாகும். இதனால் பயன்பெறும் ஆயக்கட்டுகளின் பரப்பளவு 26,879 ஏக்கராகும்.
- மன்னார்குடி வட்டத்தில் நீர் ஆதாரத்திலரிருந்து நிலத்திற்கு அதிக சேதாரமின்றி நீர் கொண்டு செல்லப்படுகிறதது. அனைத்து நிலங்களுக்கும் உள்ள நீர் உரிமை மதிக்கப்பட்டு முதற்பாசனம் மூலம், நீர்தட்டுக் காலத்திலும் உரிய நீர் கிடைக்கும் வகையில் வசதிகள் வகுத்து பாசனம் செய்யப்படுகிறது.
- பி.வி. ஜகதீசஐயர் எழுதியுள்ள" "ஜில்லா சரத்திரம் தஞ்சாவூர் " என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகள் ஏராளம் உள்ளன.

- வி.டி. செல்வம் எழுதியுள்ள” “தமிழக வரலாறும் பண்பாடும் “ என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகள் பலவற்றைக் காணலாம்.
- என். சேதுராமன் எழுதி 1989 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள “பாண்டியர் வரலாறு “ என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகளை அறியலாம்.
- ஆர். வசந்தக்கல்யாணி எழுதி 1984 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள “தமிழக கோயில் கல்வெட்டு “ என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகளை அறியலாம்.
- கு. தாமோதரன் எழுதி தொல்லியல் துறை வெளியிட்டுள்ள “வரலாற்றில் தஞ்சை” என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகளை பார்க்க முடிகிறது..
- கோமலே எழுதி 1961 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள “தஞ்சதவூர் மாவட்டம் “ என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகளை பார்க்க முடிகிறது..
- கே.கே. பிள்ளை எழுதி உலக தமிழராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள “தமிழ்நாட்டு வரலாறு - மக்களும் பண்பாடும் “ என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகளை பார்க்க முடிகிறது..

- மன்னார்குடி நகருக்குள் பாமிணியாறு பாய்கின்றது. இதன் பிரிவுகளாய் கால்வாய்களும் இப்பகுதியில் ஓடுகின்றன.
- இவ்வட்டத்தில் உள்ள வேளாண்மை வளத்தால் சாலைகளின் அகலம் மிகவும் குறையாக இருப்பதும் ஆறு, கால்வாய் ஆகியவற்றின் மிகுதியால் எங்கே பார்த்தாலும் குறுகலான பாலங்கள் இருப்பதும் அடிக்கடி பாலத்தைக் கடந்து வேறு திசையில் செல்ல வேண்டியிருப்பதும் வட்டத்தில் போக்குவரத்துக்குத் தடையாக உள்ளன.
- நிடாமங்கலம் வழியாகக் கும்பகோணம் செல்வதற்காக இந்நகரின் வடக்குப் பகுதியில் மேம்பாலம் என்னும் பெயரில் ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

- கெழுகத்தூர் வழியாக முத்துப்பேட்டை செல்வதற்கும், கோட்டூர் வழியாகத் திருத்துறைப்பூண்டி செல்வதற்கும், கூத்தநல்லூர் வழியாக திருவாருர் செல்வதற்கும், மன்னார்குடி நகரின் கிழக்குப் பகுதியில் பாமணியாற்றில் ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. அதனைக் கீழப்பாலம் என்று அழைப்பர்.
- ஊரின் வடக்கே பாமிணி ஊருக்குச் செல்ல, 1916ல் கட்டப்பட்ட பழமையான பாலம் ஒன்றுள்ளது.
- மன்னையிலிருந்து பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் போன்ற இடங்களுக்குப் பேருந்துகள் செல்ல சாலை வசதிகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.
- பழைய மன்னார்குடி வட்டத்தில வடுவூரில் 316 ஏக்கர் மிகப்பெரிய ஏரி உள்ளது. இதனால் பல ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இந்த ஏரி பறவைகள் சரணாலயமாகவும் அமைந்துள்ளது.
- குளங்களை அகழ்வதிலும் பராமரிப்பதிலும் சோழநாடு பேரார்வம் காட்டிய வந்துள்ளது. மன்னர்குடி நகரத்தில் 64 குளங்கள் இருந்துள்ளன. தற்சமயம் 17 குளங்களே உள்ளன.
- இந்த வட்டத்தில் விரிவான குடிநீர்த் திட்டம் நடைபெறுகிறது. மன்னார்குடி நகரத்தில் மேல் நிலை நீர்த்தேக்கம் ஒன்றுள்ளது. தினசரி ஒரு நபருக்கு 41 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது.
- இவ்வட்டத்தில் ஆற்று நீர் பாயும் நீண்ட காலப்பயிரை பாசனம் அல்லது சம்பா என்றும், குறுகிய காலத்தில் மழைநீரால் நடைபெறும் விவசாயத்தைக் குறுவை அல்து கார் என்றும் அழைப்பார்கள்
- இவ்வட்டத்தில் நெற்பயிர்களுடன் கரும்பும் பயிரிடப்படுகின்றன. வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியை ஊக்கப்படுத்தி வந்தது. தற்சமயம் இந்த ஆலை செயல்படவில்லை. இப்பகுதியில் விளையும் கரும்புகள் தஞ்சாவூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.
- இவ்வட்டத்தில் வாழையும், மக்காச் சோளமும், பருத்தியும் பயிர் செய்யப்படுகின்றன.

- மன்னார்குடியைச் சுற்றியுள்ள 128 கிராமங்களிலும் அனைத்துச் சிறுநிலச் சுவான்தார்களும் பண்ணையார்களும் மூன்று போகச் சாகுபடி செய்வர். அதாவது ஆனி அல்லது ஆடி மாத்தில் குறுவை நாற்று விடப்படும். காவிரி பொய்த்ததால் இப்போது நிலைமையே வேறு.
- குறுவை நடவு 9950 கெக்டேரிலும், சம்பா நடவு 30444 கெக்டேரிலும், தாளடி நடவு 8110 கெக்டேரிலும், கரும்பு நடவு 271 கெக்டேரிலும், நிலக்கடலை 142 கெக்டேரிலும், உளுந்து 192 கெக்டேரிலும் பயிடப்பட்டு வருகிறது.
- இவ்வட்டத்தில் சம்பா சாகுபடி ஜீலை 15 தொடங்கி டிசம்பர் 14 வரை நடைபெறும். (155-165 நாட்கள்) தாளடி சம்பா செப்படம்பர் 15 தொடங்கி சனவரி 31 வரை (120-135 நாட்கள்). தாளடி சம்பா நெல் அத்தனை தரமுள்ளதாக இருக்கும்.
- இங்கு உற்பத்தியான நெல் மூட்டைகளை விவசாயிகளிடமிருந்து பெற்று இருப்பில் வைத்து, சுந்தரக் கோட்டையில உள்ள (Modern Rice Mill ) நவீன அரசி ஆலையின் மூலம் அரிசியாக மாற்றி மக்கள் பயன்படுத்த உதவுகிறது.
- இந்த வட்டத்தில் சம்பா அறுவடை முடிந்த பிறகு அந்த வயல்களில் உளுந்து அல்லது பயிறு தெளிக்கப்படும். இவை ஊடு பயிராக வளர்ந்து நல்ல பலனைத்தரும். விவசாயிகளைப் பொறுத்த வரையில் எவ்வித கடின உழைப்பும் இல்லாது பெறப்படும் தானிய வகைகள் இவை.
- தொன்மை காலம் தொட்டு இன்றளவிலும் விவசாய உற்பத்தியிலும், நீர்ப்பாசனத்திலும் மன்னார்குடி வட்டம் தலையாய இடம் வகிக்கிறது. இதன் இயற்கைச் சூழலும் , மண் வளமும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன.
- மாயோன் மேய காடுறை உலகமும்" என்று முல்லை நிலத்தைப் பற்றி தொல்காப்பியர் கூறுகிறார். தலையாமங்கலச் சரகத்தில் "மரவாக்காடு" என்ற ஊர் உள்ளது. மற்றொரு ஊர் "வெட்டிக்காடு".

- நீர் தேங்கியுள்ள இடம் குளம் எனப்படும். அப்படிப்பட்ட குளங்களின் அருகில் அமைந்த ஊர்கள் குளங்கள் எனப்படுகிறது. பாமணி ஆற்றங்கரையில் அந்தணர்கள் வாழ்ந்த சேராங்குளம் புகழ் பெற்றது. அண்டிக்குளம் – செம்மங்குளம்.

- வேதம் ஓதுவதற்கும், வடமொழியை இப்பகுதியல் பரப்புவதற்காகவும் அந்தணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்குவதற்காகப் புதிதாக உண்டாக்கப்பட்ட ஊர்கள் அக்ரஉறாரம் எனப்பட்டுள்ளது. சில ஊர்ளில் அந்தணர்கள் தங்கும் தெருக்கள் அக்ரஉறாரமாக இன்றும் அழைக்கப்படுகின்றன. வடுவூர் அக்ரஉறாரம் இப்பகுதியல் உள்ளது.
- மன்னை நகருக்கு பெருமை சேர்த்த கல்வி நிறுவனங்களுள் குறிப்பிடத்தக்கது பின்லே காலேஜ் ஆகும். 1845 அல் வெஸ்லியன் மிஷினின் ஆக்கத்தால் பள்ளியாக (Lower Secondary School ) இது உருவானது.
- பின்லே கல்லூரி தொடக்கத்தில் (1883) இல் நாகப்பட்டிணம் வெஸ்லியன் உயர்நிலைப் பள்ளியோடு இணைக்கப் பட்டிருந்தது. இதன் முதல்வராக ரெவரண்ட் W.H. பின்லே என்பவர் இருந்தார்.
- நாகப்பட்டிணத்தில் இருந்த பின்லே கல்லூரி மூடப்பட்டு பின்பு 1898 இல் இதனை மன்னார்குடியில் துவக்கினர். அப்போத உதயமானதே பின்லே காலேஜ். இது சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருந்தது.
- 1990 அல் இக் கல்வி நிறுவனத்தில் 649 பேர் பயின்றார்கள். இவர்களுள் 62 பேர் கல்லூரியிலும் 209 பேர் இடைநிலைப்பள்ளியிலும் 144 பேர் துவக்கப் பள்ளியிலும் பயின்றார்கள் என்று கெஜட்டியர் கூறுகின்றது.
- பின்லே கல்லூரியின் முக்கிய கட்டடத்தை 1871 இல் லார்ட் நேப்பியர் என்பவர் திறந்தார் என்று குறிப்பும் உள்ளது. இது போதுமானதாக இல்லை. பல வகுப்புகள் தற்காலிக கூரையில் நடைபெற்றன.

- பின்லே கல்லூரி படிப்பிற்கு ஒரு பருவத்திற்குக் கட்டணம் ரூ.21 வசூலிக்கப் பட்டதாகவும் இரண்டு ஆங்கிலேயர்கள், நான்கு இந்திய பட்டதாரி ஆசிரியர்கள், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய பண்டிதர்கள் இங்கு பேராசிரியர்களாகப் பணிப்புரிந்ததையும், சில ஆவணங்கள் குறிக்கின்றன.
- பின்லே கல்லூரியில் நாகை, திருவாரூர், தஞ்சை போன்ற இடங்களிலிருந்து இங்கு வந்து மாணவர்கள் கல்வி பயின்றதாகவும் அறிய முடிகிறது.
- பின்லே பள்ளியில் தங்கும் விடுதி வசதி இல்லை. நகரத்தில் பாதுகாப்பில்லாத மாணவர்கள அவர்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு வகுப்பு ஆசிரியர்கள் சென்று மேற்பார்வை செய்தனர். நான்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டன.
- வெஸ்லியன் மிஷின் நடத்திவரும் பின்லே கல்லூரி தஞ்சை மாவட்டத்திலேயே உயர்தரக் கல்லூரியாக திகழ்ந்தது.
- கிறிஸ்துவ சமயம் பின்லே காலேஜ் மூலம் மன்னார்குடியில் கல்வி வளர்ச்சிக்கு தளம் அமைத்தது.
- அயல்நாட்டுக் கல்வி மூலம் ஆசிரியா், நிர்வாகிககள், அஞ்சல், சட்டத்துறை மற்றும் தொழில் நுட்பக் கல்வியிலும் மாணவர்கள் பங்கு பெற உதவியது பின்லே காலேஜ்.
- ஜெர்மனியைச் சேர்ந்த மாக்ஸ்மல்லர் என்ற வடமொழி அறிஞரிடம் ஒருவர், “நீங்கள் ஸ்மஸ்க்ருதத்தில் இத்தனை புலமை பெற்றிருக்கிறீர்களே, அம் மெழியின் நாடான இந்தியாவிற்கு ஏன் செல்லவில்லை?” என்று கேட்டபொழுது அதற்கு அவர் அளித்தபதில் மிக மிக அற்புதமானது.
- “நான் இந்தியா செல்லவேண்டும் என்று விரும்பினால் அது சென்னை மாகாணத்தின் தஞ்சை மாவட்டத்தில் உள்ள மன்னார்குடியில் வசிக்கும் ஸ்ரீமத் ராஜீ சாஸ்திரிகளைச் சந்திப்பதற்காக மட்டும் இருக்கும்.” என்று சொன்னவா் ஜெர்மனியைச் சேர்ந்த மாக்ஸ்மல்லர். இதிலிருந்து இவருடைய புலமையின் கடல் கடந்த புகழையும் அறியாலாம். இப்படி இவர்களுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த பல அற்புதங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

- பிரம்மஸ்ரீ ராஜீ சாஸ்திரிகள் மன்னார்குடியில் கி.பி. பத்ததொன்பதாம் நுஸற்றாண்டின் பிற்பகுதயில் தனது அதிசயத்தக்க புனித வாழ்க்கையாலும், தன்னிகரற்ற் புலமையாலும் பிரகாசித்து வந்தவர்.
- நாயக்க மன்னர்களில் அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் வாழ்ந்த ஸ்ரீமத் அப்பய்ய தீட்சிதர் அவர்களின் வம்சத்தில் ஒன்பதாவது நேர் தலைமுறையைச் சார்ந்த்வர் மன்னார்குடி



பிரம்மஸ்ரீ ராஜீ சாஸ்திரிகள்.

- மன்னார்குடி பிரம்மஸ்ரீ ராஜீ சாஸ்திரிகள் கி.பி.1815 மே மாதம் 28 தேி ஞாயிற்றுக்கிழமை (யுவ வருடம் வைகாசி மாதம் 17ம் தேதி) திருவோண நட்சத்திரத்தில் அவதரித்தார்.
- மன்னார்குடி பிரம்மஸ்ரீ ராஜீ சாஸ்திரிகளுடைய தந்தையும் பாட்டனாரும் திருவாரூருக்கு அண்மையில் உள்ள கூத்தம்பாடி என்ற கிராமத்தில் வசித்தது வந்தனர். இவர்களுக்கு இக்கிராமம் மானியமாக கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது.
- மன்னார்குடி பிரம்மஸ்ரீ ராஜீ சாஸ்திரிகள் ஸாமவேத லஷணங்களை தன் பாட்டனாரிடமும், தனது தந்தையாரிடமும் காவிய, நாடகங்களையும் கற்றுத் தேர்ந்தார்.
- தன்னுடைய பதினைந்தாவது வயதிலேயே வடமொழியில் நன்கு பேசவும், அழகான கவிதைகளைப் புனையவும் ராஜீ சாஸ்திரிகள் ஆற்றல் பெற்றிருந்தார்.
- மன்னார்குடி பிரம்மஸ்ரீ ராஜீ சாஸ்திரிகளது முதல் குரு நாராயண சரஸ்வதி. பிறகு இவர் இங்கு தாய்மாமன்

வீட்டில் தங்கிக்கொண்டு கோபாலச்சாரியார் அவர்களிடம் சில வருடங்கள் தர்க்கம், வியாகரண சாஸ்திரங்களைக் கற்றார். இருபது வயதில் சாஸ்திரங்களில் நடந்த விவாதங்களில் வெற்றிவாகை சூடத் துவங்கினார்.

- மகாபாஷ்யம் படிப்பை மேலக்காவேரி சின்னண்ணா தீட்ஷதரிடமும், மீமாஸாவை கும்பகோணம் ரகுநாத சாஸ்திரிகளிடமும் கற்று, மன்னார்குடி வந்த நிரந்தரமாகத் தங்கினார் ராஜீ சாஸ்திரிகள். இவருக்கு சாஸ்திரி என்ற பட்டம் இவருடைய குருவான கோபாலச்சாரியாரால் வழங்கப்பட்டதாகும்.
- குருகுலவாசம் முடிந்த பிறகு ராஜீ சாஸ்திரிகள் , பராசரஸ்ம்ருதி, மாதவீய ஸ்ம்ருதி, வைத்தியநாத தீஷதயம், ஸ்ரீமத் அப்பய்ய தீஷதரின் கிரந்தங்கள், வேதாந்த தேசிகரின் கிரந்தங்கள் முதலியவைகளைக் கவனமாக ஆராய்ந்தார். பிருஉறத் ஜாதகம், காலாம்ருதம், காவ்யபிரகாசம், காவீயதர்ப்பணம் முதலிய மற்ற நூல்களையும் ஆராய்ந்து தெளிந்தார்.
- ராஜீ சாஸ்திரிகள் வசித்து வந்த மன்னார்குடி கீழ்முதல் தெரு கதவு இலக்கம் 82 என்ற வீடு, தற்போது சங்கரமடமாகத் திகழ்கிறது.
- ராஜீ சாஸ்திரிகள் தினமும் அதிகாலை மூன்று மணிக்குப் படுக்கையிலிருந்து எழுந்து சீடர்கள் பின்தொடர கோபிநாதன் குளத்திற்கு ஸ்நானம் செய்யச் செல்வார். அப்போது அவருடைய சீடர்கள் பின்னே செல்வார்கள். போகும்போது பாடங்களை சந்தேக நிவாத்தி என்ற வகையில் சொல்லித் தருவார்.
- ராஜீ சாஸ்திரிகள் காலையில் செய்ய வேண்டிய வைதீககாரியங்கள், ஜபங்கள் முடிந்தபிறகு, எட்டு மணி முதல் 11 மணி வரை பாடம் நடத்துவார். பிற்பகலில் தர்க்கம், வியாகரணம், மீமாம்சா, அலங்காரம் ஆகிய பாடங்கள் குழுக்களாக நடைபெறும்.
- மறுபடியும் சூர்யாஸ்தமன வேளையில் ஸந்தியா வந்தனம் செய்வதற்கு ராஜீ சாஸ்திரிகள் குளத்திற்குச் செல்வார். ஓய்வு நேரம் கிடைக்கும் பொழுது மகாபாரதத்தைப் படிக்கச் சொல்லிக் கேட்பார். இவரைத் தேடி தரிசிக்கும்

எண்ணத்துடன வேகு தூரத்திலிருந்து புலவர்களும், வித்வான்களும் வருவது வழக்கமாகிப்போனது.

- ராமநாதபுரம், புதுக்கோட்டை, மைசூர் ஆகிய மன்னர்களின் தர்பார்களிலும் வித்வத் ஸ்தலங்களிலும் ராஜீ சாஸ்திரிகளுக்கு முதன்மை இடம் உண்டு. அங்கு ஆண்டுதோறும் சென்ற இவரால் இம்மன்னர்கள் கௌரவம் பெற்றனர்.
- ராஜீ சாஸ்திரிகளிடம் பாடம் பயில வருபவர்கள் அனேகமாக (நம்நாட்டில் எல்லா மாநிலங்களிலிருந்தும்) முதல்தெருவின் எல்லா வீட்டின் திண்ணைகளிலும் ஓய்வுபெற உறங்குவது வழக்கம். இவர்கள் தங்கும் வீட்டின் சொந்தக்காரர்கள், அவர்களுக்கு அன்னமிடுவதையே தங்களின் புனிதமான செயலாகக் கருதினார். அதனால் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் இந்த முதல் தெரு, தங்கிப்படிக்கும் பல்கலைக்கழகமாகவே இருந்தது என்றால் அது மிகையாகாது.



- ராஜீ சாஸ்திரிகளுக்கு அப்போதைய ஆங்கில அரசு மிக உயர்ந்த விருதான “மகோமகோபாத்யாய” என்ற விருமை அளிக்க முன்வந்தபொழுது இவர் அதனை ஏற்க சென்னை போக மறுத்துவிட்டார். ஆனால், அரசு அதனை இவருக்கு தஞ்சை மாவட்ட ஆட்சியரிடம் தந்து, சகல மரியாதைகளுடன் இவருடைய வீட்டிலேயே கொண்டு போய்த் தரும்படி பணித்தது.
- ராஜீ சாஸ்திரிகள் வாழ்ந்த காலத்தில் மன்னார்குடியிலிருந்த பின்லே கல்லூரியின் முதல்வர் ஒரு வெள்ளைக்காரர்.

அவரும் இவரிடம் சில சமயங்களில் மதம் தொடர்பான சந்கேங்களைக் கேட்க வருவாராம்.

- தற்போதை காஞ்சி காமகோடி மடத்தின் முக்தியடைந்த பரமாச்சார்யாரின் குருவிற்கு இவர் குரு. அவ்விதமே சிருங்கேரி மடத்தின் பூர்வீக பீடங்களுக்கும் இவர் குருவாக விளங்கினார்.
- ராஜீ சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட நூல்கள் 1. நியாயேந்து சேகரம் 2. ஸ்த்வித்யாவிலாசம் 3. ஸாமாருத்ர பாஷ்ணம் 4. சிவமஉறிம கலிகா ஸ்துதி பாஷ்யம் 5. ஸ்ரீராஜகோபல மஉறநித்வை.
- ஸ்ரீராஜகோபல மகோத்சவ அனுக்ரமானிகா என்பதில் 18 நாள் உற்சவத்தை 23 சுலோகங்களால் அற்புதமாக வர்ணித்து ராஜீ சாஸ்திரிகள் எழுதியுள்ளார். இதிலிருந்து இவர் மன்னார்குடியில் இருந்த நாட்களில் உற்சவ காலங்களில் இரண்டு வேளைகளிலும் சுவாமி தரிசனம் செய்ய வந்தார் என்று தெரிகறது.
- ராஜீ சாஸ்திரிகள் நிர்வாணம் அடைந்தபோது எல்லா சமயத்தைச் சார்ந்தவர்களும் அந்திம ஊர்வலத்தில் கலந்து கொண்டதும். அப்போதிருந்த பின்லே கல்லூரி முதல்வர், மயானம் வரை வெறுங்காலுடன் நடந்து வந்து இவருக்கு புகழஞ்சலி செய்ததும் மறக்கவோ, மறுக்கவோ முடியாதவைகளாகும்.
- நெம்மேலி என்பது நெம்மில, நெம்மேலி என்று பாலவாறு பகுதி மக்களால் அ8ழக்கப்படுகிறது.
- நெம்மேலி என்ற சொல் நெம்மிலி என்ற சொல்லின் திரபாக இருத்தல் வேண்டும்.
- நெல் மிகுதியாக விளைந்த இடம் என்றிருந்த ஊர்ப்பெயர் பின் வேறுவிதமாக மாறியுள்ளது.
- மன்னார்குடி வட்டத்தில் கோட்டூர் சரகத்தில் ஒரு நெம்மேலியும், உள்ளிக்கோட்டை சரகத்தில் ஒரு நெம்மேலியும் உள்ளன.
- பெருவாழ்வு தந்த பெருமாள் சதுர்வேதி மங்கலம் என்பது பெரு வாழ்ந்தான் முழுப் பெயராகும்.

- மன்னார்குடி வட்டத்தில் சாதிப் பெயரால் வழங்கும் ஊர்கள் – நட்டுவனார் - நட்டுவன் கோயில் பத்து . ராயர் –மழவராய நல்லூர். எடையர் – எடையர்நத்தம்.
- மன்னார்குடி வட்டத்தில் முழுவதும் பெயரால் வழங்கும் ஊர்கள். 1. பெருகவாழ்ந்தான் 2. மண்ணுக்கு முண்டான்.
- மன்னார்குடி வட்டத்தில் வரலாற்றுப் பெயரால் வழங்கும் ஊர்கள். 1. குலமாணிக்கம் 2. மழவராயநல்லூர் 3. விக்கரபாண்டியம்
- மன்னார்குடி வட்டத்தில் சாதாரண மக்களால் வழங்கும் ஊர்கள். 1. குமரபுரம் 2. பிஷ்வா தோட்டம் 3. மோகனராவ் தோட்டம்.

- அறிவு ஜீவிகளை உண்டாக்கும் கல்வித் தொழிற்சாலையாக மன்னை நகரின் மையப்பகுதியில் தேசிய உயர்நிலைப்பள்ளி அமைந்துள்ளது. மன்னார்குடி தேசிய உயர்நிலைப்பள்ளி என்றால் மாநிலம் அறிந்த பள்ளி என்றாகியது.



- 1899 ஆம் ஆண்டல் 100 மாணவர்களுடன் தொடங்கி, நூற்றாண்டைக் கடந்து இன்று 4000 மாணவர்களுக்கு மேல் கொண்டுள்ளது மன்னார்குடி தேசிய உயர்நிலைப்பள்ளி.
- சமதாய நலன்கருதி சீரிய நோக்குடன் திருவாளர்கள் T,S.சிங்காரவேலு உடையார் மற்றும் S. ராமதுரை அய்யர் இவர்களின் கூட்டு முயற்சியால் தொடங்கப்பட்ட

பாரம்பரியமிக்க மன்னார்குடி தேசிய உயர்நிலைப் பள்ளியாகும்.

- திருவாளர்கள் N.S.வெங்கட்ரா அய்யர், ஸ்ரீநிவாசன் ஆகியோரது சீரிய முயற்சி மற்றும் கடின உழைப்பால உயர்ந்தது மன்னார்குடி தேசிய உயர்நிலைப்பள்ளி.
- அமரர் ஏ.வி. விஸ்வநாத சாஸ்திரி (ஆந்திர உயர்நீதிமன்ற நீதபதி), டாக்கர் என். ஆர். சீனிவாசன் (பிரபல விஞ்ஞானி) எஸ. ராஜகோபல அய்யங்கார் (உச்சநீதிமன்ற நீதிபதி) அமதரர் சி.ஆர். சீனிவாசன் (சுதேசமித்திரன் நாளிதழ் ஆசிரியர்), மன்னை நாராயணசாமி முதலியோர் மன்னார்குடி தேசிய உயர்நிலைப்பள்ளியின் பழைய மாணவர்கள்.
- மன்னார்குடி வட்டத்தில் இராமன தீச்சுரம் என்ற பண்டைய பெயர் இப்போது திருராமேசுரம் என்று அழைக்கப்பட்டு வருகிறது.
- மன்னார்குடி வட்டத்தில் களப்பாழ என்ற பண்டைய பெயர் இப்போது (கோயில் களப்பாள்) என்று அழைக்கப்பட்டு வருகிறது.
- மன்னார்குடி வட்டத்தில் பாம்புணி என்பது சாசனப்பெயர். பாம்புணி, பாதளீச்சுரம், பாதாள் என்ற பண்டைய பெயர் இப்போது பாமணி என்று அழைக்கப்பட்டு வருகிறது.
- மன்னார்குடி வட்டத்தில் இராசராசச் சதுர்வேதி மங்கலம் என்ற பண்டைய பெயர் இப்போது மன்னார்குடி என்று அழைக்கப்பட்டு வருகிறது.

- மன்னார்குடி வட்டத்தில் மதனஞ்சேரிச் சதுர்வேதிமங்கலம் என்ற பண்டைய பெயர் இப்போது மகமாதேவப்பட்டணம் என்று அழைக்கப்பட்டு வருகிறது

  - மன்னார்குடி வட்டத்தில் உவச்சேரி என்ற பண்டைய பெயர் இப்போது ஓவர்சேரி என்று அழைக்கப்பட்டு வருகிறது.
  -
  - எஸ்.ரெங்கநாதன், (காவிரி நடுவர் மன்றம் அமையக் காரணமாக இருந்தவர், காகாஜி (சுதந்திர்ப போராட்ட வீரர்), டாக்டர் கண்ணையன் (விவசாய பல்கலைக் கழக துணைவேந்தர்), கோபால்சாமி, ஐ.ஏ.எஸ. (தேர்தல் கமிஷனர்) முதலியோர் மன்னார்குடி தேசிய உயர்நிலைப்பள்ளியின் பழைய மாணவர்கள்.

- திரு கே. சந்தானம் (முன்னாள் மத்திய அமைச்சர்), கே.எஸ். பக்தவச்சலம் (சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி), டி.எஸ் ராகவன் (முன்னாள் இந்தியன் வங்கி தலைவர்), முன்னாள் டி.ஜி.பி. வைகுந்த் ஐ.பி.எஸ்., முதலியோர் மன்னார்குடி தேசிய உயர்நிலைப்பள்ளியின் பழைய மாணவர்கள்.
- . ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கூட இந்த மண்ணும் அதைச் சார்ந்த மக்களும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்பதை புரிந்து கொண்டதினால்தான் -- 1866-லேயே எங்கள் மன்னார்குடி நகராட்சியாக அறிவிக்கப்பட்டது. தற்போது 150-ஆண்டு கால பெருமை கொண்ட நகராட்சியாக திகழ்ந்து வருகிறது எங்கள் மன்னார்குடி.
- 2. சீன செப்பு காசுகள் ஆதாரத்தினால் பண்டைய காலம் தொட்டே அயல்நாட்டில் இந்த ஊர் மக்கள் வர்த்தகம் செய்தனர் என்பதற்கான அத்தாட்சி உடைய ஊர் தான் மன்னார்குடி.
- 3. இந்தியாவிலேயே முதல் நடமாடும் நூலகத்தை அமைத்த ஊர் மன்னார்குடி.
- 4. சுதந்திரம் பெறுவதற்கு முன்பே 1907-ல் தேசிய கொடியை செயின் ஜார்ஜ் கோட்டையில் (தற்போதைய தலைமைச் செயலகம்) ஏற்றிய ஆர்யா (எ) பாஷியம் பிறந்த சேரன்குளத்தை தன்னகத்தே கொண்டது மன்னார்குடி.
- 1908-ல் தலைமறைவு வாழ்க்கை நடத்திய பாரதியாருக்கு தஞ்சமளித்த மேலநாகையை உள்ளடக்கிய ஊர் மன்னார்குடி.
- *"பாருக்குள்ளே நல்லநாடு எங்கள் பாரதநாடு"*என்ற பாடலை பாரதியார் எழுதிய ஊர் மன்னார்குடி.
- 1927-ல் மகாத்மா காந்தி கதர் ஆடை பிரச்சாரத்திற்காக வந்தபோது விரும்பி தங்கிய ஊர் மன்னார்குடி..
- 1930-ல் காந்தி உப்புசத்தியாகிரகத்தில் தண்டியாத்திரை மேற்கொண்டபோது ராஜாஜி தலைமையிலான உப்புசத்தியாகிரக குழுவினர் தங்கிச்சென்ற ஊர் மன்னார்குடி..
- சுதந்திரப்போராட்டக்காலத்தில் 1942-ம் ஆண்டு நடைபெற்ற ஆகஸ்ட் புரட்சியில் ரயில்வே நிலையம், நகராட்சி அலுவலகம், கோட்டாச்சியர் அலுவலகத்தை தாக்கியதால் ஒட்டுமொத்த மக்களும் தண்டத்தொகை கட்டி சுதந்திர உணர்வை வெளிப்படுத்திய ஊர் மன்னார்குடி..

- சுதந்திர தமிழ்நாடு கேட்டு 1959-ல் தந்தை பெரியார் முதல் மாநாட்டை நடத்திய ஊர் மன்னார்குடி.
- காங்கிரஸ் மாநாட்டில் தலித்துகள் முன்வரிசையில் அமர்ந்து சாப்பிட்டதற்காக ஏற்பட்ட பிணக்கில் தந்தை பெரியார் வெகுண்டெழுந்து வழக்கு தொடர்ந்த வரலாற்று சிறப்பு மிக்க சம்பவம் நடைபெற்ற நீடாமங்கலம் அமைந்துள்ள தொகுதி மன்னார்குடி.
- . ஆங்கிலேயேர் ஆட்சிக்காலத்திலேயே முதல் உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்ற முதல் இந்தியர் முத்துசாமி அய்யர் பிறந்த உச்சவாடி என்ற கிராமம் அமைந்த ஒன்றியம் மன்னார்குடி.
- தமிழகத்தில் முதன் முதலில் விவசாய சங்கத்தை தோழர் சீனிவாசராவ் நிறுவிய தென்பரை கிராமத்தை உள்ளடக்கிய தொகுதி மன்னார்குடி.
- தந்தை பெரியார் தன் வாழ்நாளில் இறுதியாக ஆலய நுழைவுப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்த ராஜகோபாலசாமி கோவில் அமைந்த ஊர் மன்னார்குடி.
- பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்களை நான் விட்ட பணியை தம்பி தொடர்வான் என அடையாளங்காட்டிச் சென்ற வரலாற்று சிறப்புமிக்க சம்பவம் நிகழ்ந்த பொதுக்கூட்டம் நடைபெற்ற ஊர் மன்னார்குடி.
- தஞ்சை பெரியார் மன்னை நாராயணசாமி வாழ்ந்து மறைந்த ஊர் மன்னார்குடி.
- காவிரி போராட்டத்தின் மையப்புள்ளியாக விளங்கி கர்நாடகத்திற்கு இன்றளவும் சிம்ம சொப்பனமாக திகழ்கின்ற ஊர் மன்னார்குடி.
- சோழர்காலம் தொடங்கி நாயக்கர் காலம் வரை ஆண்ட மன்னர்களால் கட்டப்பட்ட ராஜகோபாலசாமி கோவில் அமைந்த ஊர் மன்னார்குடி.
- வேத ஆகமத்தில் கைதேர்ந்து ஆங்கிலேயர்களே வியந்த ராஜூ சாஸ்த்திரிகள் என்ற மன்னார்குடி பெரியவாள் பிறந்த ஊர் மன்னார்குடி.
- இந்திய தலைமை தேர்தல் ஆணையராக இருந்த கோபால்சாமியின் சொந்த ஊர் மன்னார்குடி.

- ராணுவத் தளபதியாக பதவி வகித்த பத்மநாபன் பிறந்த சேரன்குளத்தை உள்ளடக்கிய ஊர் மன்னார்குடி.
- கோபால்சாமி தென்கொண்டார் இந்திரா காந்தியை அழைத்து வந்து காங்கிரஸ் கட்சி மாநாடு நடத்திய ஊர் மன்னார்குடி. ..
- உவமைக்கவிஞர் சுரதா பிறந்த பழையனூரை உள்ளடக்கிய ஒன்றியம் மன்னார்குடி.
- மன்னை நாராயணசாமி அமைச்சராகப் பணியாற்றியபோது மன்னார்குடியில் குடிநீர்மேல் நிலைத் தொட்டியும், பாமணி உர ஆலையையும், அரசினர் ராஜகோபலாசாமி கலைக் கல்லூரியையும் உருவாக்கினார்.
- மன்னை நாராயணசாமி பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் மிகவும் ஈடுபாடு உள்ளவர். ஒரத்த நாட்டில் பாவேந்தர் தமிழ் இய்கக மாநாட்டை 1982ல் நடத்தினார். தனது 75 வயதில் மரணமடைந்தார்.
- மன்னார்குடி வட்டத்தில் தற்போது 13 க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகளும் நான்கு தொழிற்பயிற்சி நிலையங்களும், முன்று கலைக்கல்லூரிகளும், மூன்று ஆசிரியர் பயிற்சி பள்ளிகளும், மூன்று உறாட்டல் மேனேஜ்மெண்ட் கல்லூரிகளும், மூன்று பாரா மெடிக்கல் கல்லூரிகளும், பல ஆரம்பப் பள்ளிகளும், இரண்டு வேத பாடசாலைகளும் செயல்பட்டு வருகின்றன.
- மன்னை வட்டத்தில் மொத்த மக்கள் தொகையில் ஐம்பது விழுக்காட்டினர் கல்வியறிவு பெற்றுள்ளனர்.
- இந்தியாவின் முதல் முதியோர் கல்வி இயக்கம் மன்னார்குடியில் துவங்கா் பெறுவதற்கு 1925 இல் சென்னையில் தொடக்கவிழா நடைபெற்றது. மன்னையில் வாழந்த சஞ்சீவிகுளம் திரு எஸ்.வி. கனகசபைப்பிள்ளை அவர்கள் தனது சொந்த செலவில் இத்திட்டத்தை தொடங்கினார்.
- தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி நகரத்தில் 1927 ஆம் ஆண்டிலேயே முதியோர் கல்வி இயக்கம் முழுவீச்சில் நடைபெற்றது.
- கனகசபைபிள்ளையவர்கள் மன்னையைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கல்வியறிவில்லாத மக்களுக்கு கல்வியறிவினை எளிமையாக ஏற்படுத்த, ஒரு

முன்மாதிரியான பாடநூலை உருவாக்கினார். இப்புத்தகத்திற்கு “முதியோர் கல்வி நூல்” என்று பெயரிடப்பட்டதற்கு, தமிழக அரசு ஒப்புதல் அளித்தது.

- நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள கல்வி நிறுவனங்கள் அங்கிருந்து, மன்னார்குடி கனகசபை பிள்ளை உருவாக்கிய முதியோர் கல்வி நூல்” புத்தகங்களை பெற்று கல்வி கற்பித்து வந்தனர்.
- மன்னார்குடி கௌமார குருகுலத்தில் இலவசமாக கல்வி கற்பிக்கப்பட்டது. வேளாண்மைக் காலம் முடிந்த பிறகு வருகின்ற ஆறு மாத காலத்தில் வகுப்புகள் நடைபெற்றன.
- மன்னார்குடி கௌமார குருகுலத்தில் கற்பிக்கப்பட்ட பாடங்கள் 1. மதம், ஒழுக்கம் 2. கிரமப் பொருளாதாரம் 3. சுகாதாரம் 4. தமிழ்மொழி 5. வரலாறு புவியியல் 6. அரசியல் நிர்வாகம் 7. இயற்பியல்.
- மன்னார்குடி கௌமார குருகுலத்தில் ஒரு குழுவிற்கு 8 வலிபர்கள் விகிதம் வேளாண்மைக் கல்விக்காக 18 லிருந்து 25 வரை வயதுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவுக்கும் பத்து ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது.
- மன்னார்குடி கௌமார குருகுலத்தில் - கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியிலிருந்த ஓய்வு பெற்ற முதலர்வர் ஒருவரை அழைத்து வந்து மாணவர்களுக்கு கரும்பு சாகுபடி செய்யும் முறைகள் கற்பிக்கப்பட்டது.
- மன்னார்குடி கௌமார குருகுலத்தில் - மாணவர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்களில் வேலை செய்தனர். ஒவ்வொரு மாணவரும் ரூ.500 செலுத்தினர். கரும்பு அறுவடை முடிந்த பிறகு கிடைத்த தொதகை மாணவர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது.
- தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதியோர் கல்வி- மன்னார்குடி கௌமார குருகுலம் தனது மாணவர்களை எந்தவித வேறுபாடுமின்றி நடத்தி வந்தது. தாழ்த்தப்பட்ட இன மாணவர்களுக்கு வகுப்புகள் நடக்கும் காலங்களில் இலவசமாக உணவு வழங்கப்பட்டது.
- மன்னார்குடி கௌமார குருகுலத்தில் - வாலிபர் கல்வி பாடத்திட்டத்திற்காக எட்டு பாடநூல்கள் மாணவர்களுக்காக அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

- முதியோர் கலவிப் பணிகள் கௌமார குருகுலத்தில் சேர்ந்து படிப்பவர்களுக்கு மட்டும் அமைந்தால் போதாது என்று எண்ணி, மன்னார்குடி நகரத்தைச் சுற்றி உள்ள கிராமங்களுக்கும் கல்வி அறிவினைப் பரப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு, இரண்டு மாடுகள் இழுக்கக்கூடிய வண்டி ஒன்று செய்து, அதில் நூல்கள், கல்வியறிவிற்கான ஒளிப்படவில்லைகள், இசை ஒலித்தட்டுக்கள், அறிவியல் படங்கள் ஆகிய பொருட்களையும் வைத்து நிர்வகிக்கும்படியான ஒரு நடமாடும் நூலக வண்டி தயாரிக்கப்பட்டது.
- முதல் நடமாடும் நூலக வண்டியை- 18.10.1931 அன்று மன்னார்குடியில் நூலகத் தந்தை எஸ்.ஆர். ரங்கநாதன் துவக்கி வைத்தார்.
- முதல் நடமாடும் நூலக வண்டி மன்னார்குடி நகரத்திலிருந்து புறப்பட்டு மேலவாசல் சிற்றூருக்குச் சென்றது.
- மன்னார்குடியிலிருந்து பன்னிரண்டு மைல் சுற்றளவிலிருந்த 95 சிற்றூர்களுக்கு நடமாடும் நூலக வண்டி சென்று வந்தது. இந்திய நாட்டிலேயே முதல் நடமாடும் நூலகம் இதுதான் என்பது மன்னார்குடி நகரத்திற்கு பெருமை சேர்க்கக் கூடியதாகும்.
- நடமாடும் நூலகத்தில் உள்ள ஒவ்வொரு நூலிலும் நூல்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற குறிப்பு அச்சடிக்கப்பட்டு முதல் பக்கத்தில் ஒட்டப்பட்டிருந்தது.
- மன்னை வட்டத்தில் உள்ள ஒவ்வொரு சிற்றூரிலும் சிலர் பொறுப்பேற்று நடமாடும் நூலக வண்டியிலிருந்து தேவையான நூல்களைக் கடனாகப் பெற்று அடுத்த முறை நூலக வண்டி வரும்போது அவற்றைத் திரும்பக் கொடுத்து புதிதாக வேறு நூல்களைப் பெற்று வந்தனர்.
- மன்னார்குடி முதல் நடமாடும் நூலக வண்டியில் 1931ம் ஆண்டு துவக்க நிலையில் 280 நூல்கள; இருந்தன. 1933ல் நூல்களின் எண்ணிக்கை 221 ஆக உயர்ந்தது.
- மன்னார்குடி முதல் நடமாடும் நூலகம் ஒரு வருடத்திற்கு 275 முறை சிற்றூர்களுக்கு சென்று வந்தது. ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 3782 நூல்கள் கொடுத்து வாங்கப்பட்டன.

- மன்னார்குடி கௌமார குருகுலத்தின் சிற்பான கல்வித் தொண்டு மற்றும் நடமாடும் நூலகத் தொண்டு ஆகியவை உலகெங்கும் பல அறிஞர்களாலும் போற்றப்பட்டது.
- மன்னார்குடி முதல் நடமாடும் நூலகத்தின் மாதிரி வணடி இன்றும் தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.
- தற்சமயம் மன்னார்குடியில் அரசு கிளை நூலகம் ஒன்றும், கோட்டூர் அரங்கசாமி நூல் நிலையமும் உள்ளன. **கல்கிப்பூங்கா நகராட்சி அலுவலக வாசக சாலையும், நகராட்சி படிப்பகமும் உள்ளன. வட்டம் முழுதும பதினாறு அரசு கிளை நூலகங்கள் உள்ளன.**
- **மன்னார்குடியில் இந்தியாவின் முதல் முதியோர் கல்வித்திட்டமும் முதல் நடமாடும் நூலகமும் செயல்பட்டன என்பது மன்னார்குடிக்கு மேன்மேலும் பெருமை சேர்க்கும் பணிகளாகும்.**
- கோட்டூர் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த ரங்கசாமி முதலியார் தனது சொத்துக்கள் முழுவதையும பல்வேறு அறச் செயல்களுக்காக 10.01.1907 ஆம் நாளன்று உயில் எழுதி வைத்தார். மாணவர்களுக்கான இலவசக் கல்வி, இலவச உணவு, இருப்பிடம், போன்ற காரியங்களுக்காக தனித்தனியாக உயில் எழுதி வைத்தார். இந்த அசற் செயல்களுள் ஒன்றே கோட்டூர் அரங்கசாமி நூல் நிலையம்.
- தமிழகத்தில் மிகச் சிறந்த தொன்மையான நூலகங்களில் இதுவும் ஒன்று. இந்நூலகத்தின் முதல் அச்சடிக்கப்பட்ட டேட்லாக் 1938லும் வெளியிடப்பட்டது. இதில் 50533 தமிழுபுத்தகங்களும், 729 சமஸ்கிருத புத்தகங்களும், 274 ஆங்கிலப் புத்தகங்களும் சேர்த்து 6058 புத்தகங்கள் இருந்தன. 30.6.1973 ல் 10ஈ216 புத்தகங்களாக இருந்தது.
- K.R.M..எஸ்டேட் என்றழைக்கப்படும் இநத் அறக்கட்டளை தற்சமயம், தமிக அரசின் தஞ்சாவூர் நீதிபதியின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.
- விவிசாய நகரமான மன்னார்குடியைச் சுற்றி பெரிய தொழிற்சாலைகள ஏதும் கிடையாது. ஆனால் வடபாதிமங்கலம் கரும்கு ஆலையும், (தற்சமயம்

செயல்படவில்லை) பாமனி உரத் தொழிற்சாலையும் ஊரின் அருகே செயல்பட்டு வருகிறது.

- தஞ்சை மராட்டியர்களின் காலத்தில் மன்னார்குடியில் மிகப்பெரிய காகிதத் தொழிற்சாலை ஒன்று இருந்துள்ளதை வரலாறு கூகிறது.
- தஞ்சை அரண்மனைக்குத் தேவைப்படும் காகிதம் முழுவதும் மனார்குடி காகிதப்பட்டரைத் தெருவிலிருந்து தான் சென்றதாகப் பல ஆவணங்கள் குறிக்கின்றன.
- 250 ஆண்டுகளுக்கு முற்பட்ட மன்னை நகரத்துக் காகிதங்கள் இன்றும் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் ஏட்டுச் சுவடிகளாககத் திழ்வதைக் காணலாம். இவை மிக நேர்த்தியாகவும், உயரிய தன்மை உடையதாகவும் விளங்குவதால், இத் தயாரிப்பின் தொழில் நுட்பம் பற்றி மேலை நாட்டவர் பலர் வியக்கின்றனர்.
- இவ்வட்டத்தில் உள்ள நிலக்கழார்களுக்கு நிறைய விளைச்சல் நிலங்கள் உள்ளன. இங்கு 70 விழுக்காட்டினர் விவசாய வருவாயின் வாயிலாகவே வாழ்ந்து வருகின்ற்னர்.
- இவ்வட்டத்தில் சிலர் வணிகர்களாகவும், அரசு ஊழியர்களாகவும். இரும்பு, நெசவுத் தொழிலை மேற்கொண்டவர்களாகவும், பெரும்பான்மையோர் சிறு தொழில்களான, பாய் பின்னுதல், தையல் தொழில் செய்தல், மட்பாண்டங்கள் செய்தல், சிற்பங்கள் உருவாக்குதல், கயிறு திரித்தல், மீன் பிடித்தல் போன்ற தொழில்களை மேற்கொண்டவர்களாகவும் உள்ளனர்.
- மன்னார்குடி வட்டம் முழுதும் விவசாயத் தொழிலின் உபதொழிலாக மாடு வளர்ப்பு முக்கிய தொழிலாக அமைந்துள்ளது.
- இவ்வட்டத்தில் உள்ள மக்களின் ஒத்துழைப்பால் 22.8.1938 ஆம் அண்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் ஒன்று தொடங்கப்பட்டு மிகச் சிற்பாக இன்று வரை செயல்பட்டு வருகிறது.
- இவ்வட்டம் முழுதும் 36,779 உறுப்பினர்களிடம் 160 கறவை மையங்கள் மூலம் நாள் தோறும் 4,785 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. தஞ்சாவூர், சென்னை போன்ற இடங்களுக்கும் இங்கிருந்து பால் விற்பனை

செய்ப்படுகிறது. இச்சங்கத்தில் 208 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகம். பால் அளவுகுறைவு.

- திரட்டுப் பால் காய்ச்சப் பயன்படுத்தப்பட்டு வந்த 120 சேர் பால் கொள்ளளவுடைய பாத்திரம் இன்றும் மன்னார்குடி பெரிய கோயிலில் உள்ளனது. யாது காரணத்தினாலோ காசி வரை பெருமையாகப் பேசப்பட்டு வந்த இந்த திரட்டுப் பால் காய்ச்சும் மரபு பின்னாளில் நின்று விட்டது.
- மன்னார்குடி அண்ணாமலைநாதர் கோயிலில் உள்ள மூன்றாம் ராஜேந்திரனது கல்வெட்டு மூலம் சாரிகைக் கோட்டை மன்னார்குடியில் இருந்ததை அறியமுடிகிறது. இக்கோட்டை ராஜாதிராஜச சதுர்வேதி மங்கலத்தின் மேல் பிழாகையாக அதாவது, ஊரின் மேற்கில் அமைந்த பகுதியாக இருந்ததாக இக்கல்வெட்டு கூறுகிறது.
- வியாபாரப் பொருள்களையும், சரக்குப் பொதிகைகளையும் கழுதை மீதும், வண்டிகளின்மீதும் ஏற்றி வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும் வணிகக் கூட்டத்திற்கு சாரிகை என்று பெயரிடப்பட்டிருந்தது.
- தற்காலத்தில் பலசரக்குகளை “மளிகை” என்றும் அவை வியாபாரம் செய்யும் கடைகளை மளிகைக்கடை என்றும் அழைக்கிறோம். இந்த மளிகை என்ற சொல்லே அந்தக் காலத்தில் மடிகை என்றைழக்கப்பட்டது. இத்தகைய மடிகைகள் மன்னார்குடி சாரிகைக் கோட்டையினுள் இருந்துள்ளது.
- மன்னை அண்ணாமலைநாதர்கோயில் பகுதியே சோழர் காலத்தில் சாரிகைக் கோட்டையாக இருந்தது என்பது தெரியவருகிறது
- கர்நாடக மாநிலத்தில் உள்ள (கைகோல்)உறகோல் என்ற இடத்தை தாயகமாகக் கொண்டு 500 உறுப்பினர்களுடன் இந்த வணிகக் கூட்டம் தொடங்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு நானாதேசிகன் என்றும் திசை ஆயிரத்து ஐநூற்றுவர் என்றும் ஐய்யபொழில் திசையாயிரத்து ஐநூற்றுவர் ஆகிய பெயர்களும் உண்டு. இவர்களுக்கு புவனேகவீரன், விக்ரமபாண்டியன் என்ற இரு மடிகைகள் மன்னார்குடியில் இருந்துள்ளன.

- மன்னார்குடிக்கு மிளகு, பாக்கு, துணிவகைகள் கொண்டு வரப்பட்டு, அதற்கு வரிவசூல் செய்த விபரங்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.
- மன்னார்குடி சாரிகைக் கோட்டையினுள் நுழைகின்ற சரக்கு வண்டிகளில் கொண்டு வரப்படும் மிளகு மூட்டை ஒன்றுக்கு உழக்கு மிளகு வீதமும் புடவைக் கட்டு (நெய்யப்பட்ட துணிமுட்டை) ஒன்றுக்கு மாதாணிப்பணம் வீதமும் வசூலித்து, அதைக்கொண்டு இறைவனுக்கு கறியமுது படைத்திட வேண்டும் என்று - சாரிகைக் கோட்டையில் விக்ரமபாண்டியன் மடிகைகளில் உள்ள திசை பதினென் விஷயத்தார்கள் 13.9.1289ல் ஜெயங்கொண்ட நாதர் கோயில் இருக்கும் திருமண மண்டபத்தில் ஒன்று கூடி முடிவு செய்தனர்.
- மன்னார்குடி சாரிகைக் கோட்டையினுள் நுழையாமல் புறவழியாகச் செல்லும் சரக்குப் பொதிகள்மீதும்கூட வரிவிதிப்பு செய்துள்ளனர்.
- பாக்கு மூட்டை ஒன்றுக்கு ஒரு உழக்கு பாக்கு வீதம் வசூலித்து அதைக்கொண்டு இறைவனுக்கு அமுதுபடி படைத்திட முடிவு செய்ததாக கி.பி.31.12.1288 ஜெயங்கொண்ட நாதர்கோயில் கல்வெட்டு கூறுகிறது.
- வணிக கூட்டத்தினர் மன்னார்குடி கோயில்களுக்கு தாரளமாக கொடைகள் வழங்கியுள்ளனர். இந்நிகழ்ச்சியைக் கல்வெட்டு தன்மக சைம காரியம் எனக் குறிப்பிடுகிறது. சமயம் என்பது வணிகக் குழுவைக் குறிப்பதாகும்.
- மன்னார்குடி வட்டத்தைச் சேர்ந்த 128 கிராம ◌மக்களின் தேவைகளையும் மன்னார்குடியில் இருக்கும் வணிகர்கள் **பூர்த்தி செய்கின்றனர். செட்டியார். நாடார்கள், முகமதியார்கள் போன்றவர்களே பெரும்பாலும் வணிகர்களாக இருக்கின்றனர்.**
- **மன்னார்குடி பேரூந்து நிலையத்திற்கு எதிரே** உழவர் சந்தை ஒன்று, **வடு**வூர் சாலையில் காளவாக்ககரையில் காய்கனி சந்தை மற்றும் சிறிய மீன் அங்காடி, தாமரைக்குளம் வடகரையில் பெரிய மீன் அங்காடி என்று தினசரி சந்தை வகையில் ஐந்தும், வாரச் சந்தை ஒன்றும் இயங்கி வருகின்றன.

- மன்னார்குடிக்கும் சீனாவுக்கும் வணிகத் தொடர்பு நடைப்பெற்றுள்ளதை உறுதிப் படுத்துவதற்கு தஞ்சை மாட்டத்தில் கிடைத்த கி.மு.2 ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த சீன நாணயங்கள் அமைந்துள்ளன.
- பட்டுக்கோட்டை வட்டம் ஓலயக்குன்னம் என்ற ஊரில் கிடைத்த புதையலில் 323 நாணயங்களும், மன்னார்குடி வட்டம் தளிக்கோட்டை கிராமத்தில் 1822 நாணயங்களும் கிடைத்துள்ளன.
- நாணயங்கள்தான் வணிகத்திற்கு பரிமாற்றுக் குறியீடாகும். இங்குள்ள ஸ்ரீராஜகோபால் பெயரில் நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- மன்னர்கள் தங்களது தனித்தன்மையை வெளிக்காட்டும் காசுகளை வெளியிட்டதைப் போன்றே மன்னார்குடியை ஆண்ட விஜயராகவ நாயக்கரும் காசுகளை வெளியிட்டுள்ளார். தெலுங்கில் பொறிக்கப் பெற்ற காசுகளும் கிடைத்துள்ளன.
- இராஜகோபலனின் திருவுருவத்தோடு தன் உருவத்தையு பொறித்துத் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் விஸயராகவ நாயக்கரின் காசுகள் வெளிவந்தன.
- இராஜகோபலச் சக்கரம் எனும் பெயரில் வெளிவந்த காசுகள் பற்றிக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், இலக்கியங்கள், மெக்கன்சியின் சேகரிப்பு ஓலைகைள் ஆகியவற்றில் பல குறிப்புகள் காணப்பெறுகின்றன.
- விஜயராகவ நாயக்கருக்குப் பின்பு மராட்டிய மன்னர்களான சகஜி, பிரதாப சிம்மன் ஆகியோர் காலம் வரை ராஜகோபாலச்சக்கர காசுகள் சோழ நாட்டில் புழக்கத்தில் இருந்தன என்பதை மன்னார்குடி கல்வெட்டுகள் கூறுகின்றன.
- இராஜகோபால சக்கரம் எனும் விஜயராகவ நாயக்கரின் காசுகளில் இரண்டு வகையான செப்புக் காசுகள் பல தஞ்சை மாவட்டத்தில் கிடைத்துள்ளன.
- இராஜகோபால சக்கரம் எனும் விஜயராகவ நாயக்கரின் காசுகளில் முதல் வகை காசுகளில் - ஒருபுறம் இராஜகோபலன் செண்டேந்தி நிற்கப் பின்புறம்

விஜயராகவ நாயக்கர் தன் உடைவாளை இடக் கரத்தால் உடலோடு அழுத்திப் பிடித்தவண்ணம் இருகரங்களையும் கூப்பி வணங்கும் கோலத்தில் காணப் பெறுகின்றார். சிற்பங்களில் உள்ளது போன்றே கொண்டை ஒருபுறம் சாய்ந்த நிலையில் காணப்பெறுகின்றது.

- இராஜகோபால சக்கரம் எனும் விஜயராகவ நாயக்கரின் காசுகளில் முதல் வகை காசுகளில் - இரண்டாம் வகை காசுகள் திருமாலின் சக்கராயுதம் வடிக்கப் பெற்று அதன் நடுவே செண்டேந்திய கோபாலனின் திருவுரும் காணப்பெறுகின்றது. மறுபுறம் சாய்ந்த கொண்டையுடன் கூடிய விஜயராகவ நாயக்கர் தன் தோளில் உடைவாளை அணைத்த வண்ணம் நிற்கும் காட்சி உள்ளது.
- இராஜகோபால சக்கரம் எனும் விஜயராகவ நாயக்கரின் காசுகளில் ஒருபுறம் கோபாலன் நடனமாடும் கோலமும் (நர்த்தன கண்ணன்) பின்புறம் திருமாலின் சக்கரம் நான்குபுற தீபச் சுடர்களோடு காணப் பெறுகின்றன. சில காசுகளில் கோபாலன் காளியன் எனும் பாம்பின் மீதுநடனமிடும் கோலமம் உள்ளது.
- தஞ்சை மராட்டிய மன்னன் பிரதாபசிங் காலத்தில் அளிக்கப் பெற்ற நான்கு சாசனங்கள் அடங்கிய இரண்டு செப்பேடுகள் கடைத்ததுள்ளன. இவை மன்னார்குடி “ஜெயங்காண்டநாதசுவாமி கோயிலுக்கு அளிக்கப் பெற்ற அறக்கட்டளைகளை விவரிப்பதாகும்.
- தஞ்சையை அண்டு சகஜி மன்னரின் அவைக் களப்புலவாகத் திகழ்ந்தவர் வாசுதேவகவி என்பவராவார். இவர் எழுதியுள்ள பதங்களில் ஒன்றில் இராஜகோபலச் சக்கரம் பற்றிய சுவையான செய்தி கூறப் பெற்றுள்ளது.
- சாலைப் போக்குவரத்தின் எல்லாப் பெரிய கிராமங்களையும் ஒன்றுடன் ஒன்று இணைக்கிறது. இவ்வூர் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை ஒன்றுமில்லை. இந்நகர எல்லைக்குள் செல்லும் நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 11.245 கிலோ மீட்டராகும்.
- நீலகண்ட சாஸ்திரியார் எழுதி 1983 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள “தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்” என்ற

புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகளை பார்க்க முடிகிறது.

- மெய். சந்திரசேகரன் எழுதி 1987 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள “சோழர்கள்” என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகளை பார்க்க முடிகிறது.
- தா. கிருட்டிணமூர்த்தி எழுதி 2001 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள “கல்வெட்டுகளில் ஊரும் பேரும் “ என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகளை பார்க்க முடிகிறது.
- ரா.பி.சேதுப்பிள்ளை எழுதியுள்ள “தமிழக ஊரும் பேரும் “ என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகளை பார்க்க முடிகிறது
- நா. எத்திராஜ எழுதியுள்ள “நெஞ்சை அள்ளும் தஞ்சை “ என்ற புத்தகத்தில் மன்னார்குடியைப் பற்றிய செய்திகளை பார்க்க முடிகிறது.
- தமிழ்நாடு இயல்இசை நாடக மன்றம் வெளியிட்டுள்ள “யார் எவர்” என்ற புத்தகத்தில் மன்னார்குடி பிரசவித்த கலைஞர்களைப் பற்றிய செய்திகளை பார்க்க முடிகிறது..
- து.ப. நடனம் எழுதி வெளியிட்டுள்ள “தியாக தீபங்கள்” என்ற புத்தகத்தில் மன்னார்குடி பிரசவித்த படைப்பாளர்களை பற்றிய விபரங்களை பார்க்க முடிகிறது..
- து.ப. நடனம் எழுதி வெளியிட்டுள்ள “தியாக தீபங்கள்” என்ற புத்தகத்தில் மன்னார்குடி சுதந்திரப் போராட்ட தியாகிகள் பெயர்களையும் அவர்களைப் பற்றிய செய்திகளை பார்க்க முடிகிறது.
- மன்னார்குடி வட்டம் என்றாலே (பழைய ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம்) கழித்தோடும் காவிரி, பச்சைப் பசேல் என்று பயிர்கள் தலையசைக்கும் வயல்கள், வானுயர்ந்த கோபுரங்கள், ரசனையான மனிதர்கள், சங்கீதம், பரத நாட்டியம், டிகிரி காபி, தாட்டு இலை சாப்பாடு, வெற்றிலை சீவல் --- இப்படி நினைவலைகள் விரிந்து கொண்டே போகும்.
- மன்னார்குடியைப் பொறுத்தவரை வாழுகின்ற எல்லா இனத்தவர்களும தங்களின் இன, பிரிவு வேற்றுமைகளை மறந்து சகோதரத்துவம் நிலவும் வகையில் ஒற்றுமையுடன்

வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் மன்னை மண்ணின் மாண்புக்கு எடுத்துக்காட்டாக வாழ்கின்றனர்.

